# தீனதயாளு

## ஒரு அருமையான தமிழ் நாவல்

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

இஃது

**பண்டித ச. ம. நடேச சாஸ்திரி**

அவர்களால் இயற்றப்பட்டது

ஐந்தாம் பதிப்பு.

சென்னை:

**சுதேசமித்திரன் ஆபீஸ்.**

1922

காபிரைட் ]

[விலை அணு 12.

# முகவுரை

எத்தனையோ பெயர்கள் தமிழ்ப் பாஷையில் எத்தனையோ கதைகள் எழுதியிருக்கின்றார்கள். "ஒரே ஒரு ஊரில் ஒரு புருஷன் பெண்ஜாதி" என்று ஆயிரங் கதைகள் இதுவரையில் எழுதப்பட்டிருக்கின்றன. கதை என்ற பாக்கியம் நமது ஜம்பூத்வீபத்திற்றான் முதல் முதல் உற்பவித்தது என்று ஆங்கிலேய சரித்திரக்காரர்களும் எழுதியிருக்கின்றார்கள். பஞ்ச தந்திரத்துக் கொப்பான கதை உலகத்திலேயே கிடையாதென்பதும், அப்பஞ்ச தந்திரத்தை முதல் முதல் நூஷீர்வான் என்ற ஸஸ்ஸேனிய சக்கிரவர்த்தி 6-வது நூற்றாண்டில் ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்க்கக் கட்டளையிட்டு அவ்வாறு செய்து முடித்து அவர் செய்த பேருதவியின் மூலமாய் பெர்ஷியா, அரேபியா, ஐரோப்பா தேசத்து நாடுகள் இவைகளெல்லாம் நமது தேசத்தின் கதைகளைத் தெரிந்து கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றன வென்பதும் சித்தாந்தம். இவ்வளவு தூரம் நாம் சொன்னதின் கருத்து நமது நாடு கதைகளின் களஞ்சியம் என்பதாம். நம்முன் வழங்கும் கதாஸரித்சாகரம் என்ற கிரந்தம் போன்ற கிரந்தம் இவ்வுலகத்திலேயே கிடையாது.

இவ்வாறிருக்க நாம் ஓர் புதுகதையை இப்பொழுது நமது நாட்டாருக்குப் பிரசுரம் பண்ணியனுப்புவது "கொல்லன் உலையில் ஊசி விற்பது போலாம்" என்று ஜனங்கள் எண்ணலாம். ஆனாலவ்வாறன்று நமது முயற்சி. ஆங்கிலேய பாஷையில் ஆயிரக்கணக்காக மாதந்தோறும் நாவல் என்று பெயரிட்டுள்ள கதைகள் எழுதப்படுகின்றன. நமது தேசத்தார்கள் "நாவல், நாவல் என்று சொல்லுகின்றார்களே! அதில் என்ன அவ்வளவு ருசி. அதுவும் ஒரு கதை தானே!" என்று இங்கிலீஷ் படிப்பவர்களைக் கேட்பார்கள். இவ்வாறு இங்கிலீஷில் அப்பியாசமில்லாத நமது நாட்டார்கள் நாவல் என்பது இவ்வாறிருக்கலாம் என்பதை ஒருவாறறிந்துகொள்ளும்

பொருட்டு நாம் நமது நாட்டார்களுடைய நண்பன் (சுதேச மித்திரன்) என்ற பெயரை வகித்திருக்கின்றோமாகையால் தமிழில் ஓர் நாவல் எழுதிப் பிரசித்தம் செய்கின்றோம். "நாவல்" என்பதின் பதார்த்தம் "புதுமை" என்பதாம். அவ்வாறே இக்கிரந்தம் புதிய நடையில் எழுதப்பட்டிருக்கும் கதையாகின்றபடியால் "நாவல்" என்ற பெயர் இதற்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. நமது தீனதயாளு தான் தமிழில் முதல் நாவல். இதை நமது நண்பர்கள் அபிமானத்துடன் அங்கீகரிக்கும் நோக்கத்தைக் கண்டு கொண்டதும் இவ்வாறு பல நாவல்கள் பிரசித்தம் பண்ண சித்தமாக விருக்கின்றோம்.

ஆற்காடு,
18—10—1902 } ச. ம. நடேச சாஸ்திரி.

புதிய ப்திப்பு வெளியாய் விட்டது

## திக்கற்ற இரு குழந்தைகள்.

இந்த நாவல் பெரியதாயும் வாசிக்கும்போது மனக்கிளர்ச்சியுண்டாகக் கூடியதாயுமுள்ளது. படிக்கச்சுவை மிகுந்து மகளிர் வாழ்க்கையிற் படிப்போர் யாவருக்கும் அனுதாபமும் ஒற்றுமையுணர்ச்சியும் விளையும்படி செய்கின்றது. இது யாவருக்கும் விளங்கும் எளிய நடையை உடையது. படிக்கப் படிக்க மேன்மேல் மனதைக் கவரும் இனிய கதைப்போக்கையும் நன்கறிந்து கொள்ளலாம். விலை ரூ. 1—8.

## தலையணை மந்திரோபதேசம்.

இது ஒரு குடும்பத்தின் இரகஸ்யம். அனுபவம் செறிந்த நூல். யாவரும் படிக்கததக்க எளிய நடை. விலை ரூ. 1.

மானேஜர், சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.

# தீனதயாளு

## 1. தந்தி சமாசாரக் குழப்பம்.

> "வருந்து முயிர் ஒன்பான்வாயிலுடம்பிற்
> பொருந்துத லூனே புதுமை."

என்ன சங்கதியோ ஏதோ, தெரியவில்லையே. அம்மா, ஜானகி! குழந்தை இப்பொழுதுதான் சாப்பிட்டு விட்டு கச்சேரிக்குப் போனான். நான் அவன் சாப்பிட்ட இலையைக்கூட எடுக்கவில்லை. இதற்குள் ஒரு சேவகன் ஐயருக்கு தந்தி வந்திருக்கிறது என்று ஒரு தந்தி கொண்டு வந்தான். ஐயர் கச்சேரிக்குப் போயிருக்கிறார் என்று சொன்னேன். அவன் தந்தியைக் கச்சேரிக்கு எடுத்துக் கொண்டு போய்விட்டான். தண்டாயுதபாணி! ஒன்றுமில்லாமல் இருக்கவேண்டுமே! எனக்கு ஒன்றும் செய்யத் தோன்றவில்லையே! நான் என்ன செய்வேன் ஜானகி! மங்கலியப் பெண்டுகளா! என்வயிற்றில் நீங்கள் பால் வார்க்கவேண்டும். போனதடவை அந்த கடன்காரிக்குத் திவசம் நடந்த உடனே மங்கலியப் பெண்டுகளுக்கு இடு இடு என்று சொன்னேனே. கொஞ்சம் புத்தி மயங்கிப்போய் உடனே இடத் தவறினேனே, என் குழந்தையைக் காப்பாற்றுங்கள், மங்கலியப் பெண்டுகளா!

ஜானகி—என் அம்மா தாயு! நீங்கள் வருத்தப்படுகிறீர்கள் அதற்கென்ன? போனதடவை மங்கலியப் பெண்டுகளுக்கு இடத் தவறினால் நாளை வெள்ளிக்கிழமை 10 ரூபாவுக்கு ஒரு புடவை வாங்கி 4-பெண்டுகளுக்குச் சொல்லி பெண்டுகளிட்டு ஒரு ஏழை சுமங்கிலிக்குக் கொடுத்தால் போயிற்று. நல்லது, என் வீணாய்

விசாரப்படுகிறீர்கள்? உங்கள் நல்ல குணத்திற்கும் உங்கள் ந்தை நல்ல குணத்திற்கும் ஒரு நாளும் ஒரு குறைவும் வரப் டாது. புருஷர்களுக்குள் எவ்வளவோ காரியங்களிருக்கும். எ னத்திற்காகத் தந்தி வந்ததோ என்னவோ. ஏன் வீணாய் அலற்று கிறீர்கள். பயப்படாதேயுங்கள்.

தாயு—இல்லை யம்மா, தந்தி என்றால் என் அடி வயிறு குழம்பு கிறது. அந்தக் கட்டையில் போவானை கறுப்புச் சட்டையும் தோல் பட்டையுமாய்க் கண்டபோதே என் கண்களுக்கு யமதூதன் போலிருக்கிறதே! இன்றைய தினம் யார் முகம் விழித்தேனோ! போயிற்று, குடி முழுகிப்போயிற்று! அதோ வந்து விட்டானே என் குழந்தை. முகத்தில் ஈ ஆடவில்லையே.

அடா டா டா! என்று சொல்லி ஜானகியை விட்டு மறைந்து தாயு தன் வீட்டுப்பக்கமாக ஓடினாள். ஜானகியும் என்னவோ ஏதோ என்று கொல்லைப்பக்கமாக தாயுவின் வீடு வந்து சேர்ந்தாள். இதற்குள் கச்சேரியிலிருந்து தாயுவின் தம்பிமகனான தீனதயாளு வும் வீடு வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும் தாயு, என்னடா அப்பா என் குழந்தாய், என்ன சங்கதி? ஊரில் யாருக்கு என்ன உடம்பு, சொல்லு சொல்லு, என்று வெகு பரபரப்புடன் கேட்டாள். அடுத்த வீட்டுக் கந்தசாமி இந்தப் பரபரப்பான சத்தத்தைக் கேட் கும் முன்னமேயே தந்தி வந்ததைப் பார்த்திருந்தபடியால் தீன தயாளுவின் பின்னேயே வந்து அவனை விட்டுச் சொற்பம் ஒதுங்கி நின்று அவன் முகக்குறியை உற்றுப்பார்த்து அவன் வாயிலிருந்து என்ன வரப்போகின்றதென்று எதிர்ப்பார்த்தவனாக நின்றான்.

இவ்விருவரும் இந்த நிலைமையில் ஒரு நிமிஷந்தானிருந்தார்கள் என்றாலும் இவ்விருவருடைய முகத்தை உற்றுப் பார்க்கின்றவனுக் கே வித்தியாசம் விளங்கும். தீனதயாளுவின் முகம் ஏதோ தாங்கக் கூடாத துக்கத்தால் தத்தளித்துப் பரிதபித்துக் குன்றிக் குறுகி யிருந்தது. உலகத்திலுள்ள சகல வஸ்துக்களையுமிழந்தவன் துக் கம், கண்ணாடியில் பிரதிபிம்பிப்பதுபோல், அவன் வதனத்தில் விளங்கிற்று. வெகு சிரமப்பட்டு துக்கத்தை ஒருவாறு அடக்க முயன்று முடியாதவன்போல் அவன் கண்களிலிருந்து கண்ணீர்

வரத்தொடங்கிற்று. கந்தசாமிக்கோ கபடதுக்கம். அயல்வீட்டுச் சம்பந்தத்தினுல் மரியாதைக்குத் துக்கங்கேட்க வந்த ஜாடையும் வேண்டுமென்று தனது சினேகிதனுடைய முகக்குறிக்குச் சரியாகத் தன் முகத்தை வைத்துக்கொண்டாற்போல் அவன் முகம் காட்டிற்று. ஒருகால் நேரில் தனது முகத்தைக் காட்டினுல் எங்கு தான் யதார்த்தமாய்த் துக்கிக்கிறவனல்லன் என்று வெளியாய் விடுமோ என்பதாகச் சொற்பம் தன் முகத்தை மறைத்து வைத்துக் கொண்டிருந்தான். தாயு, என்னப்பா! என்ன சங்கதி என்று பரபரப்பாய்க் கேட்க, தீனதயாளு, ஒன்றும் சொல்லத் தெரியாதவனுய் கண்ணுங் கண்ணீருமாகத் தன் சட்டைப்பையிலிருந்த தந்தியைக் கந்தன் கையில் எடுத்துக்கொடுத்தான்.

தாயு—என்னடா ! கந்தா! படியடா!

கந்தன்—(தனக்குள்ளேயே தந்தியைப படித்துப் பார்த்துக் கோண்டு) ஒன்றுமில்லை தாயு, விசாரப்படவேண்டாம். இவ்வளவு தானு?

தாயு—அடே என்னடா கந்தா ஒன்றுமில்லை என்கின்றுயே. என் குழந்தை முகத்தில் ஈயாடவில்லையே. (கந்தன் கவனியாதவன் போல்)

கந்தன்—நல்லது இந்தத் தந்தி வருவதற்குமுன் உன் தந்தைக்கு உடம்பு சௌக்கியமில்லை என்று கடிதம் ஏதாவது வந்திருக்கின்றதா? வந்திருந்தால் என்னிடம் சொல்லியிருப்பாயே. அன்றன்று சமாசாரம் என்னிடம் சொல்லாமலிராயே. அப்படி ஒன்றும் இதுவரையில் இல்லைப் போலிருக்கின்றதே. நன்றுயிருக்கிறது, ஏன் வீணில் விசனப்படுகின்றுய். தந்தியிற்றுன் பயத்திற்கு என்ன இடமிருக்கிறது. போடா பைத்தியக்காரா! உனக்கு ஸ்வாமி ஒருநாளும் குறைவு பண்ணமாட்டார். அவருக்கு ஒரு நாளும் இம்மாதிரி கதி வராது. அவர் சிவபூஜை ஒன்று போதுமே, அவரை ரக்ஷிக்க.

தாயு:—அடே கந்தா !என்னடா சிறுபிள்ளைத் தனமாய்ப்பேசுகின்றுய். தந்தி வந்திருக்கவாவது, பயப்படாதே பயப்படாதே

என்கின்றாய்! அந்தத் தந்தி எப்படி அடித்திருக்கிறது, சொல்லித் தொலையடா?

கந்தன்:—அடி! போ நீ! பைத்தியக்காரி! தந்தியில் என்ன இருக்கிறது. வேண்டுமானால் ஒவ்வொரு எழுத்தாய் அருத்தம் சொல்லுகிறேன், கேள். ஏன் உனக்கு வீண் பைத்தியம். இந்த தந்தியில் ஒன்றும் பயமேயில்லை. இதில் என்ன சொல்லுகிறது என்கிறாயோ, கேள்; "காலில் முள்தைத்து அஸாத்ய வீக்கம். மூன்று நாளாக ஜ்வரம். அன்னாகாரம் சரியாய் இறங்கவில்லை. பயப்படாதே. ஜாதக ரீதியாய் மாரகதசை யிது இல்லை. ஆனால் உன்னைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலிருக்கிறது உடனே புறப் பட்டு வா."

தீனதயாளு—என்ன கந்தா! நீ கூட பயமொன்றுமில்லை என்கி றாயே! இதைவிடப் பயம் வேறுவேண்டுமா. என் தகப்பனார் ஒரு நாள் கீழே படுத்து இருந்ததேயில்லை. மூன்று நாள் ஜ்வரமாம். அன்னாகாரம் இறங்கவில்லையாம். இதற்காக ஒருவர் தந்தியடிப் பாரா. உன்னைப் பார்க்கவேண்டும், என்று ஒருவர் தந்தியடிக்கவா வது! நான் நம்பவேயில்லை. இதில் ஏதோ மோசம் இருக்கிறது. நான் உயிருடன் என் தகப்பனாரைப் பார்ப்பேனா.

தாயு—உயிரிருக்கும்பொழுதே என் குழந்தை அவன் தந்தை யைப் பார்க்குமா. குடிமுழுகிப் போயிற்று! அட டாடா!

கந்தன்—வீண் விசனப்படவேண்டாம். ஸ்வாமி ஒருபொழு தும் உங்களுக்குக் குறைவு செய்யமாட்டார். ஜாதகம் பொய்யா காது. மாரக தசை யிப்பொழுது இல்லை என்று தந்தியிலேயே கண்டிருக்கிறது. மனத்தை தைரியப் படுத்திக்கொண்டு ஆபீஸில் உத்தரவு வாங்கிக்கொண்டு வா. வண்டி முதலியவைகளைப் பற்றி நீ யோசிக்க வேண்டாம். நான் திட்டஞ்செய்து வைக்கிறேன். நீ முதல் முதலில் ஆபீஸ்போய் சீக்கிரம் விந்து சேர்.

தீனதயாளு—எல்லா ஆபத்தும் ஏககாலத்தில் வரும் என்பது நிச்சயம். பழைய துரையிருந்தா லிப்பொழுதே கச்சேரிக்குக்கூட

போகாமல் ஒரு கடிதம் எழுதிவிட்டுப் புறப்பட்டுவிடுவேன். இப்பொழுது வந்திருக்கிறவனோ புது துரை. அவனுக்கு பிராமணனைக் கண்டால், அதாவது நெற்றியில் விபூதி அல்லது சந்தனத்தைக் கண்டால், அவன் முகம் கடுவம்பூனை போலாகிறது. அன்றியும் இப்பொழுது ஆபீஸில் வருஷாந்தரக் கணக்கு முடிவுவேலை. இந்த மாதத்தில் எவ்விதமாய் எனக்கு உத்தரவு கொடுப்பானோ தெரியவில்லை.

கந்தன்—இந்தச் சமயத்திற்கு ஒருவரும் உத்தரவு இல்லை என்று சொல்லமாட்டார்கள். ஒரு வருஷத்திற்கு ஒருமாதம் உத்தரவு சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு உண்டு என்கிறார்களே; அப்படி உத்தரவு உனக்குக் கிடைக்காதா?

தீனதயாளு—சட்டத்தில் அப்படியிருக்கிறது நிச்சயந்தான். சட்டப்படி சரியாய் நடந்தால் மாதம் மும்மாரி பொழியாதா! உனக்கு லௌகிக நடவடிக்கை இன்னும் தெரியாது. எப்படியிருந்தபோதிலும் யஜமான் தயவிருந்தாற்றான் எல்லாம் நடக்கும். எனக்கு நியாயமாய் 3 மாதத்திய உத்தரவு வாங்கப் பாத்தியமிருக்கிறது. கொடுக்கிறவர் யார். யஜமான் விசுவாஸமில்லாமல் 3-நாழிகைகூட உத்தரவு கிடைக்காதே.

கந்தன்—உன்னைப்போல் பயந்தவனாகவிருந்தால் ஒன்றுந்தான் கிடைக்காது. அந்த இரண்டெழுத்தை எனக்குக் கொடு. நானிந்த ஊரைத் தென்வடக்காய் மாற்றிவிடுகிறேன். பி. ஏ., பி. ஏ. என்று எல்லாரும் புஸ்தகத்தைப் படித்து பரீக்ஷை கொடுத்துவிட்டால் மட்டுமாய் விட்டதா !

தாயு—நன்றாயிருக்கிறது. ஆபத்து சம்பத்து இல்லையா. உழைக்கிற காலமெல்லாம் நாய்போல் உழைத்து விட்டு தகப்பன் சாகக்கிடக்கின்றான் என்றால் உத்தரவு கிடைக்காதா. நல்ல உத்தியோகம்.

தீனதயாளு—உனக்கு என்ன தெரியும் அத்தை. நீ உன் காரியத்தைப் பார்.

தாயு—காரியத்தைத்தான் பார்க்கிறேன்! காரியம் கிடக்கட்டும். எனக்கு ஒன்றும் தெரியவில்லையே! இப்பொழுது என்ன செய்கிறது.

தீனதயாளு—எல்லாவற்றிற்கும் ஈசனிருக்கிறார். ஆபீஸ் போய்வருகிறேன்.

தாயு—இந்தா, பழனியாண்டவன் விபூதி. கொஞ்சம் நெற்றியிலிட்டுக்கொண்டு போ. அவர் மகிமையால் ஒன்றும் குறைவுவரமாட்டாது.

தீனதயாளு—ஆண்டவன் விபூதியை யணிந்தால் அப்புறம் ஆக்ஷேபமுமுண்டோ. அவர் அருளின்றி அணுவுமசையாது.

என்று சொல்லி ஆபீசுக்குத் தீனதயாளு புறப்பட்டான். அங்கு அவன் உத்தேசித்தபடியே உத்தரவு கிடைப்பது வெகு அசாத்யமாக விருந்தது. கடைசியாய் 5-நாளைக்கு சிறு உத்திரவு ஒன்று வாங்கிக்கொண்டு வீடுவந்து சேர்ந்தான். விட்டது விட்டபடி எல்லாவற்றையும் போட்டுவிட்டுத் தாயுவும் அவள் மருமகனும் தங்களூருக்கு அன்று மாலையிலேயே புறப்பட்டு விட்டார்கள். அவர்களிருந்த இடம் பகாசுரகிரி என்ற ஒரு மலைப்பிரதேசம். அவ்விடமிருந்து 40-மையில் கட்டைவண்டியில் சென்று அப்புறம் ரயில் வண்டி ஏறி அவர்கள் தங்களூர் போய்ச் சேரவேண்டும். முற்றிலும் அவர்களுக்கு இரண்டு நாள் பிரயாணம் கடந்துதான் ஊர் வந்து சேரலாம். இவ்வளவுதூரமிங்கு இவர்களைப்பற்றி சொல்லிவிட்டு இவர்கள் யார் என்பதை அடுத்த அத்தியாயத்தில் இவர்கள் வழி நடக்கையில் சற்று விவரமாக நாம் விசாரிப்போம்.

## 2. தீனதயாளு யார்

"அன்பின் வழிய துயிர்நிலை; அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு."

தீனதயாளு என்பவன் 25, 26-வயதுள்ள ஒரு சிறுவன். இக்கலிகாலத்தில் தப்பிப்பிறந்தவன். அவனுடைய இளமைப் பருவத்தில் அவன் தன் தாயை இழந்து தாயில்லாப் பிள்ளையாகவே வளர்ந்தவன் என்றாலும் அவனுடைய நற்குண நற்செய்கைகளால் அவனுடன் பழகிய ஒவ்வொரு பெண்பிள்ளைகளும், அவனுக்கு ஒரு தாயாக நின்று அவனை ஆதரித்து வந்தார்கள். இவர்களுள் தாயு என்ற தீனதயாளுவின் அத்தை இவனை 5-வயது முதல் தோளில் தூக்கியும், ஒருநாளைக்கு 5-தடவை அன்னம் ஊட்டியும், பால் புகட்டியும், வளர்த்தவளாகையால் அவள் தீனதயாளுவினிடம் விசேஷ விசுவாஸம் பாராட்டி வந்தாள். தீனதயாளுவின் தகப்பனார் தனது மூத்த சம்சாரம் தப்பின பிறகு மற்றொரு பெண்ணை மணந்தார். உலக வழக்கப்படி இளையாள் குமாரன் குமாரத்திகள்மேல் விசுவாஸம் பாராட்டி மூத்தாள் வயிற்றுப் பிள்ளையை அலக்ஷியம் செய்யாமல் அவர் தனது அன்பு முழுமையையும் தீனதயாளுவிடம் வைத்திருந்தார். ஒரு பிராணிக்குக் கூட வித்தியாசமில்லாமல் நடக்கப்பட்டவர். மூத்தாள் குமாரனை தீனதயாளுவிடம் விசுவாஸம் என்றதனால் இளையாளிடமும், அவள் குழந்தைகளிடமும் விசுவாஸக் குறைவு என்பது நம் கருத்தன்று. யாராரிடம் எவ்வெவ்மாதிரி அன்பு பாராட்ட வேண்டுமோ அவ்வவ் மாதிரி நடக்கப்பட்டவர். எல்லாரைக் காட்டிலும் அவர் தீனதயாளுவிடம் மிக்க அன்பு வைத்தவர். ஏனெனில் இனி உலகத்தில் அவ்வித அந்நியோந்நியமான தகப்பன் பிள்ளைகள் காண்பதரிது. தாயில்லாக் குழந்தை என்று தீனதயாளு அதிக கருணைக்கு பாத்திரனா யிருந்தபோதிலும் வெகு வினயமுள்ளவன். தன் தகப்பனார் முன்னின்று ஒருவார்த்தையாவது உரக்கப் பேசான். ஸதா

புஸ்தகமும் கையுமாக இருப்பான். ஒரு நிமிஷமாவது வீண்காலம் போக்கான். தகப்பனார் எள் என்பதற்கு முன்னர் எண்ணெய் என்னும் வண்ணமாய் நிற்பான். சிறுபிராயத்திலேயே சொற்பம் புத்திமானாகக் காணப்பட்டபடியால் தீனதயாளுவை அவன் தகப்பனார் தன்னிடம் வைத்துக்கொள்ளாமல் கும்பகோணத்திற்குப் படிப்பிற்கு அனுப்பிவிட்டார். அப்பொழுதும் அவன் கூடப்போயிருந்து அவனுக்குச் சமையல் செய்து போட்டவள் தாயுவே. தனது சொந்தப் பிள்ளையிடம் ஒரு தாய் எவ்வளவு விசுவாஸமாக விருப்பாளோ அதற்கு மேலாக தாயு தீனதயாளுவிட மிருப்பாள். ஒருநாள் சரியான காலத்தில் குழந்தை பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிவாராதிருந்தால் என்னவோ ஏதோ என்று விசாரப்படுவாள். அவனுடன் படிக்கும் மற்றப் பிள்ளைகள் வீடு சென்று என் குழந்தையைக் கண்டாயா என்பாள். "பாட்டி அவன் உபாத்தியாயர் வீடு போயிருக்கிறான். அஸ்தமித்து 1-நாழிகைக் கெல்லாம் வந்து விடுவான். விசாரப்படாதே" என்றாலும் அவனைக் காணும்வரையில் இவள் மனம் நிலைநிற்காது. குழந்தை உடம்புக்குத் தக்கபடி ஒரு நாள் வற்றல் குழம்பு, ஒருவேளை பருப்புக்குழம்பு சமையல் செய்வாள். குழந்தை படித்துவிட்டு உறங்கப்போகும் முன்னம் தாயு விழித்திருந்து கணத்தெண்ணெய் அவன் நெஞ்சுகனையவூற்றி விட்டுத்தான் தான் நித்திரை செய்வாள். எப்பொழுதும் குழந்தை குழந்தை என்று தீனதயாளுவைக் கூப்பிடுவாளே யல்லாமல் பெயர் சொல்லி அவள் அழையாள். இவனுக்கு வயது 25, 26 ஆனபோதிலும் குழந்தை என்று தான் அழைப்பாள்; இதைச் சில சமயத்தில் பெரியவர்கள் கேட்டுச் சிரிப்பார்கள். யார் என்ன சொன்னால் தான் இவளுக்கு என்ன நஷ்டம். அவனை எடுத்து வளர்த்த அபிமானம் இவளுக்கு அல்லவோ தெரியும். தீனதயாளுவும் படிப்பில் மேன்மேலும் விருத்தி அடைந்து அநேக பரீக்ஷைகளிலும் தேறித் தனது 20-வது வயதில் 25 ரூபாயுள்ள ஒரு உத்தியோகத்தில் அமர்ந்தான்.

இவன் பள்ளிக்கூடத்தில் படித்தகாலத்தில் விடுமுறை தோறும் தனது தந்தையிடம் வந்து 1-மாதகாலம் வசிப்பான். இவனுடைய தகப்பனாரும் இவனைக் குழந்தை யென்றே அழைப்பது

வழக்கம். குழந்தை வரப்போகிறான் கோடைலீவுக்கு, என்று கடிதம் வந்துவிட்டால் இவன் தகப்பனுருக்கு அவர் தேகமே ஒரு சுற்றுப் பருத்துவிடும். தன் பந்துக்கள் இஷ்டமித்திரர்கள் எல்லாரிடமும் அந்தக் கடிதத்தைக் காட்டுவார். கொல்லையில் பயிர்க் குழிபோடும் பைத்திய மிவருக்கு மிக்கவுண்டு. இளங்காய் வர்க்கங்களைக் குழந்தைக் கிருக்கட்டும் என்று நிறுத்திவைப்பார். அவன் வந்ததும் தந்தையை நமஸ்காரம்பண்ணி நின்றால் அம்மாதிரி செய்து அவன் எழுந்திருக்கும் முன்னம் அவனை ஒரு தடவை அவர் கட்டிக்கொள்ளுவார். அப்படிச் செய்யும் பொழுதே இத்தனை நாள் அவனைத் தீராதபடி விட்டுப் பிரிந்திருந்ததற்காக அவர் கண்களி லானந்தபாஷ்பம் ததும்பும். அவர் வெகு கோழை மனமுள்ளவர். உடனே தன் குமாரனைக் கொல்லைப் பக்கம் இட்டுக்கொண்டு போய் "பார்த்தாயா குழந்தாய், நீ வரப்போகிறாய் என்றே 10-நாளாக இந்த அவரை பந்தலில் ஒரு பூப்பிஞ்சுகூடப் பறியாமல் நிறுத்தி வைத்திருக்கிறேன். அடியே! யாரடி அங்கே இந்தா! குழந்தைக்கு இன்று அவரைக்காய் பறித்து பொரித்த குழம்பு பண்ணு, அந்த ஆள் மொச்சைக்காய் கொண்டுவந்தானு? அவனிடம் நமது ஊரில் யார் கொல்லையிலிருந்தாலும், சரி, கொஞ்சம் கொண்டுவா வென்று நேற்றைத்தினம் சொல்லி யிருந்தேனே" என்பார். உடனே 'அப்படியே ஆகட்டும், கொண்டுவந்து கொடுத்தான். 'ஆனால் வெகு கொஞ்சம்' என்ற மறுமொழி வரும். இதைக் கேட்டதும் அவர் தனது மகனைப்பார்த்து, இன்னும் இந்தவெளியில் மொச்சை நன்றாய்க் காய் பிடிக்கவில்லை. நல்லது நாளையதினம் புற்புலத்திற்கு சொல்லியனுப்பி ஒரு கூடைகாய் வரவழைக்கிறேன, என்பார். நல்லது முதலில் ஸ்நானஞ் செய்து சாப்பாட்டுக்குச் சித்தமாயிரு, அதற்குள் நான் பூஜையை முடிக்கிறேன். அப்புறம் மற்றச் சங்கதிகளைப்பற்றிப் பேசிக்கொள்வோம், என்பார். தன் குழந்தை குடல்வாட ஒரு நிமிஷமாவது சகியார். தீனதயாளு விடம் மாத்திரம் அவ்வளவு அதிக அன்பு என்று எண்ணவேண்டாம். எல்லாரிடமும் அவர் அதேவிதம். மகாதேவர் கோழை நெஞ்சர் என்பது, அந்த ஊரில் மாத்திர மன்று,எங்கும் பிரஸித்தம்.

மகாதேவர் என்பவர் தனது சிறுபருவத்தில் வெகு தேசங்களில் உத்தியோகம் பண்ணிப் பணம் சம்பாதித்தவர். ஆனால் அவர் ஸ்வபாவம் வரவு ஒன்றாக விருந்தால் செலவு மூன்று. அவரை யடுத்தவர்கள் அநேகர். வெகு உதாரி. ஒரு பிராணியாவது பசித்திருக்கக் காணப்பொறார். இரவோ, பகலோ, காடோ, நாடோ மகாதேவரிடம் குறைந்த பட்சம் பத்துப் பெயர்களாவது கூட உட்கார்ந்து புசிக்காத நாளேகிடையாது. சொற்பம் போஜனப் பிரியர் என்றே சொல்லலாம். நன்றாய் உப்பும் உறைப்புமாக இரண்டொரு காய்குழம்பு, ரசம் இவ்வளவாவது இல்லாமல் ஒரு காலும் புசியார். சிவபூஜா துரந்தரர். ஸர்க்கார் வேலை என்ன விருந்தாலும் சரி, சொந்த வேலை எப்படிப்போனாலும் சரி, காலத்தில் ஸ்நானஞ் செய்து, நித்யகர்மானுஷ்டானங்கள், சிவபூஜை இவைகளில் ஒரு அணுகூடத் தவறமாட்டார். மகாதேவர் ஒரு நாழிகை கச்சேரிக்கு வரவில்லை என்றால் அன்று வேலையில் பாதி நிற்கவேண்டியது தான். ஆயிரம் இரண்டாயிரம் சம்பளம் வாங்கும் துரைகள்கூட மகாதேவரைக் கேட்காமல் ஒரு காரியம் நடத்தமாட்டார்கள். ஏனெனில் அவ்வளவு தீர்க்காலோசனையும் வேலையில் பழக்கமும் மகாதேவருக்கு உண்டென்பது நாடறிந்த சங்கதி. அம்மாதிரி தான் அவர் செல்வாக்கும், கீர்த்தியும், வருமானமும், செலவும்; அவ்வளவுக்குங்காரணம் அவரது சிவபூஜை மகாத்மியம் என்றே ஜனங்கள் ஒரே வாக்காய்ச் சொல்லுவார்கள். கடைசியாய் வைதீகம் அதிகரிக்கவே அவர் இக்காலத்து உத்தியோகத்திற்கும் நம்பூஜைக்கும் சரிப்படாதென்று சீக்கிரமாக உபகாரசம்பளம் (பென்ஷன்) பெற்று சணற்கால் என்ற தன் பூர்வீகாளுடைய கிராமத்திற்கு வந்துவிட்டார். அவர் உபகார சம்பளம் பெற்றதற்கு மற்றொரு காரணமும் உண்டு. தன் மூத்த குமாரன் தீனதயாளு உத்தியோகத்தில் அமர்ந்துவிடவே இனி நமக்கு உத்தியோகம் எதற்கு. குமாரன் தலையெடுத்து விட்டான் என்ற எண்ணமும் மேலிட்டிருந்தது. இப்படிப் பட்டவர் உடம்பு அசௌக்கியமாயிருக்கிறார் என்று சமாசாரம் தந்தி மூலமா யறிந்து தான் தீனதயாளுவும் அவனது அத்தையும் பகாசுர மலையை விட்டு அவ்வளவு பரபரப்பாய்ப் புறப்பட்டனர்.

## 3. தீனதயாளு சணற்கால் சேர்ந்தது.

"இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்ட சிவனுஞ்செத்து விட்டனோ—முட்ட முட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவனுக் கன்னாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ".

தாயுவும் அவளுடைய மருமகனும் பகாசுரகிரியை விட்டுப் புறப்பட்டு 40 மைலிலிறங்கி அப்புறம் புகை வண்டி மார்க்கமாக மகாதேவரிருந்த சணற்கால் என்ற ஊருக்கு வரவேண்டியதாயிருந்தது. பகாசுரகிரியை இவர்கள் விட்டுப் புறப்பட்டது முதல் கோ என்று மழை சப்தமேகங்களுங் கூடி வருஷித்தாற் போல் வருஷித்துக் கொண்டிருந்தது. மலைத் தேசம், மழைபொழிந்தவுடன் காட்டு ஓடைகளும் ஆறுகளும் வெள் ளத்தால் நிரம்பும். இவர்கள் புறப்பட்டது முதல் ஒரேமழை. நான்கு பக்கங்களிலேயும் ஆறுகள் நிரம்பி ஓடின. வெட வெட வென்று குளிர் நடுக்க ஆரம்பித்தது. என்னசெய்வார்கள். ஒரு பக்கத்தில் தள்ளக்கூடாத துக்கம். ஒரு பக்கத்தில் அடிக்கும் மழைக்கோ கணக்கில்லை. சொட்டு சொட்டு என்று இவர்கள் உட் கார்ந்திருந்த வண்டி ஒழுக ஆரம்பித்தது. எவ்விதமாய் இரவுவழி தொலைந்து காலையில் ரயில் ஏறுவோம், எவ்விதமாய் மகாதேவரை உயிருடன் பார்ப்போம் என்று ஏங்கிவிட்டார்கள்.

தாயு:—நாம் போய்ச் சேருகின்றவரையில் ஒன்று மில்லாம லிருக்குமா? நல்ல உயிர் நாற்பது நாள்கிடக்கும் என்பார்களே. என் தம்பியை உயிருடன் பார்ப்பேனா. உன் தந்தையை அவன் உயி ருடனிருக்கும்போது பார்ப்பாயா?

தீனதயாளு—இனி விசாரப்பட்டு என்ன செய்கிறது. வழி நடந்துதானே தீரவேண்டும். எனக்கும் உனக்கு மிருக்கிற ஆவ லில் இப்படியே நம்மிருவரையும் யாராவது தூக்கிச் சணற்காலில் கொண்டுபோய் வைத்துவிட்டால் நலம். ஆனால் அது ஒரு பொழு

தும் முடியாதே. ஈசன் விட்ட வழிவிடுகிறார். நாம் என்ன செய்கிறது, அப்பா மட்டில் என்பேரில் வைத்திருக்கிற விசுவாஸத்திற்கு என்னைக் காணுமல் தன் பிராணனை விடமாட்டார்.

தாயு—அவன் நெஞ்சமும் வேகவேமாட்டாதே. என் குழந்தையைக் கண்டு ஒரு பேச்சாவது பேசிப் பிராணனை விட்டால் அவன் கட்டை வேகும். இல்லாவிட்டால் குறைக்கொள்ளிதானே.

தீனதயாளு—உலகத்தில் மனிதன் பிறக்கிறதும் இறக்கிறதும் சகஜம். தீராது வந்து விட்டால் நம்மால் செய்யப் போகிறது என்ன இருக்கிறது. ஆனாலினி அப்பாவைப்போல் பிராணி நான் எந்த ஜென்மத்தில் காணப்போகிறேன்.

தாயு—தகப்பனார் என்றால் எல்லோரும் தகப்பனாரா! தன் குழந்தைகள்மேல் ஈமொய்க்கச் சகிக்கமாட்டான் என் தம்பி. ஒவ்வொரு குழந்தையையும் கண்ணுக்குள் வைத்து இமையால் மூடியல்லவோ பாதுகாத்து வந்தான். இனி அதிகமாய்ச் சொல்ல என்னவிருக்கிறது. அவனோடு இந்தக் குடும்பமே குலைந்தது. இதுவரையில் ஏதோ கௌரவமாய் நடந்துவந்தது இனிமேல் குடித்தனம் தாறுமாறுதான்.

தீனதயாளு—அதேனம்மா அப்படி சொல்லுகின்றாய்? ஸ்வாமி தயவால் ஒரு நாளும் நமக்குக் கஷ்ட காலம் வரப்போகின்றதில்லை. தீராது வந்துவிட்டால் அதேனப்படி, குலைந்தது குடித்தனம் என்கிறாய்.

தாயு—அடா! குழந்தாய் உனக்கு ஒன்றும் தெரியாது. நீ ஒரு நாள்கூட ஊரிலிருந்தவனல்லன். நீ வெகு சாது; வெளுத்ததெல்லாம் பால், கறுத்ததெல்லாம் நீர் என்றிருக்கிறாய், அந்த மகானுபாவன் அவ்வளவு சிராயிந்த குடித்தனத்தை நடத்திக்கொண்டு வருகிறான். அவன் ஒன்றும் செய்யவேண்டாம். வாயிலில் உட்கார்ந்திருந்தால் போதுமே. வீடு முடிய கிடு கிடு என்று நடுங்குமே. இனி அந்த ஐம்புநாத புலத்தாள் ஒரு தூசு உன் கண்ணில் காட்டுவாளா. அவளை நீ என்ன என்றிருக்கிறாய்.

தீனதயாளு—அதென்ன அப்படி பேசுகின்றாய் அம்மா. இவ்வளவு பைத்தியக்காரி நீ என்று நான் எண்ணவில்லை. நீ சிற்றுத் தாளைப்பற்றி இவ்வளவு கெட்ட அபிப்பிராயம் வைத்திருப்பாய் என்று நானிதுவரையில் நம்பவேயில்லை.

தாயு—ஐயோ! குருடன் கண்ணைத்தானே வேண்டுகின்றான். எப்படியாவது அவள் சரியாகவிருந்து எப்பொழுதும்போல் இந்தக் குடும்பத்தை நடத்திவந்தால் கௌரவமாகத்தா னிருக்கும். உனக்கென்ன! நீ தலையெடுத்திருக்கின்றாய். புருஷன், அப்பொழுதுமில்லை இப்பொழுதுமில்லை என்பது போல் எங்கேயோ கண்ணுக்குத் தெரியாத நாடுகளில் உத்தியோகம் பண்ணுவாய். எங்களைப் போன்ற கிழங்கட்டைகளுக்கு ஆதரவு இனி யார்?

தீனதயாளு:—இது என்ன பைத்திய முனக்கு, இந்த உலகத்தில் யாரால் யாருக்கு என்ன நடக்கிறதென்று எண்ணுகிறாய். எல்லாம் ஈசன் செயல். அவன் அருளிருந்தால் எல்லாம் சரியாய் நடக்கும். யாரால் யாருக்கு என்ன ஆக இருக்கின்றது. சக்கரம் அறுக்கின்றது. கபாலம் ஏந்துகின்றது. மேலும் நானுள்ள வரையில் உனக்கு என்ன விசாரம்.

தாயு:—அடா என் கண்ணே! இப்படி உலக ரீதியே தெரியாமல் எல்லாம் ஒன்று போல் எண்ணி யிருக்கிறாயே. அடா! உன் பைத்தியக்காரத் தனத்திற்காவது உன் தகப்பன் உயிருடன் இருக்க வேண்டும்.

இம்மாதிரி பல விஷயமாய்ப் பேசிக் கொண்டு தீனதயாளுவும் தாயுவும் இரவுப் பொழுதைத் தூங்கியும் தூங்காமலும் போக்கிக் காலையில் மலையை விட்டு இறங்கி விட்டார்கள். வழி நடந்து தானே தீரவேண்டும். வயிறும் ஏதாவது போட்டால் தானே கேட்கும். எந்தத் துக்கம் எப்படி யிருப்பினும் ஆகாரம் உண்டே தீரவேண்டுமல்லவா.

தாயு:—அப்பா குழந்தாய், ஒரு வழி தொலைந்தது. இன்னும் ஒரு இராத்திரி ஒரு பகல் புகை வண்டியில் போகங்கவேண்டும்.

நேற்று இரவெல்லாம் கட்டை வண்டியில் விறைத்தாய் விட்டது. உனக்கு என்ன இஷ்டமாயிருக்கும். இரண்டு எலுமிச்சம் பழம் வாங்கி வந்து அந்த ரசத்தால் சாதம் பிசைந்து வைக்கட்டுமா.

தீனதயாளு:—இதற்கெல்லாம் என்னைத் தொந்தரை செய்ய வேண்டுமா. ஏதோ ஒரு சாதம் பிசைந்து கொள்..

பகாசுர கிரியை விட்டு 40-மைல் கீழ் இறங்கி அப்புறம் கோட்டுப் பாளையம் என்ற ஊரிலிவர்கள் வந்து ரயிலேற வேண்டும். கோட்டுப் பாளையத்திலிருந்து ஒரு இரவு ஒரு பகல் ரயில் மார்க்கமாய் வழி நடந்து பெருஞ் சீரகவல்லி வந்து சேர வேண்டும். அவ்விடம் ரயிலை விட்டுக் கீழே யிறங்கி 5, 6-நாழிகை வழி நடந்து சணற்கால் வந்து சேர வேண்டும்.

இவ்விருவரும் என்னென்னவோ பேசிக் கொண்டு பெருஞ் சீரகவல்லி வரையில் வந்து சேர்ந்து விட்டார்கள். அங்கு ரயிலை விட்டு இறங்கினதும் யாராவது சணற்காலி லிருந்து ரயிலேற வந்திருக்கிறார்களா, அவர்களைக் கேட்டால் நமது வீட்டுச் சமாசாரம் தெரியும், என்று ஆவலுடன் எதிர் பார்ப்பார்கள். அங்கு ஒருவரும் நிற்கக் காணோம். எல்லாம் ஈசன் விட்டவழி என்று ரயில் சாவடியை விட்டு வெளியே வந்து ஒரு கட்டை வண்டி வைத்துக் கொண்டு சணற்காலை நோக்கிப் பிரயாணமானார்கள்.

நமக்கு அறிமுகமான ஒருவனாவது வழியில் வரமாட்டானா என்று ரஸ்தாவைக் கண்கொட்டாமல் பார்ப்பார்கள். சணற்காலில்லாமல் அதற்கடுத்த வம்பில் என்ற ஊர் சாஸ்திரி ஒருவன் தன் தலையின்மேல் மடிசஞ்சி வைத்து வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும்

தாயு:—ஐயா! உங்களைத் தான் கூப்பிடுகிறேன். சணற்கால் சமாசாரம் ஏதாவது தெரியுமா?

வம்பில் சாஸ்திரி:—என்ன சமாசாரம்! இன்று மத்தியானம் அங்கு சாப்பிட்டு விட்டுத் தான் புறப்பட்டேன்.

தாயு:—ஊரில் ஒன்றும் விசேஷமில்லையே, மகாதேவரகத்து சங்கதி ஏதாவது தெரியுமா?

சாஸ்திரி:—அவரகத்திற்கு அடுத்த அகத்திற்றான் நான் சாப்பிட்டேன்.

தாயு:—அவரகத்தில் எல்லாரும் சௌக்கியமா?

சாஸ்திரி:—ஒன்றும் பிசகில்லை. ஏதோ 4, 5-நாளாக அவருக்கு உடம்பு சௌக்கியமில்லை என்று கேள்வி. ஆனால் ஒன்றும் அப்படி பயப்படும் படியாக வில்லை.

தாயு:—அப்படிச் சொல்லுங்கள்! நீங்கள் மகாராஜராக வாழ வேண்டும். அடா குழந்தாய் நீ அழவேண்டாம். பயமில்லை. என் மங்கலியப் பெண்கொள்! குழந்தையைக் காப்பாற்றுங்கள். வெங்கடாசலபதி! உமக்கு அடுத்த புரட்டாசி சனிக்கிழமை ஒருபடி நெய் வைத்து தீபம் ஏற்றுகின்றேன்.

தீனதயாளு:—பயமொன்றுமில்லையே?

சாஸ்திரி:—ஒன்றுமில்லை, பயப்பட வேண்டாம். நான் உங்களைச் சிறு குழந்தையாயிருக்கும் போது பார்த்தது. இப்பொழுது அடையாளம் தெரியவில்லை. நீங்கள் நமது சீமையிலிருந்ததே யில்லை. சர்க்கார் உத்தியோகம் என்றால் இலேசா?

தீனதயாளு:—ஆம். எங்கு நமக்கு இரண்டு காசு வருமோ அந்த இடத்தில் தானே யிருக்க வேண்டும். நல்லது நாழிகையாகிறது, ஓட்டப்பா வண்டியை.

சாஸ்திரி:—நல்லது, போய் வாருங்கள்: உங்களுக்கு ஒன்றும் குறைவு வராது.

அம்மாதிரி நடுவழியில் ஆசுவாஸிக்கப்பட்டு தீனதயாளுவும் தாயுவும் அதுவரையிலடைந்திருந்த விசாரம் ஒருவாறு நீங்கினவர்களாய் வண்டியை சணற்காலுக்கு வேகமாய் நடத்தினார்கள்.

தாயு:—இன்னும் பயமில்லாமலிருக்கும் பட்சத்தில் ஏன் தம்பி தந்தியடித்தான்.

தீனதயாளு:—இன்னும் 4 நாழிகை வழி தானிருக்கிறது. விசாரப்படுவதில் இலாபமில்லை. ஈசனிருக்கிறார். அவர் திருவுள்ளப்படி நடந்தே தீரும்.

தாயு:—பயப்படாதே. கருட தரிசனமாகிறது. ஆண்டவன் நம்மைக் காப்பாற்றுவார்.

இம்மாதிரி சகுனங்களைப் பார்த்துக் கொண்டும், அநேக குடும்ப சங்கதிகளைப்பற்றிப் பேசிக் கொண்டும், சூரியாஸ்தமத்திற்கு இரண்டு நாழிகையிருக்கும் வேளையில் இவர்கள் சணற்கால் வந்து சேர்ந்து, அங்கு வீதியிலிருந்த இரண்டொரு பந்துக்கள் பயமில்லை என்று சொல்லச் சந்தோஷத்துடன் அவர்களால் தொடரப்பட்டு வீடு வந்து சேர்ந்தார்கள்.

## 4. மகா தேவர் பிணியும் அவர் குடும்ப ஸ்திதியும்.

"எல்லாப் படியாலு மெண்ணினு லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலி நோய் புன்குரம்பை."

இவர்கள் வந்து சேர்ந்த சமயமானது மகாதேவர் சொற்பம்பத்தியம் உட்கொண்டு களைப்பு மேலிட்டு உறங்கும் சமயமாகவிருந்தது. வாயிலிலிருந்து பின் தொடர்ந்த இரண்டொரு பந்துக்கள் அவரை எழுப்பப் போனார்கள்.

தீனதயாளு:—தொடாதேயுங்கள்: அவர்கள் எழுந்திருக்கும் போது எழுந்திருக்கட்டும்.

சாமி:—அது கெட்டது! குழந்தை குழந்தை என்று சதா மகாதேவர் புலம்பிக்கொண்டிருக்கிறார். உன்னைக் கண்டால் அவருக்கு போன பிராணன் திரும்பி வந்து விடுமே! பாதி வியாதி தெளிந்து விடுமே!

ராமன்—ஓய் சாமி! உமது படபடப்பு ஒருநாளும் போகிறதே யில்லையே! என்ன வயதாய்த்தா னென்ன, இப்பொழுதுதானே அவர் கண் மூடியிருக்கிறார்.

இப்படி யிவர்கள் விவாதம் பண்ணிக் கொண்டிருக்கையிலேயே இந்த சத்தத்தால் மகாதேவர் கண் விழித்துப்பார்த்து, ஆவலாய் தான் எதிர்பார்த்திருந்த தனது குமாரன் எதிர் நிற்கக்கண்டு, கண்ணுங் கண்ணீருமாக எழுந்துட்கார்ந்து "அப்பா குழந்தாய் வந்தாயா" என்று நாவு எழாதவண்ணம் துக்கத்தால் கேட்டார். அவர் முகத்தில் உண்டான துக்கத்தையும் அவரிருந்த இளைப்பையுங் கண்டு தீனதயாளு கண்ணீர் வடித்து விட்டான். இம்மாதிரி தகப்பனும் பிள்ளையும் ஒருவரை யொருவர் சந்தித்துச் சகிக்க முடியாத துக்கத்தால் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கையில் மற்றவர்கள் வந்துதான் இவர்களை சாந்தப்படுத்த வேண்டியதாக விருந்தது.

சாமி—என்ன தீனதயாளு! இவ்வளவுதானா உன் படிப்பு! சைய்! விடு! நீ இவ்வளவு பைத்தியக்காரன் என்று எனக்குத் தெரியாது. என்ன முழுகிவிட்டது. எதற்காக விசனப்படவேண்டும். மனித சரீரம் என்றால் நோயும் உண்டன்றோ! தலைவலி, கால்வலி என்று ஒருவன் படுக்கிறது இல்லையா.

ராமன்—ஆம்! சகஜமாய்க் காய்ச்சல் கறுப்பு என்று அடிக்கடி ஒருவன் படுப்பது வழக்கமாக விருந்தால் அது தோன்றவே தோன்றாது. மகாதேவர் சரீரம் வச்சிர சரீரமல்லவா. ஒரு நாள் கால் வலித்தது, தலை வலித்தது என்று அவர் படுத்ததே யில்லையே.

சுப்பன்—ஓய் அத்தான்! மார்கழிமாதம் ஊதல் சாரலடிக்குமே. அப்பொழுது அவர் சரட்டாற்றில் ஸ்நானஞ் செய்ய விடியசாமத்திற்குப் போய்விடுவாரே. அவர் பலமும் தேகக்கட்டும் யாருக்குண்டு.

சாமி—வாருங்கள் நாமெல்லாம் வெளியில் போய் வருவோம். தீனதயாளு சூரியாஸ்தமனத்திற்கு முந்திச் சொற்பம் ஆகாரம் பண்ணிக்கொள்ளட்டும் என்று சொல்லி அவர்கள் வெளியிற் சென்றார்கள்.

தீனதயாளுவும் தனது தந்தையைக் கண்ணாரக்கண்டு அவர் தேகஸ்திதியை நன்றாக அறிந்து கொஞ்சம் விசனமடைந்தான். வெளியில் அதிகமாகக் காட்டிக்கொண்டால் எங்கு ஒருகால் தனது தந்தை ஏக்கப்படுவாரோ வென்று அக்காலத்திற்கு தக்கப்படிதான் அவ்வளவு அவநம்பிக்கைப் படாதவன் போலும்நடந்துகொண்டான். அன்று மாலைப்பொழுதான போதிலும் தனது தந்தையைச் சொற்ப மிளைப்பாரவிட்டுத் தனது பந்துக்களுடன் கலந்து பெரியவருக்கு வந்த வியாதியையும் அதற்கு நடந்து வரும் மருந்து விஷயங்களை யும் பற்றி விசாரிக்கலானான்.

தீனதயாளு—சிற்றி! அப்பாவுக்குக் காலில் இரணம் கண்டு எத் தனை நாளாயிற்று? யார் வைத்தியம் பண்ணுகிறான்? வைத்தியன் என்ன சொல்லுகிறான்?

தாயு—என் குழந்தை கேட்கிறதற்குச் சரியான பதில் சொல் லம்மா காந்தீ. என் குழந்தை நேரில் வந்த பின் இனி என் தம்பிக்கு மோசமில்லை. எப்படியாவது என் குழந்தை என் தம்பியைப் பிழைக்கவைப்பான்.

காந்தி—என் தீனமே! கேள், ஒன்றுமில்லை. அப்பா படுக்கை யில் படுத்து இன்றைக்கு எட்டுநாள்தானாயிற்று. போன வெள்ளிக் கிழமை சிராவணத்துக்கு எல்லாரோடும் கூட சரட்டாற்றுக்குப் போய் பூணூல் போட்டுக்கொண்டு வந்தார். மறுநாள் சனிக்கிழமை கால் வலிக்கிறது, என்னால் சரட்டாற்றுக்குப் போகமுடியாது. அகத்தில் கிணற்றடியிலேயே ஸ்நானம் செய்துவிட்டு காயத்திரி ஜபம் பண்ணுகிறேன் என்றார். அப்புறம் உன் அத்தான் வக்கிர மணியன் வந்து "நன்றாக விருக்காது, வருஷத்துக் கொருநாள் ஆற்றங்கரையில் ஜபமண்டபத்தி லுட்கார்ந்து தான் ஜபம் பண்ண வேண்டும்" என்றான். அப்படியே ஆகட்டும் என்று மடிசஞ்சியை வக்கிரமணியன் எடுத்துவர அவர் சரட்டாறு சென்று எல்லாருட னும் ஸ்நானம் செய்து ஜபம்பண்ணிவிட்டு எல்லாருடனும் பொழுது அடியிறங்குமுன் திரும்பி வீடுவந்துவிட்டார். ஆனால் வரும் பொழுது மாத்திரம் சொற்பம் கெந்திக் கெந்தி நடந்துகொண்டு,

கைத்தடி ஒன்று பிடித்துவந்தார். நான் ஓடிவந்து "என்ன என்ன! காலில்!" என்று கேட்டேன். ஒன்றுமில்லை. உள்ளங்காலில் ஏதோ சொற்பம் முள் தைத்தாற்போல் வலிக்கிறது. நாளை பெயர் சொல்லாதவனைக் கூப்பிட்டு சோதித்துப் பார்க்கவேண்டும். என்றார். நான் பைத்தியக்காரி என்பது உனக்குத் தெரியுமே. இவ்வளவு தானே என்று இருந்துவிட்டேன். எனக்குப் பயமே தோன்ற வில்லை. அன்று நன்றாகச் சமையல் பண்ணியிருந்தேன். எல்லாக் குழந்தைகளையும் கூடவைத்துக் கொண்டு நன்றாகப் போசனம் பண்ணிவிட்டுப் படுத்தார். அன்று படுத்தவர்தான் இன்னும் இலை போட்டு உட்கார்ந்து உன் தகப்பனார் சாப்பிடவில்லை. நான் என்ன செய்யப்போகிறேனோ, தெரியவில்லை.

தீனதயாளு—சிற்றி! காயத்திரி ஜபத்துக்கு மறுநாள் காலை சோதித்துப் பார்த்தாரா?

காந்தி—ஆமாம், நமது வேலாயுதம் உனக்குத் தெரியாதா. அவன் போன ஞாயிற்றுக்கிழமை காலமே வந்து காலைச் சோதித்தான். வலம் உள்ளங்காலில் ஒரு சிறு முள்ளிருந்தது. அதை வாங்கிவிட்டான். கொஞ்சம் சீழ் வந்தது. அத்துடன் ஆபத்து விட்டதென் றிருந்தேன். முள்ளெடுத்த 5-நாழிகைக் கெல்லாம் கால் அப்பமாக வீங்கிற்று. அன்று ஆரம்பித்த காய்ச்சல் இன்னும் நிற்கவேயில்லை. பகலெல்லாம் கைபொரியும்படி வெகு வேகமாக அடிக்கிறது. இரவில் கொஞ்சம் தணிகின்றது. அது என்ன மாயமோ. என்னமாய் முடியுமோ. என் தலை யெழுத்து எப்படி யிருக்கிறதோ.

தீனதயாளு—அப்பாவுக்கு எப்படி முள் தைத்தது. என்ன முள். சாதாரண முள்ளாகவிருந்தால் அது எடுக்கப்பட்டவுடன் உபாதி நீங்கிவிடுமே. வைத்தியன் காய்ச்சலைப்பற்றி என்ன சொல்லு கிறான்.

காந்தி—எல்லாம் மாயமாக விருக்கிறது. அந்த முள் சப் பாத்து முள்ளாம். காலில் புரை கொஞ்சம் ஓடியிருக்கிறதாம். அது பட்ட முள்ளாம், தைத்தபிறகு சில நாளாய் காலிலேயே

யிருந்துவிட்டதாம். அதை உடனே எடுத்திருந்தால் இந்த அவஸ்தை ஒன்றுமில்லையாம். இதெல்லாம் உன் அத்தான் வக்கிரமணியன் குசு குசு என்று சாமி ஐயருடன் சொல்லக்கேட்டேன். என்னையார் லக்ஷியம் பண்ணி உள்ள சங்கதியை சொல்லுகிறார்கள்.

தாயு— அடி நாகு, அடியே சுந்தரி, வக்கிரமணியன் எங்கே போனான். அவனை குழந்தை வந்திருக்கிறான் என்று சொல்லி யாராவது ஓடிப்போய் அழைத்து வரக்கூடாதா?

சுந்தரி — தீனதயாளு வந்தது ஊரெல்லாம் தெரியுமே, அவனுக்கு மட்டும் தெரியாமல் போய்விட்டதா, அவனைப் போய்க் கூட்பிடவேண்டுமா. அவன் ஒய்யாரம் ஒருநாளும் போகிறதில்லை.

நாகு — சுந்தரி, என்ன நீ எப்பொழுதும் இப்படி பேசுகிறாய், வக்கிரமணியன் களத்துக்குப் போயிருக்கிறான். அவன் அகத்திலிருக்கமாட்டான். (இப்படி யிவர்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே வக்கிரமணியன் வந்து சேர்ந்தான்.)

வக்கிரமணியன் — வா, அம்மாஞ்சி. நீ விசாரப்பட்டு வந்துவிடுவாய் என்று, எனக்கு அப்பொழுதே தெரியும், நான் தந்தியடிக்கவேண்டாம், கடிதம் எழுதினால் போதும் என்று பல தடவை சொன்னேன். போனது போகட்டும். பணச்செலவு காலம் இப்போது. அவ்வளவுதானே ஒழிய நீ அஞ்சாதே.

தீனதயாளு—என்ன அத்தான்! அஞ்சாதே என்கிறீர்கள். இங்கிருக்கின்ற ஸ்திதியைப் பார்த்தால் பயமாக விருக்கின்றதே.

வக்கிரமணியன் — போ! நீ! பைத்தியக்காரா. இந்த அசடுகள் சொல்லுவதை நம்பாதே. வேலாயுதம் வெகு கெட்டிக்காரன். இதுவரையில் சுகமாக உத்தியோகம் பண்ணிவிட்டு கொஞ்சம் விவசாயத்தில் வயற்காட்டில் அதிகமாக அலைந்து திரிந்தார். அதன் மேல் உடம்பு பலங்குறைந்து வாடிற்று. இரண்டு மூன்றுநாள் சிராவணம் காயத்திரி ஜபம் இவைகள் அடுத்தடுத்து வந்தன. ஸ்நானம் பண்ணினார். நீர் கோத்துக்கொண்டு அதிசு ஜ்வரம் வந்துவிட்டது. இன்றையத்தினம் அவரைப் பார்த்து நீ பயப்படு

கிறுயே. 4-நாளைக்குமுன் மட்டும் நீ பார்த்திருந்தால் சகிக்கவே மாட்டாய்; மூந்தாநாள் தாபஜ்வரம். எள்ளுப்போட்டால் பொரியும். வேலாயுதம் ஒரு கலிக்கம் போட்டான். பாதி நீர் கரகர வென்று கண்கள் வழியாய் வடிந்தது. இன்று ஜ்வரஸஞ்சீவி இழைத்துக் கொடுத்திருக்கிறுன். நாளை எழுந்துட்கார்ந்து சிவபூஜை பண்ணு வார். நாங்கள் எல்லாரும் என்னத்திற்கு இங்கு இருக்கிறோம். பயப்படாதே.

தீனதயாளு—வயற்காட்டில் சப்பாத்து முள்ளெங்கு வந்தது. கண்ணுக்குக் கலிக்கமாவது. இங்கிலீஷ் வைத்திய மறிந்த டாக்டர்கள் சமீபத்தில் ஒருவருமில்லையா ? சாதாரண ஜ்வரமாக விருந்தால் கலிக்கம் மாத்திரை இவைகளில் தீரும். காலில் இரணத்துடனே இப்பொழுது நோய் கண்டிருக்கிறது. அதைப்பற்றி நீங்கள் யோசிக்கவில்லையா.

வக்கிரமணியன்— அதற்கென்ன. இதோ ஒருமைலுக்குள் வேங்கையூரில் டிரெஸ்ஸர் ஒருவனிருக்கிறுன். அவனைக் காலமே கூப்பிட்டு வருவோம். அவன் கேட்ட பணம் கொடுப்பது ஒன்று தான் நாம் காணப்போகிறதே ஒழிய வேறொன்றுமில்லை. குப்பியில் அவ்வளவு தண்ணீர் அடைத்துக் கொடுப்பான். அதுவும் யார் தொட்ட தண்ணீரோ. சிவபூஜை பண்ணும் பிராமண ஜன்மம் கெட்டுப்போகும். பிரயோஜனம் வேறொன்றுமில்லை. வேலாயுதத்தின் பலமான மாத்திரைகளுக்கு மேலா ஆஸ்பத்திரி குப்பித் தண்ணீர் !

தீனதயாளு — அப்படிச் சொல்லவேண்டாம். என்னவென்றுலும் இரண வைத்தியத்தில் இங்கிலீஷ் முறை சிலாக்கியமானது. நமது வேலாயுதனைப் பற்றி நான் இகழ்ச்சியாகச் சொன்னதாக எண்ணவேண்டாம். நமது அப்பாவுக்குக் காலில் இரணத்துடன் தாப ஜ்வரமிருப்பதால் டிரெஸ்ஸரை கூப்பிட்டு ஒரு தடவை பார்ப்பது தான் நலம்.

வக்கிரமணியன்—அதற்கென்ன, நாளைகாலை போவோம். அந்த விதமாயும் பார்த்துவிடுவோம். நீயோ இங்கிலீஷ் படித்து

உத்தியோகம் பண்ணப்பட்டவன். இங்கிலீஷ் முறைப்படி பார்க்க வேண்டும் என்கிறாய். உன் தங்கையோ அப்பாவுக்கு யாரோ பார்வை பார்த்திருக்கின்றான். அதற்கு ஒரு கழிப்புக் கழிக்க வேண்டும் என்கின்றாள். வேலாயுதமோ ஐயர் நாளை எழுந்துட் கார்ந்து சிவபூஜை பண்ணுமற்போனால் நான் வைத்திருப்பது பூர மன்று, பூராங்காவிக்கல் என்கின்றான். எனக்கோ வேலாயுதம் கைராசிக்காரன். ஒருவிதப் பிசகும் வரமாட்டாது. ஸ்வாமி காப் பாற்றுவார், என்று தோன்றுகின்றது.

தீனதயாளு—மணிமந்திர ஔஷதங்கள் என்று சொல்லுகின் றீர்களே. அவ்விஷயங்களில் ஒன்றும் குறைவு வேண்டாம். எப் படியாவது செய்து எவ்விதத்தாலாவது அப்பா உடம்பு அனுகூல மாகவேண்டும். காலமே டிரெஸ்ஸரைக் கூப்பிட்டு வந்து பார்த்து விட வேண்டும்.

இதற்குள் இரவாய்விட்டது. ஆகாரம் பண்ணிவிட்டு மறு படி சந்திப்பதாக அங்கிருந்தவர்கள் பிரிந்தார்கள். தீனதயாளு வக்கிரமணியனிடம் வரும்பொழுது வேலாயுதத்தைக் கூட்டிவரும் படி சொன்னான். அதற்கு அவன் இராத்திரி ஜாமத்துக்கு ஒரு ஔஷதம் கொடுப்பதாக வேலாயுதம் சொல்லியிருப்பதாகவும் அத ற்குத் தப்பாமல் வருவான் என்றும் சொல்லிப்போனான். தீன தயாளுவுக்கோ தனது தந்தையின் தேகஸ்திதி ஒன்றே மேலிட் டிருந்தது. வேறொன்றும் அதிகமாகத் தோன்றவில்லை. ஒரு 10 நிமிஷகாலம் உட்சென்று தன் ஸ்நானம் அனுஷ்டானம் இவற்றை முடித்தான். இதற்குள் மகாதேவர் தனது நித்திரை தெளிந்து எழுந்தார். குழந்தை எங்கே எனவே, அவர்முன் வேகமாக ஓடி வந்து தீனதயாளு நின்றான். பெரியவர் அவன் உத்தியோகத்தைப் பற்றியும் அவனுக்குக் கிடைத்த அனுமதியைப் பற்றியும் பலவித மாகக் கேள்வி கேட்டார். சர்க்கார் வேலை தான் நமக்கு முக்கியம். துரை கோபித்துக்கொள்வார் என்றால் சீக்கிரம் நீ புறப்பட்டுப் போய் பெரும் ரஜா வேண்டுமாயிருந்தால் எடுத்துவா. எல்லாரும் சொல்லுவதைப் பார்த்தால் இன்னும் இரண்டொரு நாளில் என் தேகஸ்திதி சரிப்பட்டுவிடும் என்று தோற்றுகிறது. மேலும் என

க்கு மதகடி ஜோஸ்யரிடம் வெகு நம்பிக்கை. அவர் என் ஜாதகத்தைச் சுக்கிரநாடிக் கணக்கு பிரகாரஞ் சோதித்துக் கொடுத்திருக்கின்றார். அதைப் பார்த்தால் மாரக தசை எனக்கு இப்பொழுது இல்லவேயில்லை. உன் ஜாதகப்பிரகாரமும் இப்பொழுது கர்மத்துக்கு அதிகாரமில்லை. ஜாதகம் பொய்யாகுமா! ஜோஸ்யம் பிசகுமா! அதிலும் இதுவரையில் மதக்டி ஜோஸ்யர் தவறினார் என்று ஒருவரும் சொல்லக் கேட்டதில்லை.

தீனதயாளு—அப்பா! ஏன் உங்களுக்கு இந்த ஸ்திதியில் இவ்வளவு கவலையுண்டாக வேண்டும். இரண்டு மாதச் சம்பளந்தானே போகும். நான் முழுச்சம்பளம் பிடித்தத்தில் லீவ் வாங்கிக் கொண்டு விடுகிறேன். தாங்கள் எப்பொழுதும்போல் எழுந்துட்கார்ந்து சரியாய் நடமாடும் வரையில் இவ்விடம் விட்டு நான் அசைவேனு! உத்தியோகம் முக்கியந்தான். தகப்பனைவிட அதிகமாகுமா! எல்லா விதத்தாலும் நமக்கிப்பொழுது பணம் நஷ்டமாகின்றவேளை. அதனுடன் ஈசன் மனமிரங்கட்டுமே. ஜாதகங்களும் ஜோஸ்யங்களும் பிசகாகாமல் என்னையும் தங்களையும் பாதுகாக்கட்டுமே. நானிப்பொழுது ஒரு சங்கதி சொல்லுகிறேன். அதைமட்டும் தாங்கள் கேட்க வேண்டும். தங்களுடைய உடம்பு பழைய ஸ்திதிக்கு வருகிறவரையில் தாங்கள் ஒரு விஷயத்தைப்பற்றியும் கவலையே படக்கூடாது. அப்படி யிருந்தால்தான் ஔஷதங்கள் பலிக்கும்.

மகாதேவர்—குழந்தாய், உன்னைக் கண்ட பிறகு எனக்கு இனி கவலையென்பதேது. இன்னும் நீ சாப்பிடவில்லைபோல் கண்கிறதே. யாரடி அங்கே! குழந்தைக்கு என் எதிரில் இலை கொண்டுவந்து போடு. என்னுடன் பேசிக் கொண்டே குழந்தை சாப்பிடட்டும்.

யஜமான் அவ்வாறு கட்டளை யிட்டதும் காந்தி வெகு பரபரப்பாய் இலை ஒன்று கொண்டுவந்து போட்டு உண்டி பரிமாறலானாள். தீனதயாளுவையும் அவ்வாறு விட்டு விட்டு அக்குடும்பத்தைப்பற்றி சற்று விசாரிப்போம்.

# 5. மகாதேவர் குடும்பம்

*கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து*
*நல்லறி வாளர் இடைப்புக்கு, மெல்ல,*
*இருப்பினு நாய் இருந் தற்றே இராஅ*
*துரைப்பினு நாய்குரைத் தற்றே.*

மகாதேவர் குடும்பத்தைப் பற்றி முன்னமேயே சுருக்கமாகச் சொல்லி யிருக்கின்றோம். அவருடைய மூத்த மனைவியின் மகன் தீனதயாளு. இவன் சிறுவயதில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் வருஷத்தி லிரண்டுமுறை இரண்டு மூன்று மாதம் தகப்பனாரிடம் வந்திருந்து போவான். மற்றைக் காலங்களில் தாயு தீனதயாளுவும் தனிக் குடித்தனம் கும்பகோணத்திலோ அல்லது இவன் உத்தியோகம் பண்ணுமிடத்திலோ இருப்பார்கள். சணற்காலிற் மகாதேவர் இளைய ஸம்ஸாரம் காந்தி என்பவளும் அவள் வயிற்றிற் பிறந்த இரண்டு குழந்தைகளும் அவர் கூட இருந்தார்கள். இவர்களுடன் மகாதேவருடைய தமக்கையார்கள் இரண்டுபெயர்கள் வெகு வயது சென்றவர்களுண்டு. இவ்விருவருக்கும் வேறு குஞ்சு குழந்தைகள் கிடையாதாகையால் வெகு காலந் தொடங்கி தங்கள் தம்பியாகிய மகாதேவரையே தஞ்சமாக அடைந்தவர்கள். அன்றியும் அவ்விரு தமக்கையார்களிடமும் அவர் அதிக பட்சமாக விருந்தார்.

காந்தி யென்பவள் ஜம்புநாதபுரம் என்ற ஒரு கிராமத்திய வறிய அந்தணருடைய குமாரத்தி. மகாதேவர் தமது மூத்த மனைவி காலம் சென்ற பிறகு தமது வைதீக காரியங்களுக்கு ஒரு வித குறைவும் வரக்கூடாதென்று தமது கிரகஸ்தாசிரம தருமம் வழுவாதிருக்க இச்சிறுமியை அதிகபணம் செலவிட்டு மணந்தார். அவ்வம்மணியும் மகாதேவரிடம் வெகு அன்பும் ஆதரவுமாக விருந்து அவரிடமிரண்டு குழந்தைகளையும் பெற்றிருந்தாள். இவர்களில்

ஒன்று ஆண், சங்கு என்று பெயர். மற்றொன்று பெண், மாந்தி என்று பெயர். ஆகவே சணற்காலில் மகாதேவர் வீட்டில் அவர் மனைவி அவருடைய இரு குழந்தைகள். அவரது இரு தமக்கைகள் எப்பொழுதும் ஸ்திரமாக வசித்து வந்தார்கள். அவருடைய மற்றொரு தமக்கையும் மூத்த மனைவியின் குமாரனும் அவரை விட்டுப் பிரிந்து வேறு இடங்களில் வசித்துக் கொண்டும் காலா காலங்களில்அவரிடம் வந்து கொண்டுமிருந்தார்கள். ஆனால் இவ்விருவரிடந்தான் மகாதேவருக்கு அதிக அன்பு; அதிக நம்பிக்கை. தீனதயாளு 25, 26-வயதுள்ளவன்தா னென்றாலும் இளம்பிராயத்திலேயே இவனுக்கு கலியாணமாய் விட்டபடியால் இவனும் குடும்பியாய்விட்டான். மகாதேவருக்கு தீனதயாளுவிடம் எவ்வளவுஅன்போ அதைவிட பதின்மடங்கு அவனது குழந்தைகளிடமும்; தமது நாட்டுப் பெண் பிரஸவத்திற்கு அவளுடைய பிறந்தகம் சென்றால் எங்கு அவளுடைய சம்ரக்ஷணை நன்றாக நடக்க மாட்டாதோ வென்று நினைத்து ஒவ்வொரு பிரஸவத்திற்கும் சணற்காலுக்கே வரவேண்டும் என்று ஏற்பாடு செய்வார். தீனதயாளுவும் தனது தந்தை கட்டளை தவறாத உத்தமனாகையால் அப்படியே நடந்து கொள்ளுவான். மகாதேவர் உடம்பு அசௌக்கியமாக விருந்தகாலம் அவரது நாட்டுப் பெண் 4-ம் பிரஸவமாய் 2-மாதமான காலம். ஆகவே அப்பொழுது சணற்காலில் தீனதயாளுவின் மனைவியும் அவருடைய 4-குழந்தைகளும் வசித்து வந்தார்கள். காந்தியோ தனது புருஷன் மனம் கோணாமல் அவர் நோக்க மறிந்து நடப்பதில் வெகு சாமர்த்தியக்காரி யாகையால் தீனதயாளுவைத் தன் குழந்தையைப்போலும், அவனது மனைவியைத் தன் வயிற்றிற் பிறந்த பெண்ணைப்போலும் நடத்திவந்தாள். தீனதயாளுவின் குழந்தைகள் பார்ப்பவர்கள் மனத்தை எல்லாம் கவரும். அழகான சிறு குழந்தைகளாகையால் அக்குழந்தைகளிடம் அவளாதரவாயிருந்தாள் என்பது ஆச்சரியப்படத்தக்கதன்று. எப்படியிருந்தாலும் காந்தி மகாதேவருடைய இளைய மனைவி. பழமொழியோ "இளையாளே வாடி மலையாளம் போவோம். மூத்தாளே வாடி முட்டிக்கொண்டு சாவோம்." எல்லாரும் இளையாளிடம் அதிக அன்பு பாராட்டலாம். மகாதேவரும் அவர்களில் ஒருவராக இருக்

கலாம். காந்தியும் அப்பதவியைப் பெற்ற காரணத்தால் அதிக அதிகாரம் வகித்து விடலாம். ஆனால் மகாதேவர் உலகவழக்கத்தை நன்றாக அறிந்தவராகையால் எல்லாரையும் தமது கட்டளைக்கு அடக்கி ஆண்டு வந்தார். அன்பு ஆதரவு விஷயங்களில் ஒருவித குறைவுமின்றி எல்லாரும் தம் சொற்படி நடக்கும்படி செய்து வந்தார். இவர் குடும்பம் மூத்தாள் இளையாள் குழந்தைகள் என்ற வித்தியாஸமில்லாமல் எவ்வளவு அழகாக விருக்கின்றது என்று எல்லாரும் சொல்லும்படி நடந்துவந்தார். சங்கு என்பவனுக்கு 14,15-வயது. இளைய ஸம்ஸாரத்தின் மூத்த மகனாகையால் அவன் சொற்பம் செல்லப் பிள்ளையென்றே சொல்லலாம். அவன் படிப்பு விஷயமாக மகாதேவர் எவ்வளவோ சிரமப்பட்டார். பல ஊர்களிலும் பல பந்துக் களிடம் படிக்க வைத்துப் பார்த்தார். தீனதயாளுவிடம் சொற்ப காலம் விட்டுப் பார்த்தார். சிறு வயது முதல் பிடிவாதத்திலேயே சங்குவுக்கு அதிகத் தேற்றமாகையால் ஒரு இடமும் சரிப்படாமல் ஊர் வந்துவிட்டான். மகாதேவருக்கு சிறு குழந்தைகளிடம் அன்புமுண்டு, கோபமுமுண்டு. சங்கு ஏதாவது ஒரு வடையோ அல்லது முறுக்கோ வேண்டுமென்றால் அவனுக்குக் கொடுக்கக் கட்டளையிடுவார். அது போதாதென்று அவன் அழுவான். இன்னு மதிகமாகக் கொடுக்க உத்தரவிடுவார். அதையும் பெற்றுக்கொண்டு விம்மி விம்மி அழுவான். சங்குவின் கையில் இரண்டு மூன்று பெயர்களுக்கு போதுமான பட்சியங்களிருந்தும் அவன் அழுவதை மகாதேவர் பார்த்து வேண்டாம் அழாதே அடிப்பேன் என்று பலவாறு பயமுறுத்துவார். என்ன சொல்லியும் கேட்காமல் சங்கு அழுவான். உடனே மகாதேவருக்குக் கோபம் பொங்கிவிடும். கையினண்டை யிருப்பது ஏதாகவிருப்பினும் அதை யெடுத்துக்கொண்டு சங்குவை நையப் புடைத்து விடுவார். என்ன தான் அடித்தாலும் அவன் அழுகையும் ஓயாது. போதும் என்ற பதமும் அவன் நாவிலிருந்து வரமாட்டாது. மகாதேவர் தமக்கையார்கள் ஓடிவந்து சங்குவைக் கொல்லைப்பக்கம் தூக்கிப்போய் வீட்டில் முறுக்கு வைத்திருக்கும் பாத்திரத்தையே எடுத்துவந்து அவன் முன்பாக வைத்து 'இந்தா! கொட்டிக்கொள்!' என்பார்கள். அப்போது அவன் அழுகை நின்ற

தென்றாலும் அதன் அதிர்ச்சியாகிய விக்கல் நிற்க ஒரு ஜாமம் செல்லும். இப்படியாகச் சங்கு பிடிவாதத்திலும் செல்லத்திலும் வளர்க்கப்பட்டுக் கெட்டுப்போன சிறுவன். இவனிடம் மகாதேவருக்கு அதிக நம்பிக்கை கிடையாது. ஆனால் காந்தி என்ற பெண்ணிடம் அதிக விசுவாஸமுண்டு. இனிமேல் நடக்கப்போகிற சங்கதிகளை நாம் அறிய நமக்கு எச்சங்கதிகளெல்லாம் தெரிய வேண்டுமோ அவைகளைப்பற்றி இவ்விடம் சுருக்கமாகச் சொன்னோம். விளையும் பயிர் முளையிலேயே அறியலாம் என்ற உலகச் சொல்பிரகாரம் சிறு வயதிலேயே சங்குவின் பிடிவாதத்தையும் மற்றைய குணங்களையும் மகாதேவர் ஒருவாறு அறிந்தவராய் ஏதோ தன்னாலியன்றமட்டும் அவனை நல்வழியில் கொண்டுவர முயன்று முடியாமல் விட்டுவிட்டார்.

## 6. தீனதயாளு நடத்திய வைத்தியம்.

உறுதி பயப்ப கடைபோகா ஏனும்
இறுவரை காறு முயல்க; இறும் உயிர்க்கும்
ஆபுண் மருந்தொழுக்க நீதன்றால்; அல்லனபோல்
ஆவனவும் உண்டு சில.

தீனதயாளு பகாசுரகிரியை விட்டு வெகு வேகமாய் வந்து தனது தந்தையிருந்த நிலைமையைக் கண்டதும், அவருக்கு அதுவரையில் நடந்துவந்த வைத்தியம் முதலியவற்றைக் கேட்டதும், தனக்குள்ளேயே சில சந்தேகங் கொண்டுவிட்டான். தான் மனங்கலங்கினால் எல்லாரும் மனங்கலங்கி விடுவார்கள் என்ற எண்ணம் அவனுக்கிருந்த படியால் உள்ளத்தில் எவ்வளவோ அச்சமிருந்தபோதிலும் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் மறுநாள் முதல் தான் தனது தந்தைக்கு நடக்கவேண்டிய வைத்தியத்தைப் பற்றித் தீர்மானித்துக்கொண்டான். சணற்காலில் இவனுக்குப் பலர் பந்துக்கள் என்று சொல்லிக்கொண்டு சமயங்களில் கிடைக்கும் லாபங்களை மட்டும் கைப்பற்றி மற்றைக் காலங்

களில் மறைவாகத் திரியும் குணமுள்ளவர்களாக விருந்தார்கள். இவர்கள் எப்பொழுதும் காத்திருந்தார்களே யன்றி செய்யவேண்டியவை இன்னவை யென்ற பகுத்தறிவற்றவர்கள். இவர்களெல்லாரும் ஒரு மனிதனுக்குச் சங்கடம் வரும்பொழுது ஒருவித காரியத்துக்கும் உதவாதவர்கள். இவ்விதமான பந்துக்களிடம் நமது தந்தையை விடாமல் நாம் நேரில் வந்தோமே என்று தீனதயாளு தன் மனத்தில் திருப்தியடைந்தான். நாம் நமது தந்தையிடம் இரவு பகல் விட்டுப் பிரியாமலிருந்து வேளை தவறாது ஔஷதங்கள் செலுத்தி அவர் வியாதியைக் கண்டிக்கவேண்டும் என்று கருதினான். தான் சணற்கால் வந்துசேர்ந்த இரவே அவன் வேலாயுதத்துக்கு சொல்லியனுப்பி அவனைச் சில கேள்விகள் கேட்டு அவனுக்கு வைத்தியம் அதிகமாகத் தெரியாதென்றும், ஏதோ தனது கையிலிருக்கும் பழைய மருந்துகளின் பெருமையால் புகழ்பெற்றவன் என்றும் அறிந்துகொண்டான். மறுநாட்காலை வேங்கையூர் சென்று அவ்விடத்திய டிரஸ்ஸரை அழைத்து வந்தான்.

நமது நாட்டிலிருக்கும் டிரஸ்ஸர்கள் பெரும்பாலும் வெகு நல்லவர்கள். வேங்கையூர் டிரஸ்ஸர் மட்டும் இவ்வினத்தை விட்டுச் சிறிது விலகியிருந்தார். இவர் மனத்தில் தாம் அந்நாட்டையே வியாதியிலிருந்து நீக்கவந்த தந்வந்திரி என்ற எண்ணமிருந்தது. இதற்கு அவ்வூரார்கள் மற்றொரு காரணமும் சொல்வதுண்டு. இந்த டிரஸ்ஸர் வேங்கையூருக்கு 10 வருஷங்களுக்கு முந்தி வந்தவர். அவர் வந்த இரண்டு வருஷத்திற்கெல்லாம் அவருக்குக் குஷ்டரோகம் வந்ததாம். எவ்வளவோ தமக்குத் தெரிந்த மட்டும் இங்கிலீஷ் வைத்தியங்கள் பண்ணி அதில் ஒன்றும் பலிக்காமல் நாட்டு வைத்தியம் அப்பியசித்து அதன் பிரகாரம் மூலிகைகள் புசித்து பத்தியங்களிருந்து தமக்கு வந்த குஷ்டரோகத்தை நீக்கிக் கொண்டாராம். ஆகையால் அவர் தந்வந்திரியின் அவதாரம் என்பதற்கு ஆக்ஷேபம் உண்டா என்று அவ்விடத்திய ஜனங்கள் சொல்லுவார்கள். இந்த ரோகம் அவருக்கு முதலில் வந்து, பின் அவரைவிட்டு நீங்கியது பொய்யோ மெய்யோ, அது ஈசனுக்குத்தான் தெரியும், அக்காரணத்தால் அவருக்கு நாட்டுவைத்

தியம் இங்கிலீஷ் வைத்தியம் இரண்டும் நன்றாக வரும் என்ற பெயர் மட்டும் வெகு பிரசித்தமாயிருந்தது. அப்பெயரால் அவர் வெகு தனவானாய்விட்டார் என்பது மட்டும் திண்ணம். யாராவது அவரிடஞ் சென்று அவஸரம் என்று அழைத்தால் 100 ரூபாவுக்குக் குறையாமல் தமக்குச் சேரவேண்டிய கூலியைப் பேசிக் கொண்டு அதில் பாதிவாங்கிப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டுத் தான் தம் வீட்டைவிட்டுப் புறப்படுவார். தயை, தாக்ஷிண்ணியம், கருணை என்ற குணங்கள் அவரிடம் எள்ளளவேனும் கிடையாது. சமயத்தில் பணம் கைப்பற்றிக் கொள்ளாவிட்டால் சமயம் கடந்து போனபிறகு ஒருவரும் தமக்குக் கொடுக்கமாட்டார்கள் என்பது அவருடைய சித்தாந்தம். வேங்கையூர் ஆஸ்பத்திரியை வெகு கிராமங்கள் நம்பியிருந்தபடியால், கிராமத்தார்களில் சிலர் இங்கிலீஷ் வைத்தியத்தில் நம்பிக்கையில்லாதவர்களா யிருப்பார்கள் என்ற எண்ணத்தால், இந்த டிரஸ்ஸர் தனக்கு நாட்டுவைத்தியம் யூனானி வைத்தியம் எல்லாம் ஸாங்கோபாங்கமாகத் தெரியும் என்று சொல்லி அம்முறைப்படியே மருந்து கொடுப்பதாக மருந்துகள் கொடுத்து தமக்குச் சேரவேண்டிய கூலியைக் குறைவின்றிப் பெற்றுக்கொள்ளுவார். டிரஸ்ஸர் உத்தியோகத்தின் கௌரவத்தா லிவருக்குப் பலவித அதிகாரங்கள் உண்டு. சில சிறு குழந்தைகள் தாங்கள் சில பரீக்ஷைகளுக்குப் போகுமுன் அம்மை குத்தப்பட்ட சர்டிபிகேட் வாங்கவந்தால் அவர்களுக்கு அம்மை சரியாகக் குத்தப்பட்டு பலித்திருந்தபோதிலும், அவர்களுக்கு அம்மையே போட்டியிருந்தபோதிலும், 1000 வடுக்கள் முகத்தில் காணப்பட்டபோதிலும் ஒவ்வொருவரிடமும் 5 ரூபா கூலி தவறாமல் வாங்கிக்கொண்டே ஸர்டிபிகேட் கொடுப்பார். சர்க்கார் மூலமாய் ஏதாவது அடிதடி கொலை முதலிய வியவகாரங்களுக்கு இவர் போய் பார்த்து சர்டிபிகேட் கொடுக்கும்படி உத்தரவு வந்திருந்தால் அதில் நியாயம் எப்படியிருந்தபோதிலும் தமக்கு அதிகக்கூலி கொடுக்கப்பட்டவனுக்கு நல்ல சர்டிபிகேட் கொடுப்பார். ஏதாவது மொட்டை விண்ணப்பங்கள் போய் மேலான அதிகாரிகள் தன்னைப் பரிசோதிக்க வந்தால் அவர்களுக்கு வாய்க்கினிமையான தாதுபுஷ்டி லேகியங்கள் கூலி கேட்காமல் கொடுத்தும் மற்றவிதமாக நடந்துகொண்டும் அவர்கள்

தன்னைப்பற்றி நல்ல அபிப்பிராயங்கொண்டு திரும்பும்படி செய்வார். இவர் சட்டப்படி யூனியன் சேர்மன். அந்த அதிகாரத்தால் எங்கு ஒருகால் ஜாஸ்தி வரிபோட்டு விடுவாரோவென்று ஜனங்களிவரிடம் பயந்து நடப்பார்கள். இவருக்கு மாதச்சம்பளம் 40 ரூபாவென்றாலும் 10 வருஷங்களுக்குள் 40 ஆயிரம் சம்பாதித்திருந்தார் என்றால் வைத்தியத்தால் வரும் லாபமே லாபம்.

இந்த டிரஸ்ஸரிடந்தான் தீனதயாளுவும் சென்றது. இவன் தம்மை நாடிவந்ததை அவர் அறிந்து கொண்டு, அதற்கு முன்னமேயே இன்ன ஊரில் இன்னார் உடம்பு சௌக்கியமில்லாமலிருக்கின்றார்கள் என்ற சங்கதியு மிவருக்குத் தெரிந்த விஷயமாகையால், தீனதயாளு வந்த காரணத்தையு மறிந்துகொண்டார். வெகு யுக்தியாக முதல் முதலில் டிரஸ்ஸர் தீனதயாளுவிடம் பகாசுரகிரியின் நீர்வளம் நிலவளம் முதலியவைகளைப்பற்றி விசாரித்தார். அதன் பிறகு, அவனுடைய உத்தியோகம் சம்பளம் இவைகளைப் பற்றியும் விசாரித்தார். தீனதயாளு தான் அதற்கு முந்திய இரவு தான் வந்ததாகவும் தனது தந்தை தேகஸ்திதி நன்றாகவில்லை யென்றும் டிரஸ்ஸர் அவசியமாக வந்து பார்க்கவேண்டும் என்றும் வேண்ட, அதற்கு டிரஸ்ஸர், ஆம் நல்லது மகாதேவருக்கு உடம்பில் நோய் கண்டு இப்பொழுது எத்தனை நாளாயிற்று, என்ன நோய்? என,

தீனதயாளு—ஐயா எனது தந்தை கீழே படுத்து 8-9 நாளாயிற்று என்கிறார்கள். விடாஜ்வரமாம். அதனுடன் வலக்காலில் ஏதோ முள் தைத்த காரணத்தால் அதிக வீக்கமும் வலியுமாம். இவ்வளவு மட்டும் தான் எனக்குத் தெரியும். தாங்கள் வந்து தங்களுடைய வைத்தியக்கண்களால் பார்த்தாலல்லவா மற்றவைகள் வெளியாகும்.

டிரஸ்ஸர்—8, 9 நாளாக விடாக்காய்ச்சல், கால் வீக்கம், முள் தைத்தகால், நல்லது இதுவரையில் வைத்தியம் பார்க்கவேயில்லையா?

தீனதயாளு—தெரியாதா தங்களுக்கு, ஊருக்கு ஒருபரிகாரியிருக்கின்றான். ஏதோ வேலாயுதம் அம் முள்ளை எடுத்து காய்ச்

சனுக்கு மாத்திரை கொடுத்து வருகிறுனும். நானே நேற்றுத்தான் வந்தேன்.

டிரஸ்ஸர்—இவ்விடத்திய வழக்கம் உங்களுக்கு நன்றாகத் தெரியாமலிருக்கலாம். இக்கிராமத்தார்கள் எல்லாவித வைத்தியங்களும் முதல் முதல் கடைசிவரையில் பார்த்துவிட்டு இனி சாத்தியமில்லை என்ற பிறகுதானிவ்விடம் வருவது வழக்கம்.

தீனதயாளு—அவ்வழக்கம் எனக்குத் தெரியக் காரணமில்லை. நானே நேற்று வந்தவன். பலவிடங்களில் நான் இங்கிலீஷ் முறையில் வைத்தியம் பண்ணி நோய் தீருவதைப் பார்த்திருக்கப்பட்டவனுகையாலும், காலில் ஒரு காயத்துடனும் வீக்கம் வலி யிவைகளுடனும் ஜ்வர மிருப்பதால் ஒருகால் காலில் ஏதாவது கட்டி புறப்படு கின்றதோ என்ற சந்தேகத்தாலும், தாங்கள் வந்து பார்க்க நான் வேண்டிக்கொள்ளுகின்றேன். நாட்டு வைத்தியர்கள் சஸ்திர வைத்தியத்தில் தேர்ந்தவர்களில்லை யென்றும் சஸ்திர வைத்தியம் இங்கிலீஷ் முறையில் நன்றாக விருக்கின்ற தென்றும், எனது கொள்கை யாகையால் தங்களிடம் வந்தேன்.

டிரஸ்ஸர்—இது தான் தெரிந்தவர்களுக்கும் தெரியாதவர்களுக்கு முள்ள வித்தியாஸம். தாங்கள் எல்லாம் தெரிந்தவர்களாயிற்றே. வைத்தியம் என்பது வெகு பொல்லாத வேலை. ஏதோ எங்கள் சிரமத்துக்கு ஏதாவது கொடுக்கவேண்டு மல்லவா. உங்களை நம்பித்தானே நாங்களிந்த சாஸ்திரத்தி லிவ்வளவு சிரமப்பட்டிருக்கின்றோம். அந்த விஷயமாய் ஒரு ஏற்பாடு செய்துகொண்டு தான் நான் வெளிக்கிளம்புகிறது. ஏனெனில் வழவழ வென்றிருப்பதைக்காட்டிலும் எதிலும் கண்டிப்பாக விருக்கிறது எல்லார் வற்றிற்கும் நன்மை.

தீனதயாளு—அதற்கு என்ன ஆக்ஷேபம். தாங்கள் முதல் முதல் வந்துபார்த்து இவ்விதமான நோய் இது, இதற்கு இவ்வளவு ரூபா எனக்குக் கூலி கொடுக்கவேண்டும், என்று சொல்லுங்கள் அந்தப்படி நடத்த நான் சித்தமாக விருக்கின்றேன். அதில் தாங்கள் சந்தேகப்படவேண்டாம்.

டிரஸ்ஸர்—இப்படித்தான் வெகு பெயர்கள் என்னிடம் தேனெழுகப்பேசி அழைத்துப்போவது வழக்கம். வியாதி இன்னதென்பதை யறிந்துகொண்டு அதன் பிறகு எனக்குச் சொல்லியனுப்பாமல் வியாதிக்குத்தக்கபடி நாட்டுவைத்தியம் செய்தோ அல்லது கைம்மருந்து கொடுத்தோ வியாதியைச் சௌக்கியப்படுத்துவது வழக்கம் அப்படி அநேக விடங்களில் நான் மோசம் போயிருக்கின்றேன். ஆகையால் முதல் முதல் நான் வந்து பார்த்து வியாதியின் பெயரை மட்டும் சொல்லி விட்டுத் திரும்புவதாக விருந்தால் எனக்கு 25 ரூபா இப்போதே கொடுத்து தாங்களே வண்டி வைத்து அழைத்துப் போகவேண்டும், இல்லை, நானே பார்க்கலாம் என்று உங்களுக்கு மனமிருந்தால் எனக்கு 100 ரூபாவுக்குக் குறையாமல் கொடுக்க வேண்டும். அதில் பாதி புறப்படும் முன் செலுத்த வேண்டும். மற்றத்தொகை வியாதி அனுகூலமான பிறகு செலுத்தினல் போதும். அதன் பிறகு தாங்கள் என் சிரமத்திற்காக என்ன வெகுமானம் பண்ணினுலும் பெற்றுக்கொள்ளக் காத்திருக்கின்றேன்.

தீனதயாளு—இதோ ரூயா 50, வாருங்கள், என்றான்.

ஏனெனில் இவன் அதற்கு முதல் நாள் இராத்திரியே தான். காலையில் பார்க்கப் போகும் டிரஸ்ஸரைப் பற்றி எல்லாம் விசாரித்து அவர் 50 ரூபா வாங்கிக் கொண்டு தான் புறப்படப்பட்டவர் என்ற சங்கதியையு மறிந்திருந்தான். இவனுடைய மனோவேகம் தனது தந்தை சௌக்கியமாக வேண்டு மென்பது ஒன்றைவிட வேறில்லை. அவருடைய காலில் கண்டிருந்த ராஜப்பிளவை என்ற கட்டி யொன்றும் அதை சோதித்துத்தான் ஆற்றவேண்டும் என்றும், அந்த வேலை இங்கிலீஷ் முறையாகத்தான் நடக்கவேண்டும் என்றும் இவனுக்கு நன்றாக மனதிற்குள்ளேயே விளங்கிவிட்டது. அந்தப்படி செய்ய வேங்கையூர் டிரஸ்ஸரைவிட வேறொருவரும் சமீபத்திலில்லையாதலால் அவரைக் கொண்டு தான் பார்க்க வேண்டும் என்ற நிச்சயம் செய்து விட்டான். அவ்வாறு நிச்சயித்த பிறகு அவருக்குக் கொடுக்கவேண்டிய விஷயத்தில் பின் வாங்குவதால் ஒருவித பிரயோசனமில்லை என்று கருதினன். சில வைத்தியர்கள்

முதல் முதல் நோயாளியைப் பரீக்ஷித்து விட்டு அப்புறம் கூலி பேசிக்கொள்வார்கள்; ஆனல் வேங்கையூரார் வழக்கம் வேருக விருந்தது. அப்படியே தீனதயாளுவும் மனப்பூர்வமாய் நடந்து கொண்டான். அதற்கு மேலும் அவன்,

ஐயா டிரஸ்ஸரே! தாங்கள் ஏதோ நான் பணம் கொடுத்து உங்களை சிகித்சை செய்ய வேண்டிக் கொள்வதாக நினைக்க வேண்டாம். என் தந்தையையே தங்களிடம் ஒப்பி வைத்தேன். அவரைக் காப்பாற்றி விட்டு அதன் பிறகு நீங்கள் என் பிராணனை அதற்குக் கூலி என்று சொல்லிக் கேளுங்கள். அதையும் நான் கொடுக்கச் சித்தமாக விருக்கின்றேன் என்றான். டிரஸ்ஸர் இச் சிறுவன் சொன்னதைக் கேட்டதும் மனமிளகி விட்டார். முன்பின் யோசியாமல் இவர் கேட்டமாத்திரத்தில் அலக்ஷியமாய் 50 ரூபாயை அவ்வளவு எளிதாய் இதுவரையில் ஒருவனுவது எடுத்துக் கொடுத்ததை அந்த டிரஸ்ஸர் கண்டதே யில்லை. மேலும் தீனதயாளு வெகு பரிதாபமான தோற்றத்துடன் என் தந்தையைக் காப்பாற்றி விட்டு நீங்கள் என் பிராணனைக் கேட்டாலும் கொடுப்பேன் என்று சொன்ன சொல் அவன் பஞ்ச பூத சாக்ஷியாயும் தனது தந்தையின் மேல் தான் வைத்திருந்த பூர்ண அன்பாலும் சொல்லப் பட்ட சொல்லென்று விளங்கி விட்டபடியால் இவ்வளவு உண்மையான உத்தம புத்திர னெருவனுக்கு நாம் சரியாய் நடக்காவிட்டால் தெய்வம் நம்மைக் கெடுத்து விடும் என்று அஞ்சலானர். இவ்விரு காரணங்களுக்கும் மேலாக தீனதயாளு ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தன் ஆகையால் அவனுக்கு நாம் சரியாக நடந்து கொண்டால் நமக்கு க்ஷேமமுண்டென்றும் அவர் மனத்தில் தோன்றிற்று.

டிரஸ்ஸர்—ஐயா! ஐயா! இதோ புறப்பட்டு விட்டேன், வாருங்கள், என்றல் என்ன ஆகவேண்டுமோ அதில் ஒருவித குறைவு மில்லாமல் நடந்து கொள்ளுகிறேன், அப்புறம் ஆண்டவன் செயல், என்று சொல்லி, தனது வைத்தியப் பெட்டி சகிதம் புறப்பட்டுவிட்டார். இவ்விருவரும் சடுதியில் சணற்கால் வந்து சேர்ந்தார்கள். தினதயாளு தான் டிரஸ்ஸரை அழைத்து வருவதாகச் சொல்லிப் போனவனுகையால் அவ்வைத்தியர் வரும் காக்ஷியை அவ்வூரார்க

ளெல்லாம் எதிர் பார்த்து நின்றார்கள். அவருடைய வண்டி மாடு களின் அழகை மெச்சியவர்கள் சிலர். அவருடைய வில்வண்டி யின் அமைப்பைப் பார்த்து ஆச்சரியப்பட்டவர்கள் சிலர். இவர்க ளெல்லாரும் பலமுறை அவருடைய வண்டியையும் பார்த்திருந்தவர் கள் என்றாலும் தங்களுடைய ஊருக்கு டிரஸ்ஸர் வந்த பொழுது நேராக ஒருமுறை அவைகளைத் தாங்கள் புகழ்ந்தாற்றான் பெருமை யென்பது இவர்களுடைய கொள்கை. ஒருவன் மாட்டுக் கொம்புக ளில் தைக்கப்பட்டிருந்த குமிழ்களைப் பார்த்து இவைகள் கும்பகோ ணத்தில் தான் உண்டு என்றான்; மற்றொருவன் நமது ஊருக்கு அடுத்த சிறு குழைச் சாவியில் ஒரு பாத்திரி யிருக்கின்றாரே அவரு டைய பெட்டிவண்டி அழகு, இதனினும் அவருடைய மாடுகளின் கொம்பில் கட்டியிருக்கும் குமிழ்கள் சீர்மையிலிருந்து நேராக வந்த வைகள் என்றான்.

வெளியிலிவ்வாறு ஜனங்கள் பேசட்டும். மகாதேவருடைய வீட்டில் என்ன நடந்ததென்பதைச் சற்று விசாரிப்போம். டிரஸ் ஸர் தாம் மகாதேவரைப் பார்த்ததும் அவரை வணங்கிவிட்டு தம் மைத் தீனதயாளு அழைத்து வந்ததைச் சொல்லி "நான் என்னால் கூடிய மட்டும் முயன்று எப்படியாவது தாங்கள் இன்னும் ஒரு வாரத்தில் எப்பொழுதும்போல் நடமாடும் நிலைமைக்குக் கொண்டு வந்து வைக்கின்றேன்" என்றார்.

மகாதேவர்—குருடன் கண்ணைத்தானே வேண்டுகின்றான். எப்படியாவது என் கால்வலி நீங்கி நான் நடமாடும்படி செய்யுங்கள். எனக்கோ இனிச் சிரஞ்சீவியா யிருக்கவேண்டும் என்ற ஆசையில்லை. எல்லாவித சௌக்கியங்களும் நான் அனுபவித்தாய் விட்டது. இன் னம் கொஞ்ச காலமிருந்து என் தீனம் நல்ல பதவியிலிருக்கிறதை இக்கண்களால் பார்த்துவிட்டு அவன் ஸம்ஸாரம் அன்பாக அளிக் கும் போசனத்தை அவனுடனிருந்து கொண்டு 6 மாதகாலமாவது சாப்பிட்டுவிட்டுப் பிராணனை விடவேண்டும். அப்படியின்றி மாண்டு விடுவேனேயானால் என் நெஞ்சம் வேகாது. பிள்ளையென்றால் எல் லாரும் என் தீனதயாளு ஆவார்களா. பெண்ணென்றால் எல்லாப் பெண்களும் என் நாட்டுப் பெண்ணாவார்களா?

டிரஸ்ஸர்—ஐயா, தாங்கள் சிறிதேனும் சிந்திக்க வேண்டாம். தாங்கள் சிவபூஜா துரந்தரர். தங்களுக்கு ஆண்டவர் ஒரு நாளும் குறை செய்யார். பலவருஷம் தங்கள் குழந்தையிடம் தாங்கள் வாழ்ந்து அவ்வம்மணி அளிக்கும் அமுதைப் புசிக்கலாம். நானிப்பொழுது தங்களை நன்ருகப் பரீக்ஷித்துப் பார்த்து அதன்மேல் சிகித்சை நடத்தவேண்டும். இப்பொழுது இவ்விடத்தில் ஒருவரும் அதிகமாக விருக்கக்கூடாது. தங்கள் குமாரர் மட்டு மிருந்தால் போதும்.

இப்படி வைத்தியர் சொன்னதும் தீனதயாளு தன்னைச் சுற்றி ஒரு தடவை ஒரு பார்வை பார்த்தான். எல்லாரும் அப்படி அப்படி ஒதுங்கி வாயிலிலும் திண்ணையிலும் நடையிலும் போய் நின்ருர்கள். அதன்றே நற் குடும்பத்தின் நடவடிக்கைக்கு அடையாளம். காந்தி மட்டும் அருகாமையில் சொற்பம் ஒதுங்கி நின்ருள். முதல் முதல் வைத்தியர் கொஞ்சம் நீர் வாங்கி அதை பரீக்ஷித்து பார்த்தார். அதன்மேல் தாது பரீக்ஷை, இருதய பரீக்ஷை, தேக பரீக்ஷை, முதலியவைகளை நன்ருகச் சாவகாசமாய்ச் செய்தார். மகாதேவருடைய காலை வெந்நீரால் நன்ருகத் தேய்த்துக் கழுவி விட்டு அதை எவ்வளவு விதமாகச் சோதிக்க வேண்டுமோ அவ்வளவு விதமாகச் சோதித்தார். முள்ளெடுத்த இடம் மூடி நன்ருக கால் வீங்கியிருந்தது. வைத்தியர் அதைத் தொட்டுப் பார்க்கும் பொழுதெல்லாம் அதிக வலி. மகாதேவர் எப்படியாவது இவர்கள் நன்ருக பரீக்ஷிக்கட்டும் என்று பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துக் கொண்டிருந்தார். எல்லா பரீக்ஷைகளும் முடிந்துவிட்டன. வைத்தியர் தனது கைகளைச் சுத்தி செய்து கொண்டு பயப்படவேண்டாம். எல்லாம் இன்னும் 4, 5 நாளில் அனுகூலத்துக்கு வந்துவிடும் என்று தைரியம் சொன்ஞர். இவர் சொன்னதைக் கேட்டதும் எல்லாரும் ஓடிவந்து வெகு ஆவலுடன் எப்படியாவது மகாதேவரை முன்னிலைமைக்குக் கொண்டு வந்து வைப்பது உங்கள் தயவு என்ருர்கள். இவர்களுள் தீனதயாளு, காந்தி, தாயு இம்மூவர்கள் மனம் பதைத்த பதப்பை யாரால் கணக்கிடக்கூடும். சொற்பம் குழப்பம் நின்றதும் வைத்தியர் காலில் ஒரு சிறு சிரங்கு புறப்படுகின்றது. அது இன்னும் பழுக்கவில்லை. காயாக விருக்கின்றபடியாற்ருன் இவ்வளவு குத்த

ஹும் வலியும். அநேகமாய்ப் பழுதுவிட்டது. மேலுக்கு இன்று ஒரு எண்ணெய் கடவி போஸ்தக்காய் போட்டு வெந்நீர்வைத்து ஒற்றிடம் போட வேண்டும். வலிக்கு வெகு இதமாக விருக்கும். உள்ளுக்கும் மருந்தனுப்புகிறேன். இதை இரண்டுமணிக் கொரு முறை நான் சொல்லியனுப்புகிறபடி சாப்பிடவேண்டும். நாளைக் காலையில் 5 நாழிகைக்கு நான் வந்து அதைச் சோதித்துப் பார்க்கின்றேன். கையாடலாம். கையாடி சீழ் வெளி வந்து விட்டால் உடனே அனுகூலம் என்றே சொல்லலாம். என்று தெரிவித்து விட்டுத் தீனதயாளுவை மட்டும் தன்னுடன் ஆஸ்பத்திரிக்கு வரும்படி அழைத்துக்கொண்டு புறப்பட்டார். தான் ஒரு நாழிகைக்குள் திரும்பி வருவதாகவும் அதற்குள் எல்லாம் சித்தமாக விருக்கட்டும் என்றும் தான் வந்து தனது தந்தைக்கு பத்தியம் கொடுப்பதாகவும் தீனதயாளு சொல்லிவிட்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றான். ஊரை விட்டுச் சாலையில் வந்து வண்டியில் உட்கார்ந்ததும் வைத்தியரைப் பார்த்து,

தீனதயாளு—ஐயா, தாங்கள் என் தந்தையைப் பரிசோதிக்கும்பொழுது நான் தங்களை நன்றாகக் கவனித்துப் பார்த்தவன், ஒவ்வொருவித பரீக்ஷையிலும் தங்கள் முகம் அதிகமாக வாடிற்று. "புண்வைத்து மூடார் பொதிந்து" என்ற கொள்கைப்படி இரணம் கண்டால் அதை அறுத்தே ஆற்றவேண்டும் என்பது திண்ணம். ஆனாலிந்த விஷயம் சுலபமான விஷயமா? சுலபம் என்றிருந்தால் அதற்குத் தகுந்த தைரியம் உங்களிடம் விளங்குவதாக எனக்குத் தோன்றவில்லையே. ஏதோ நான் சிறு பிள்ளைத் தன்மையால் அதிக பயம் பயப்படலாம். எல்லாவிதத்திலும் என்னை விட என் தந்தையின் நன்மையைக் கருதினவன் ஒருவனுமில்லை. ஆகையால் உள்ளதையுள்ளபடி ஒன்றும் ஒளியாமல் என்னிடம் தாங்கள் சொல்லலாம்.

வைத்தியர்—தாங்கள் சிறுவர் என்றாலும் உலகத்தில் நன்றாகப் பழகினவர்கள். உங்களுடைய முகம் எனக்கு பார்க்கவே முடியவில்லை. இந்த விஷயத்தில் தாங்கள் வெகு ஏக்கங்கொண்டிருக்கின்றீர்கள். உங்கள் நன்மைக்காகவே ஈசன் உங்கள் தந்தை

யைப் பிழைப்பிக்க வேண்டும். என்னைப்பற்றி பல பெயர்கள் பல விதமாக தங்களிடம் சொல்லியிருக்கலாம். ஏனெனில் வைத்தியன் என்றிருந்தால் ஒருவன் எல்லாருக்கும் நல்லவனாக விருப்பது வெகு வருத்தம். நிற்க தங்களைப்போ லொருவரை நானிதுவரையில் கண்டதேயில்லை. உங்கள் பணத்தில் எனக்கு ஒருதூசு கூடவேண்டாம். என் மனப் பூர்வமாகச் சொல்லுகின்றேன். நான் ஒருவித பிரயோஜனத்தையும் அபேக்ஷிக்காமலே என்னென்ன செய்ய வேண்டுமோ அவ்வளவையும் செய்து தங்கள் தகப்பனாரை சௌக்கியப்படுத்த கடமைப்பட்டவனாக விருக்கின்றேன். இரவோ பகலோ எந்தச் சமயமோ அந்தச் சமயத்தில் நான் தங்களுடன் கூட நின்று தங்கள் தந்தைக்கு வைத்தியம் பண்ணுகின்றேன். இதைப் பற்றித் தாங்கள் சந்தேகமே படவேண்டாம். தங்கள் தந்தையின் நோய் வெகு பலமான நோய். நீர்ரோகம் வெகு ஜாஸ்தியாக விருக்கின்றது. அதை நீர்ப்பரீக்ஷையால் நான் அறிந்தேன். இரணம் கண்டிருக்குமிடமோ உள்ளங்கால், வெகு அபாயமான ஸ்தலம். நான் கையாடி ஏதாவது பிசகு வந்துவிட்டால் தங்கள் சாபம் எனக்கு வந்துவிடுவதுடன் என் குடியே மூழ்கிவிடும். ஏனெனில் எல்லாரையும்போல் நான் தங்களை யெண்ணவில்லை. அதிக நன்மையும் அதிக செல்வாக்கும் உள்ளவர்கள் தாங்கள்; அன்றியும் மனித யத்தினத்தில் என்ன செய்யவேண்டுமோ அதில் சிறிதும் குறைத்தோம் என்ற பெயர் நம்மிருவருக்கும் வரக்கூடாது. ஆகையாற்றான் தங்கள் தந்தை நோய்விஷயமாக ஒருவித கூலியும் எனக்கு வேண்டாம் என்று நான் சொன்னேன். பெருஞ்சீரகவல்லியில் பெரிய டாக்டரிருக்கின்றார். அவருக்குத் தாங்கள் எனக்குக் கொடுக்கிற கூலியைக் கொடுத்தழைத்து வந்து காட்டினால் என் மனத்திற்கு வெகு திருப்தியாக விருக்கும். கையாடுவதில் அவருக்கு அதிக பழக்கம். அவரே வந்து கையாடிவிட்டால் நான் அருகே நின்று எல்லாம் பார்த்துக்கொண்டு அவரிடம் கேட்கவேண்டியவைகளைக் கேட்டுக்கொண்டு வைத்தியத்தை நடத்துவேன். என் மனப்பூர்வமாய் நானிந்த விஷயமாகத் தங்களிடமிருந்து ஒன்றும் அபேக்ஷிக்கவில்லை. இன்றையத்தினமே கையாடலாம். நான் செய்தால் எங்கு ஏதாவது பிசகு நேரிடுமோ என்ற

தைரியக்குறைவால் பின்வாங்குகின்றேன். மற்ற விடமாக விருந்தால் இதற்குள் எல்லாம் செய்து முடித்து கட்டுக்கட்டி வந்திருப்பேன். இந்த இடத்தில் எனக்கு ஏதோ மனம் கூசுகின்றது. எப்பொழுது பெரிய டாக்டர் வருகின்றாரோ அப்பொழுது எல்லா காரியங்களையும் விட்டு அவர் பிடிக்கின்ற நோய்விஷயமாக நாங்கள் கை கட்டிக்கொண்டு நிற்கவேண்டியது எங்கள் கடமை. ஆகையால் தாங்கள் ஒன்றும் சிந்திக்கவே வேண்டாம். நான் கொடுக்கும் தைலத்தைமேற்பூசி சுடுதண்ணீர் ஒற்றிடம் கொடுத்துக் கொண்டிருக்கத் திட்டஞ்செய்துவிட்டு தாங்களே சென்று பெருஞ்சிரகவல்லியில் டாக்டரைக்கண்டு நாளை யவர் வந்துசேரும் வழியைப் பாருங்கள். கட்டி அநேகமாய்ப் பழுத்துவிட்டபடியால் இனித் தாமதிப்பது பிசகு. நீர்ரோகமு மிருக்கின்றபடியால் எவ்வளவு வேகமாக சிகித்சை செய்கின்றோமோ அவ்வளவும் நன்மை, என்றார்.

தீனதயாளு:—ஐயா, உள்ளதை உள்ளபடி சொன்னீர்களே. வெகு திருப்தி. எத்தனையோ பணம் வருகின்றது, செலவுமாகின்றது. பணத்தாசை கொண்டவன் நான் என்றாவது, அல்லது அதைச் செலவிட மனம் பின் வாங்கினவன் என்றாவது எண்ணவே வேண்டாம். வைத்தியர்களிடம் கொடுத்ததைத் திரும்பி வாங்குவது என் வழக்கமேயில்லை. ஆகையால் நான் கொடுத்தது தங்களுக்கே இருக்கட்டும். இன்னும் வேண்டுமென்றால் என்ன கேட்பீர்களோ அதைக் கொடுக்க சித்தமாக விருக்கின்றேன். மருந்தைக் கொண்டுபோய் அதைத் தந்தைக்குப்போட ஏற்பாடு செய்துவிட்டு நான் உடனே பெருஞ்சிரகவல்லி போய் பெரிய வைத்தியரை ஒரு நொடியில் அழைத்து வருகின்றேன். இனி நான் தங்களைப் பார்க்கமாட்டேன். பெரிய வைத்தியர் இந்த வழியாகத் தான் சணற்கால் வருவாராகையால் அவர் வருகின்றார் என்ற சமாசாரம் தங்களுக்குத் தெரிந்ததும் தாங்கள் கூடவே வரவேண்டும்.

டிரஸ்ஸர்:—அதைப்பற்றி உங்களுக்கு விசாரம் வேண்டாம். என் சேவகனைத் தங்கள் வண்டியிலேயே நான் அனுப்புகிறேன். பெரிய வைத்தியர் ஒப்புக்கொண்டுவிட்டார் என்றால் என் ஆளைத்

திரும்பி அனுப்பிவிடுங்கள். நான் அவரிங்கு வருவதற்கு ஜாம நேரத்துக்கு முந்தியே சணற்காலுக்குப்போய் தங்கள் தந்தையிடம் காத்துக்கொண்டிருப்பேன்.

தீனதயாளு வேங்கையூரைவிட்டு மருந்துடன் புறப்பட்டு தனது தந்தையிடம் வந்து அவருக்கு மருந்துமேற் பூசவும் உள்ளுக்குக் கொடுக்கவும் ஏற்பாடு செய்துவிட்டு ஒரு நிமிஷங்கூடத் தாமதமின்றிப் பெருஞ்சிரகவல்லிக்குப் புறப்பட்டான். தாயுவும் காந்தியும் சாப்பிட்டுவிட்டுப்போ என்று என்ன வேண்டியும் இவன் கேட்கவில்லை. மகாதேவர் தம் கால்வலியில்கூடக் கவனமின்றி "அப்பா குழந்தாய்! உடம்பைக் கெடுத்துக்கொள்ளாதே. தாயு பேச்சைத்தட்டாதே. அவள் எப்பொழுதும் நாம் வணங்கவேண்டியவள். நானோ கீழே படுத்துவிட்டேன். இனி உன் தேகத்தில் கவலையுள்ளவள் அவள் தான் அப்பா!" என்றார். இப்படி யிவர் சொல்லிக்கொண்டிருந்த பொழுதே தாயு ஏதோ வீட்டிலிருந்த உணவை ஒரு சிறு சவுக்கத்தில் முடிந்து அவன் முன் கொண்டு வந்து வைத்தாள். தீனதயாளுவை வளர்த்த அருமை யிவளுக்கல்லவோ தெரியும்! தந்தை தன்னைக் கட்டளையிட்டபடியே தீனதயாளு அவ்வுணவை யெடுத்துக்கொண்டு தனது வண்டியிலேறி வெகு வேகமாய் வண்டியை ஓட்ட வண்டிக்காரனைத் திட்டஞ் செய்துவிட்டுப் புறப்பட்டான். இவன் மனத்திலிருந்த விசாரம்ஈசனால்கூட கணக்கிடமுடியாது. எந்த நிமிஷத்தில் வேங்கையூர் வைத்தியர்பெரிய வைத்தியர் வந்துதான் கட்டியைக் கையாடவேண்டும் என்று சொன்னாரோ அந்த நிமிஷத்திலேயே இவன் உயிர் பாதி போய் விட்டதென்று சொல்லலாம். சாதாரண கட்டியாக விருந்தால் சிறு வைத்திய ரஞ்சார்! பெரிய கட்டி! ஏதோ ஆபத்து! ஆகையால் டிரஸ்ஸர் பயந்தார், என்ற பீதி தீனதயாளுவின் உள்ளத்தில் அதிகமாகத் தோன்றிற்று. இவன் முன் வண்டியின் பெட்டியின்மேல் சிறு வைத்தியருடைய சேவகன் உட்கார்ந்து கொண்டு வண்டிக்காரனுடன் என்னென்னவோ பேசிக்கொண்டிருந்தான். ஒன்றும் தீனதயாளுவின் காதில் விழவேயில்லை. எந்த வைத்தியம் பண்ணினால் தனது தந்தை பிழைப்பார் என்ற யோசனையிலேயே இவன் உழன்று கொண்டிருந்தான். பெருஞ்சிரகவல்லி ஒரு நாழிகை

03;39
MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS

வழி தூரமிருக்கும்பொழுது வண்டிக்காரன் "ஐயா, பகல் பாதி பொழுதுக்கு மேலாய்விட்டது. உங்களைப் பார்த்தால் இன்னும் பல்லுகூட விளக்கவில்லை போலிருக்கின்றதே. இவ்விடம் ஆற்றங் கரை ஒழிந்திருக்கின்றதே. கொஞ்சம் வண்டியை நிறுத்துகின் றேன். ஊருக்குள் போகும் முன் உணவையிங்கேயே புசித்துவிட் டால் நமது வேலையில் ஒரு நாழிகை அதிகமானாலும் குறைவானு லும் இந்தக் காரியம் அதற்கு விலக்காய் நிற்காது" என்றான். அதற்குத் தீனதயாளு நீங்களிருவரும் என்ன செய்தீர்கள் என, அவர்கள் நாங்கள் காலையில் பழைய அமுது சாப்பிட்டு விட்டோம். இரவு வரையில் எங்களுக்குப் போஜன விசாரமில்லை, என்றார்கள். விசாரங்கள் எவ்வளவோ யிருப்பினும் அக்காலத்தில் வண்டிக்காரனை யும் சிறு வைத்திய சேவகனையும் பற்றி முதல் விசாரம் தீனதயா ளுவுக்கு வந்ததே. அவன் குணம் என்ன உத்தம குணம்! சோற்று மூட்டை யொன்றைக் கையுடன் வைத்திருக்க இவனுக்கு இஷ்ட மில்லை யாகையால் ஆற்றங்கரையில் வண்டியை நிறுத்தி வாயில் லாச் சீவன்களாகிய மாடுகளுக்கு நீர் காட்டிச் சொற்பம் வைக்கோல் போடத் திட்டஞ் செய்து தீனதயாளு ஆற்றிலிறங்கித் தந்த சுத்தி பண்ணி ஸ்நானஞ் செய்து தனது அனுஷ்டானங்களை முடித்துக் கையிலிருந்த உணவில் பாதி சாப்பிட்டுவிட்டு மிகுந்து நின்றதை வண்டிக்காரனிடங் கொடுத்து நீங்களிருவரும் ஆளுக்கு ஒரு வாயா வது சாப்பிடுங்கள் என்றான். அவர்களும் அப்படியே செய்தார் கள். மறுபடி வண்டி பூட்டி பெரிய டாக்டர் வீட்டுக்கு இம் மூவரும் 20-நாழிகைக்கு வந்து சேர்ந்தார்கள். அவர் ஹூணை வைத்தியர். சஸ்திரங்களைக்கொண்டு காயங்களை ஆற்றுவதில் வெகு கீர்த்தி பெற்றவர். எச்சமயத்தில் யார் வந்து அழைத்தாலும் அவனுக்கு வெகு பொறுமையுடன் பதில் சொல்லி அவனிஷ்டப் படி நடக்கப்பட்டவர். தனது சிரமத்துக்குத் தக்கபடி கூலிவாங் கப்பட்டவர், என்றாலும் புத்திமானுகையால் தான் எடுத்துக் கொண்ட வியாதி சௌக்கியப்படுகிறவரையில் அதில் முற்றிலும் கவலையாக இருக்கப்பட்டவர். தீனதயாளு லௌகிகத்தில் வெகு சாமர்த்திய முள்ளவனுகையால் அவன் அவர் வீடு சேர்ந்ததும் அவ ரைக்கண்டு தான் வந்த காரியத்தை எவ்வளவு குறைந்த சொற்

களால் விவரமாகச் சொல்லவேண்டுமோ அவ்வாறு சொல்லி அவர் உதவியை வேண்டினன். அவரும் தனது முறைப்படி கூலி விஷயங்களைப் பேசிக்கொண்டு மறுநாள் காலை 7 நாழிகைக்குள் சணற்கால் வருவதாகச் சொல்லி அவனை விடைகொடுத்தனுப்பினர். வந்த காரியம் முடிந்ததும் தீனதயாளு புறப்பட்டு வெகு வேகமாகத் தனது தந்தையிடம் வந்து சேர்ந்தான். இவன் வந்த ஒரு நாளைக்குள் இவன் பட்ட விசாரமும் இவன் செய்த ஏற்பாடுகளும், எல்லாரும் வியப்படையத் தக்கவைகளாக விருந்தன. இவனல்லவோ சற்புத்திரன். தம்மாலியன்ற மட்டும் முயன்று அப்புறம் ஈசனிருக்கின்றார் என்று விடுவது மனதிற்கு எவ்வளவு திருப்தி. மகாதேவரும் இதற்குத்தான் என் குழந்தைக்கு நான் தந்தியடிக்கச் சொன்னது, இத்தனை பெயர்கள் என்னைக் காத்துக் கொண்டிருந்தார்களே, இவர்களில் யாருக்காவது காலில் வந்திருக்கும் கட்டி விபரீதமான கட்டி, அதற்கு பெரிய டாக்டர் வந்துதான் பார்க்க வேண்டும் என்று தோன்றிற்று, என்று சொன்னர். அன்று இரவுப் பொழுது போனல் மறுநாட் காலையில் டாக்டர் வந்து கட்டியைக் கீறி விடுவார் என்றும், சீழ் வெளியாய் விட்டால் அப்புறம் வலியும் நின்றுவிடும் என்றும், தீனதயாளு தனது தந்தைக்குத் தைரியஞ் சொல்லிக் கொண்டு அவர் சமீபத்தில் காலுக்குத் தைலம் தடவிக் கொண்டும் போஸ்தக்காய் வெந்நீர் ஒற்றிடம் கொடுத்துக் கொண்டுமிருந்தான். மகாதேவரும் சொற்ப நாழிகை யிவனுடன் பல சங்கதிகளைப் பற்றிப் பேசி விட்டு வெந்நீர் இதமாய் ஒற்றப்பட்ட காரணத்தாலும் கட்டி அநேகமாய் பழுத்துவிட்ட படியாலும் கொஞ்சம் கண்ணயர்ந்தார்.

அன்றிரவு மகாதேவர் வீட்டில் அவர் நோயை அகற்ற வேறு சில ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருந்தன. மகாதேவர் பல தேசங்களில் உத்தியோகம் பண்ணி விட்டு சணற்கால் வந்தவர் என்று சொல்லி யிருக்கின்றோமே. இவர் வெகு கௌரவமான வம்சத்தில் பிறந்தவராயினும் ஏழையாய் உத்தியோகம் பண்ணச் சென்றவர். 20, 25 வருஷகாலம் உத்தியோகம் பண்ணி நன்றாகச் சம்பாதித்து விட்டுத் தமது பணக்கார தாயாதிகள் குடியிருந்த சணற் காலிலேயே தாமும் 10,000 ரூபா செலவு செய்து பெரிய மாளிகை

ஒன்று கட்டிக் கொண்டு அவ்வூரிலேயே நிலங்கள் வாங்கிக் கொண்டு அவ்வூர் தனவான்களைப் போலத் தாமும் அவ்விடத்தில் உபகார சம்பளம் பெற்று வந்து சேர்ந்தவர். இவர் அவ்வளவு பாக்கியவானாக வந்தார் என்பதைக் கண்டு இவரிடம் அசூயைப்பட்டவர்கள் சிலருண்டு. அவர்களில் யாராவது ஒருவன் மகாதேவருக்குச் சூனியம் வைத்திருக்கலாம் என்பது காந்தி முதலிய பெண்களின் அபிப்பிராயம். அதை யவர்கள் தீனதயாளுவிடம் அவன் வந்த அவ்விரவே தெரிவித்திருந்தார்கள்; அவனுக்கு இவ்வித அபிப்பிராயங்களில் எள்ளளவேனும் நம்பிக்கையேயில்லை. தனது மனத்தின் உறுதி எவ்வாறாக விருப்பினும் பெண்கள் மனம் கோழை மனம். அவர்களுக்கு என்ன செய்தால் தைரியம் வருமோ அந்தப்படி செய்ய வேண்டும், என்று கருதி அவ்வாறு சூனியம் வைத்திருந்தால் அதை எடுக்க என்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்யத் திட்டம் பண்ணியிருந்தான். பெண்டீரும் வக்கிரமணியன் மூலமாய் ஒரு மந்திரவாதியை வரவழைத்து அவனைக் கொண்டு கழிப்பு ஒன்று கழிக்க ஏற்பாடு பண்ணி யிருந்தார்கள். மந்திரவாதியும் முதலில் செலவென்று 25 ரூபா கைப்பற்றிக் கொண்டு மாவினால் புருஷ உருவம் ஒன்று பண்ணி நடு ராத்திரியில் அதின் காலின் முள்ளொன்றை ஏற்றி அப்பதுமையை மகாதேவர் கொஞ்சம் கண் மூடிய சமயம் பார்த்து அவர் தலை முதல் கால் வரையில் சில மந்திரங்களை ஓதிக்கொண்டு சுழற்றி ஒரு முச்சந்தியில் கொண்டு போய் போட்டு வந்து இன்னும் 10 ரூபா வாங்கிக் கொண்டு தனது இருப்பிடம் போய்ச் சேர்ந்தான். இவ்வண்ணம் அப்பதுமையைச் செய்ததின் கருத்து சூனியம் வைத்தவனுக்கு அவ்வண்ணம் அவஸ்தை சம்பவிக்கட்டும் என்றும் அவன் வைத்த சூனியத்தின் பலத்தாற்றான் மகாதேவருக்குக்காலில் முள்தைத்த படியால் அம்முள்ளாலுண்டாகிய வியாதி இவ்வித மந்திரத்தால் நீங்கி விடட்டும் என்பதாம்.

இது முடிந்ததும், காந்தி தீனதயாளுவைக் கூப்பிட்டு, "குழந்தாய்! இன்றிரவு கழிப்புக் கழித்தாய் விட்டது, நாளைக்காலையில் டாக்டர் வரப்போகிறார். இன்னும் உன் தந்தை விஷயமாய்ப் பார்க்க வேண்டியது ஒன்றே ஒன்று மிகுந்திருக்கின்றது. நமது ஊரிலிருந்து ஒரு காதவழி தூரத்தில் மதகடி என்ற கிராமமிருக்கின்றது. அதில்

வெகு கெட்டிக்காரனுக ஒரு ஜோஸ்யனிருக்கின்றுனும்; அவனைக் காண யாராவது ஒருவன் போனுல் அவ்வண்ணம் வரப்பட்டவனைக் காணும்பொழுதே அவன் காரியம் இன்னதென்று சொல்லி விடுகின்றுனும். நாளையத் தினம் நல்ல நாள் உன் ஜாதகத்தையும் அவனுக்கு அனுப்ப வேணும். உன் ஜாதக ரீதியாகவாவது அல்லது அவர் ஜாதக ரீதியாகவாவது இப்பொழுது ஒன்றும் பயமில்லையென்று அந்த ஜோஸ்யன் மட்டும் சொல்லி விட்டால் நமக்கு அப்புறம் பயமேயில்லை. அதற்கு ஏற்பாடு பண்ண வேண்டும்'' என்றுள். "இதற்கென்ன, நாளை பெரிய டாக்டர் வந்து காலைப் பார்க்கட்டும். அதுவரையில் என் புத்தி ஒன்றிலும் பிரவேசியாது, அந்தக் காரியம் நடந்தபின் மேல் எனக்குத் தாங்கள் ஞாபகப் படுத்துங்கள், நான் தப்பாமல் ஏற்பாடு செய்கிறேன்'' என்று தீனதயாளு சொன்னுன். இவ்விதமாய் பலவித யோசனைகளிலும் பலவித ஏற்பாடுகளிலும் அன்றிரவு ஒருவாறு கழிந்தது.

சூரியோதயமானவுடன் வேங்கையூர் வைத்தியர் பெரிய டாக்டர் வரும் முன் தாம் வந்திருந்து எல்லா ஏற்பாடுகளையும் சித்தம் பண்ணிவைக்கக் கடமைப்பட்டவராகையால் வந்து சேர்ந்தார். அதல்லாமலும் அவர் தீனதயாளுவைக் கண்டு நடுங்கிவிட்டார். எல்லாந் தெரிந்த சிறுதழலிது. நாம் பிசகி நடந்தால் நம்மை எரித்துவிடும். எவ்வளவு விரைவில் பெரிய டாக்டரைக் கண்டு அவர் வரும்படி ஏற்பாடு செய்து வந்தான் இவன் என்று அஞ்சினுர். காலப்படி நிமிஷம் தவருமல் நடக்கப்பட்டவர்கள் ஹூண வைத்தியர்கள். தீனதயாளுவிடம் தான் ஒப்புக் கொண்டபடி பெரிய டாக்டர் அன்று 7-நாழிகைக்குச் சரியாய் சணற்கால் வந்து சேர்ந்தார். அன்று வெள்ளிக்கிழமை. தியாச்சியம் ராகுகாலம் ஒன்றுமில்லாமலிருந்தன. இவைகளிருப்பினும் அவ்வைத்தியர்களவைகளைக் கவனிக்கப் பட்டவர்களல்லர். அப்படி யிருந்த போதிலும் அவைகளில்லாமலிருந்ததே ஒரு சுபக்குறியாக எல்லாரும் எண்ணினுர்கள். பெரிய டாக்டர்வந்ததும் அவர் மகாதேவரிடம் வந்துட்கார்ந்து அவரை நன்றுகப் பரீக்ஷை செய்து பார்த்து, அவர் நீரையும் சோதித்து விட்டுக் கட்டியை, நான்கு பக்கங்களிலேயும் அமுக்கிப் பார்த்தார். பிறகு தீனதயாளுவைக் கூப்பிட்டு "ஐயா, உங்களுக்கு ரத்தத்தைப்

பார்த்தால் களைப்புண்டாகாதென்றால் என்னருகாமையில் உட்காருங்கள். நீங்கள் நோயாளியின் குமாரர். எல்லாவற்றிற்கும் கூட நிற்கக் கடமைப்பட்டவர்; சிறு வயித்தியரோ எங்கள் நூல்படி என் சமீபத்திலிருந்து நான் கேட்பவைகளைக் கொடுக்க வேண்டியவர். மற்றவர்கள் ஒருவரு மிங்கு இருக்க வேண்டாம். கூட்டமே கூடாது'' என்றார். அப்படியே எல்லாரும் ஒதுங்கிவிட, பெரிய டாக்டர் மகாதேவரை நோக்கி "ஐயா, நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம், கட்டி நன்றாகப் பழுத்துவிட்டது, காயைக்கீறினாற்றான் வலி, பழுத்ததைக்கீறி அங்கு விம்மி நிற்கும் தோலை விண்டுவிட்டால் அதுவே பாதிவலியை நீக்கிவிடும்'' என்று தைரியம் சொல்லித் தமது வேலையை ஆரம்பித்தார்.' மேலாகக் கீறுவது பிசகென்றும் ஆழக் கீறினாற்றான் புண்ணாற்றல் எளிதென்றும் இவர்களின் மதம். அப்படியே சிலாக்கை ஆழவிறக்கினதும் வழிந்த சீழ் அபரிமிதம். மருந்து நீராலும் எண்ணெயாலும் பீச்சாங்குழலடித்து சீழை வெளிப்படுத்தி இன்னும் ஏதாவது நின்றாலும் அதெல்லாம் வெளிவரும்படி திரியேற்றிக் காயங்கட்டிப் பெரிய வைத்தியர் சிறியவரிடம் அக்காய விஷயமாய் அவர் நடத்தவேண்டிய முறைகளைச் சொல்லி உள்ளுக்கு ஔஷத ஜாபிதாவும் கொடுத்தார். பிறகு பெரியவரிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்து தீனதயாளுவைத் தனிமையிலழைத்துப்போய் "ஐயா, நான் செய்யவேண்டியதைச் செய்துவிட்டேன். உங்களுடைய தந்தைக்கோ பலமான நீர்ரோகம். இந்த ரோக மிருக்கும்பொழுது பிளவை காண்பது நற்குறியன்று. அதனுடன் அபாயஸ்தலம் என்று சொல்லப்படும் வலங் குதிகாலில்கண்டிருக்கின்றது. பழுத்த கட்டியை அறுத்தே தீர்க்கவேண்டும். அறுக்காவிடில் சீழ்ரத்தத்தில் கலந்து விஷம் வைத்துக் கொல்லுவதுபோல் ஆளைக் கொன்றுவிடும். ஆகையால், கட்டியை அறுத்ததில் யாதொரு பிசகுமில்லை. நீர் ரோகத்துடன் கட்டி வந்திருப்பதால் நினைத்தவிடமெல்லாம் புரையோடும். அதனுடன் தங்கள் தந்தை வெகு துர்பலமாக விருக்கின்றார். அவர் பென்ஷன் வாங்கிய காலம் முதல் அதிக வியாயாமமின்றி தேகத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கின்றார். ஆகையால் நீங்கள் வெகு ஜாக்கிரதையாகப்

பார்க்கவேண்டும். ரத்தத்தைப் பரிசுத்தம் பண்ணவும் புரையேறு மலிருக்கவும் நான் மருந்துகள் எழுதிக் கொடுத்திருக்கின்றேன். அம்மருந்தைக் குறித்த காலத்தில் கொஞ்சமேனும் தப்பாமல் அவரைப் புசிக்கச் செய்யவேண்டும். அமாவாசைக்கு இன்னும் நான்கு தினங்க ளிருக்கின்றன. எங்கள் வைத்தியம் இங்கிலீஷ் முறையென்றாலும் நாங்களும் அமாவாசை பூரணை இவைகளைக் கனத்த நாட்கள் என்று ஒப்புக்கொள்ளுகின்றோம். இனி என் சகாயம் ஒன்றும் உங்களுக்கு வேண்டாம். வேங்கையூர் வைத்தியர் எல்லாம் சரிவரச் செய்வார். அமாவாசை வரையில் ஒருவிதப் பிசகுமின்றி மருந்துகள் பிடித்து காயம் புரை யோடாமல் வந்தால் தங்கள் தந்தைக்குப் பயமேயில்லை. இன்னுமொரு சங்கதி: தங்கள் தந்தையின் தேகம் பருத்த தேகம். வாத சரீரமுமாம்; பலக்குறைவாகையால் படுக்கையில் ஒரே பக்கத்தில் படுத்திருந்தால் ஒரு பக்கமாகச் சுரக்கும். அப்படி யில்லாமல் அடிக்கடி படுக்கையில் அவர் திரும்ப ஏற்பாடு செய்யுங்கள். என் சகாயம் அவசியம் என்று தோன்றுமே யானால் சொல்லியனுப்பினால் நான் சித்தமாக வருகின்றேன். இந்த நோயைத் தீர்த்து வைப்பதால் எனக்கும் கீர்த்தியுண்டு" என்று சொல்லிப் போய்விட்டார்.

தீனதயாளுவுக்கு விசாரம் வெகு அதிகமாய்விட்டது. கனத்த தினமாகிய அமாவாசை போகவேண்டும் என்று டாக்டர் சொன்னதும், இனி நமது தந்தையை நாம் உயிருடன் காண்பதெல்லாம் நான்கு நாட்கள் தான் என்று தன் மனத்திற் கலங்கிவிட்டான். அந்த நிமிஷம் முதல் தனது தந்தையிடமவன் இடைவிடாது காத்திருந்து மருந்துகள் விஷயத்திலும் பத்திய விஷயத்திலும் ஒரு விதக் குறைவுமின்றி நடந்துவந்தான். டாக்டரை யனுப்பிய பிறகு தனது ஜாதகத்தையும் தன் தந்தை ஜாதகத்தையும் மதகடி ஜோஸ்யருக்கனுப்பினான். அவ்விடம் போய்த் திரும்பினவன் ஜோஸ்யர் இன்னும் எட்டு நாட்கள் கழிந்த பிறகு இவ்விரு ஜாதகங்களையும் தம்மிடம் கொண்டுவந்தால் தாம் பார்ப்பதாகவும், அதற்கு முன் பார்க்க முடியாதென்றும் சொல்லியனுப்பி விட்டார். இப்படி இவர் சொல்லி யனுப்பியது காந்திக்கும் தீனதயாளுவுக்கும் பெருங் குழப்பமாக விருந்தது. அதற்குள் தாயு ஓடிவந்து "அப்பா,

குழந்தாய், இனி உனக்குப் பைத்தியமா, எப்பொழுது எட்டுநாளைக் குப் பிறகு ஜோஸ்யன் இந்த ஜாதகங்களைக் கொண்டுவாவென்றானோ அப்பொழுதே இந்த உயிருக்கு எட்டுநாளில் கண்டம் ஒன்று இருக் கின்றது என்று அருத்தம். அக்கண்டம் தப்பினால் பிறகு பார்ப் பேன் என்று சொல்லி யனுப்பிவிட்டான். அன்றியும் நேற்று இரவு கழிப்புக் கழித்தபொழுது, நீ கவனித்தாயோ இல்லையோ, உனது தந்தை படுத்துறங்கும் அறைக்கு நேராக ஆகாயத்தில் ஒரு சாகுருவி கத்திக்கொண்டு பறந்தது. அதைக் கேட்டது முதல் என் மனம் விட்டு விட்டது. குழந்தையிடம் சொன்னால் எங்கு அதிகமாய் ஏங்கிவிடுவானோ என்றிருந்தேன். அந்த ஜோஸ் யனும் அப்படி சொல்லி யனுப்பிவிட்டான். டாக்டரும் கனத்த நாள் தப்பவேண்டும் என்று சொல்லிவிட்டார்.

தீனதயாளு—அம்மா, உங்களைப்போன்ற பெண்களுக் கியல் பான அறியாமை விடுகிறதேயில்லை. நமது கிரகத்துக் கடுத்த பெருமாள் கோயிலில் ஓர் ஆயிரம் சாகுருவி வந்தடைகின்றன. அவைகள் எல்லாம் இரவில் கத்திக்கொண்டே யிருக்கின்றன. அதற்காகப் பயப்படவேண்டியதாக இருந்தால் தினந்தோறும் 100 சாவு இந்தக் கிராமத்தில் நடக்கவேண்டும். வீணாக நீ பிதற்றாதே.

தாயு—நான் அப்பொழுதே வேண்டாம் தம்பி, நமக்கு இந்த வீடு வேண்டாம், இது சந்துக்குத்து, சந்துக்குத்து, என்று இடித் திடித்துச் சொன்னேனே. என் சொல்லைக் கேட்டானா உன் தந்தை. ஒருகால் அந்தக் குற்றமாக விருக்குமா ?

தீனதயாளு—அம்மா, உனக்கு இதென்ன வீண்பைத்தியம். ஒரு ஊர் என்றிருந்தால் சந்தில்லாமற் போகுமா. சந்துவீட்டுக்கும் ஒரு யஜமான் ஏற்படத்தான் வேண்டும். நல்லது இந்தச் சந்து வீட்டிற்றானே போனவருஷம் 11 கலியாணங்கள் 12 பூணூல்கள் ஒரே பந்தலில் நடத்தினர். சந்துக்குற்றம் என்றிருந்தால் சுபங் கள் நடக்குமா.

தாயு—அப்பா, குழந்தாய், அந்த கலியாணங்கள் தான் உன் தந்தையை இப்படி செய்துவிட்டன. உனக்கு இன்னும் காதில் விழவில்லையா ? உனது தந்தைக்கு கடன் அதிகமாய் விட்டதாம்.

கலியாணத்திற் குவிந்த கடன் 5000. வீடு கட்டுவதிலுண்டான இரணம் 5000-க்கு மேலாம். இவ்வளவு கடனை எப்படி அடைப் போம் என்ற ஏக்கமே உன் தந்தையின் பிணிக்குப் பாதிக்காரணமாம்.

தீனதயாளு—நல்லது இந்த சங்கதிகளைப் பற்றி இப் பொழுது ஒன்றும் பேசாதே. கடனிருந்தால் என்ன. அதை அடைக்கத் தகுந்த ஆஸ்தியில்லையா. நல்லது என்ன விதமாய்க் கடன் வந்தது! நல்ல விஷயத்தில் செலவிட்டுத்தானே வந்தது. அதில் என்ன பிசகு.

தாயு:—என்ன மனதடா உன் மனது. ஒரு விஷயத்தைப் பற்றியும் வாயைத் திறவாதே என்கிறாயே. அதற்கென்ன இன்னு மதிகமாகக் கொடுத்தால் கீழத்தெரு வைதீகர்களெல்லாரும் மகா தேவரைப்போல் நல்லவர் உண்டா என்கின்றார்கள். வைதீகத்தில் செலவிட்டே உன் தந்தை யிப்படியானார். நாளை நீ என்ன செய்யப் போகின்றாய்.

தீனதயாளு:—அம்மா, நீ யென்ன சமய மறியாமல் பேசுகின் றாய். ஒரு பெரியவர் மலை சாய்ந்ததுபோல் நோயால், படுத்திருக் கின்றார். இப்பொழுதுதானா இவ்விதமாக வார்த்தையாடுவது. அதோ அப்பா ஏதோ எழுந்திருக்கின்றார். ஜலமோசனத்துக்குப் போக வேண்டும்போல் காண்கின்றது, என்று சொல்லிவிட்டு ஒரு பித்தளைச்சட்டி எடுத்துவந்து அவரண்டை வைத்து ஒதுங்கிநின் றான். அவன் நினைத்தது உண்மையே. மகாதேவருக்கு நீர்ரோகம் என்று சொன்னோமே. அது அதிகரித்துக்கொண்டே இருந்தது. அப்பொழுது இறங்கிய நீர் மூன்று நான்கு பெயர்களுடைய நீரின் அளவாக விருந்தது. இதைக் கண்டதும் தீனதயாளு வாடிவிட்டான். மருந்துகள் குறித்த காலம் தவறாமல் ஏற்றிக்கொண்டே வந்தான் சிறு டாக்டர் காலையும் மாலையும் வந்து கட்டவிழ்த்து மறுபடி முறைப்படி காயத்தைக் கழுவிக் கட்டிப்போவார். காயம் வெகு நன்றாக ஆறிக்கொண்டே வந்தது. வீக்கமும் வாடிற்று. நீர் இறங் குவதுமட்டும் நிற்கவில்லை. சிறு வைத்தியரே ஒரு தடவை பெருஞ் சிரகவல்லி சென்று பெரிய வைத்தியரிடம் கலந்துபேசி நீரை நிறுத்த இன்னும் பலமான மருந்துகள் வாங்கிவந்தார். பெரிய

டாக்டரும் இன்னும் ஒரு முறை வந்து பார்த்துச் சென்றார். இந்த முறை டாக்டர் முகமும் வாடிற்று. அவர் தீனதயாளுவைப் பார்த்து "ஐயா, உமது தந்தையின் காயம் வெகு அழகாக வாடி ஆறிவருகின்றது. நீர்ரோகம் இன்னும் பிடிபடவேயில்லை. கனத்த தேகத்தில் நீர்ரோகம் எளிதில் நமது உத்தேசப்படி அடங்காது. இதுவரையில் பலமான மருந்து என்னென்ன கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவோ அவ்வளவையும் நான் கொடுத்திருக்கின்றேன். நாளை அமாவாசை. நாளை ஒருபொழுது தப்பினால் உமது தந்தைக்குப் பயமேயில்லை. வெகு ஜாக்கிரதையாகப் பார்த்து வாருங்கள். அப்புறம் ஈசனிருக்கின்றார்' என்றார். இனிமேல் சொல்லவேண்டியது என்ன விருக்கின்றது. தெய்வ யத்தினத்தால் மகாதேவர் பிழைக்க வேண்டுமே யல்லாது மனிதயத்தினத்தால் முடியாதென்பது கருத்து. அமாவாசையும் வந்தது. அன்று வழக்கம்போல மருந்துகள் கொடுக்கப்பட்டன. ஒருவித பயத்துக்கு இடமில்லாமலே யிருந்தது. அமாவாசை கழிந்துபோகவே எல்லாருக்கும் கொஞ்சம் தைரியம் உண்டாயிற்று. மகாதேவரும் "என்ன குழந்தாய், நான் பிழைப்பேனா? டாக்டர் என்ன சொல்லுகின்றார்?' என்றார். அன்றியுமவர், "இனி எனக்கு என்ன இருக்கின்றது. நான் இவ்வுலகத்தி லடையவேண்டிய சுகங்கள் எல்லாம் அடைந்தாய்விட்டன. மறுமைக்குவேண்டிய சுகங்களும் ஏதோ தேடிக்கொண்டுவிட்டேன். உன்னைமட்டும் குஞ்சும் குழந்தையுமாக இவ்வண்ணம் விட்டுப்போகிறேனே என்ற விசாரம் மட்டு மிருக்கின்றது" என்று சொல்லிச் சொற்பம் துக்கப்பட்டார். அதற்குத் தீனதயாளு வேண்டியபடி ஆறுதலை சொல்லி ஒன்றுக்கும் பயப்படவேண்டாம், அமாவாசையும் கழிந்துவிட்டபடியால் இனிப் பயமிருக்காதென்றான். காந்தி தீனதயாளுவைத் தனிமையிலழைத்து "எல்லாவற்றிற்கும் கொடுக்கல் வாங்கல் கணக்கு என்னவென்று உன் தந்தையைக் கேள். வாயும் வார்த்தையுமாக விருக்கும்பொழுதே கேட்டுக்கொண்டால் எல்லாவற்றிற்கும் நன்மை" என்று ஏவ, தீனதயாளு "ஆகா! நொந்த தேகத்தைக் காக்கை கொத்துவதுபோல் இத்தருணத்திலா என் தந்தையை நான் கொடுக்கல் வாங்கல் கணக்குக் கேட்கின்றது. லாபமோ நஷ்டமோ என் தந்தை எனக்கிருந்தால்

போதும். அவருக்கே ஆபத்து வந்ததென்றால் எந்தக் கணக்கு எப்படிப்போனாலென்ன" என்று சொல்லிவிட்டான். இப்படியிருக்க அமாவாசை கழிந்த மறுநாள் பிரதமையில் காய மவிழ்க்கும்பொழுது சீழ் உள்நோக்கிவிட்டது; வெளியில் வரவில்லை. வைத்தியர் மலைத்துநின்றார். மகாதேவர் முகம் கொஞ்சம் தெளிவாக விருப்பதாக சிலர் சொன்னார்கள். தாயுமட்டும் தூரநின்று தீனதயாளுவைக் கூப்பிட்டு "நீ நம்பாதே, வியாதி காடேறிற்று என்றும் இக்குறியைச் சொல்லலாம்," என்றாள். வைத்தியர் கட்டுக் கட்டிவிட்டு எப்பொழுது என் உதவி வேண்டுமோ அப்பொழுது சொல்லியனுப்பினால்.சித்தமாய் வருகின்றேன், என்று சொல்லி வீடு சென்றார். எல்லாரும் அன்று மகாதேவரிடம் காத்திருந்து அவருக்கு எதில் இஷ்டமோ அதைப் புசிக்கக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். நற் புசிப்பு வியாதிக்காரனுக்கு ஏது. ஏதோ ஆசை! உணவுமட்டும் செல்லுகின்றதில்லை. அன்று பொழுதுபோக ஒரு ஜாமமிருக்கும் பொழுது மகாதேவர் உதடு கறுக்க முதல் முதல் தீனதயாளு பார்த்தான். உடனே வைத்தியருக்குச் சொல்லி யனுப்பவே அவர் வரும் முன் மகாதேவருக்கு மயக்கம் வந்துவிட்டது. வைத்தியர் ஓடி வந்து இது ஜன்னியின் குறி என்று சொல்லிப் பலவித எண்ணெய்களும் தைலங்களும் தேய்த்தார். நாட்டு வைத்தியர்கள் 5 நிமிஷந்தோறும் கைபிடித்துப் பார்த்தார்கள். ஜன்னி காயத்தின் மேல் கண்ட ஜன்னியாதலால் வெகு வேகமாய் நோயாளியைக் கவர்ந்து கொண்டது. இனி ஔஷதத்தால் ஒரு பயனுமில்லை என்று எல்லோரும் அபிப்பிராயப்படும் வரையில் மேலுக்கும் உள்ளுக்கும் பல ஔஷதங்கள் கொடுத்துவந்தார்கள். மனித முயற்சிக்கு அதிகமாய்விட்டது. ரோகம் நீங்கவில்லை. சுவாஸம் அதிகமாக வாங்கலாயிற்று. இனி ஔஷதங்களை நிறுத்திச் சடங்குகளைச் சரிவர நடத்தலாம் என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படியான காலம் வந்துவிட்டது. தீனதயாளு இக்கதியும் நமக்கு வருமாவென்று திகைத்து உட்கார்ந்துவிட்டான். அதுவரையில் அவன் ஒரே முயற்சியாக விருந்து தனது தந்தைக்கு எவ்வளவோ செய்து பார்த்தும் ஒன்றும் பலிக்காமல் போய்விட்டதே என்று திகைத்துத் துக்கம் மேலிட்டுத் தயங்கினான். அப்பொழுது

அவ்வீட்டில் எங்குபார்த்தாலும் ஏக சத்தமாய் அழுகைக் கோலமாக விருந்தது. அவ்வளவு துக்கத்தையும் ஒன்று சேர்த்து தீனதயாளுவின் மனத்திலிருந்த துக்கத்துக் கொப்பிடில் அவ்வளவும் அவனுடைய துக்கத்தில் ஒரு எள்ளளவாகாது. பெண்டீர் அடித்துக் கொண்டோடிவந்து ஒரு நாழிகைக்கப்பால் போகும் பிராணனை முன்னமேயே போக்கிவிட வந்த ராக்ஷஸிகள் போல் மகாதேவர்மேல் விழுந்தழ வந்தார்கள். தீனதயாளுவோ காயம்பட்ட சிங்கம்போல் ஒரு சீறு சீறி எல்லாரையும் அப்புறப் படுத்தி "எனது தந்தை மூச்சு முற்றிலும் நின்றுவிடுகிறவரையில் ஒருவரும் இவ்வீட்டிலழக்கூடாது" என்று கட்டளையிட்டான். அப்பொழுது அங்கிருந்த காசியபசாஸ்திரி தீனதயாளுவிடம் வந்து "குழந்தாய்! இதுவரையில் உன் தந்தைக்கு நீ சிச்ருஷை இவ்வுலக வழக்கப்படி செய்தாய். இனி அவர் ஈசன்பதம் சேர என்ன செய்யவேண்டுமோ அவைகளைக் குறைவில்லாமல் செய். இதை நம்மவர்கள் பிதிருயக்ஞம் என்று சொல்லுகின்றார்கள். இத்தருணத்தில் தான் கர்ணஜபம் செய்யவேண்டும். ஓய் வெங்கட்டராம சாஸ்திரிகளே, ஏன் உட்கார்ந்திருக்கின்றீர்கள், எழுந்திருந்து மகாதேவருக்குக் காலத்தில் நடக்கவேண்டிய மந்திரங்களை நடத்துங்கள். அவர் குமாரன் சமீபத்தி லிருக்க வைதீக கிரியைகளில் ஒருவித குறையும் வேண்டாம்" என்று கட்டளையிட்டார்.

மரணவலி என்பது உலகச்சொல்லாய் வந்திருப்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அவ்வவஸ்தையிலிருக்கும் தனது தந்தைக்கு ஒருவித சிரமுமில்லாமல் அவர்மேல் ஒரு தூசுகூட படாமல் பாதுகாத்துக்கொண்டு தீனதயாளு அவர் தலைமாட்டில் உட்கார்ந்து கணீர் என்று வேதோக்தமாய் கர்ணஜபம் ஜபித்தான். அது பாதியாய்க்கொண்டிருக்கும்பொழுது மகாதேவர் சுவாஸம் நின்றது. எல்லோரும் வெளியிற்சென்று மகாதேவருடைய உயிரை வதைக்காமல் கொண்டுபோகும்படி பிரார்த்திக்கும்வண்ணம் தென் திசையை நோக்கி தர்மராஜரை வேண்டிக்கொள்ளுவதுபோல் வந்தனம் பண்ணினார்கள். இனி ஆகவேண்டியதென்ன இருக்கின்றது. மகாதேவர் வைத்தியர்கள் உதவி வேண்டாத நாடு சென்றார்.

# 7 தீனதயாளு செய்த பிதிருயக்ஞம்.

*மகவான் மேலைப் பதமுறுந்*
*தென் புலத்தார் கடனை மாற்றுவது*
*மகவா னன்றியில்லை யென வகுத்தான்*
*றெரித்துக் கண்ணுவனே.*

மகாதேவர் கண்விழியாத் தூக்கம் தூங்கவே அவருக்கு வந்த நிலைமையைப் பார்த்து மனம் வெந்தவர்கள் அவ்வீட்டிலிருந்த ஒவ்வொருவருந்தான் என்றாலும் தீனதயாளுவும் தாயும் மாளாத்துயரத்தில் மூழ்கினவர்களாகக் காணப்பட்டார்கள். வாயிலில் தென்றிசையை நோக்கி எல்லாரும் விழுந்து புலம்பிக்கொண்டு எழுந்திருந்து உட்சென்று மகாதேவர் தேகத்தைக் சூழ்ந்து நின்று பலவாறு புலம்பலானார்கள். தலைமாட்டில் தனது தந்தையின் முகத்தை நோக்கி அழுது கொண்டு "இக்கதியை எப்படி ஈசன்மனத்துடன் நமக்களித்தார்" என்று ஏங்கி யுட்கார்ந்திருந்த தீனதயாளுவைச் சிலர் கட்டிக்கொண்டு துக்கங் கேட்கின்றவாறு "குழந்தாய், நீ பட்ட சிரமமெல்லாம் வீணாயிற்றே" என்று புலம்பி யழுதார்கள். அவர் மாண்டுவிட்ட ஒரு ஜாமநேரம் வரையில் அவ்வீடு முழுமையும் ஒரே புலம்பலாகவே கேழ்க்கப்பட்டது. அக்குழப்பம் சிறிது ஓய்ந்ததும் ஊரார் நாட்டார் பெரியோர் சிறியோர் எல்லாரும் வந்து துக்கங் கேட்டுவிட்டு மகாதேவருடைய உத்தரகிரியைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். "கடல்ஞாலம் பித்துடைய தல்லபிற" என்று கவிகள் பாடியது எவ்வளவுண்மை. மகாதேவரோ மாண்டுவிட்டார். அவர் தேகம்கூட இன்னும் எடுபடவில்லை. இதற்குள்ளவருக்கு கடன் கொடுத்திருந்த பல பெரிய கனவான்களும் பந்துக்களும் அங்கு கூடி தீனதயாளுவிடம் வெகு துக்கத்துடன் துக்கம் விசாரிப்பவர்கள்போல முதல் முதல் விசாரித்துவிட்டுத் தங்களிடம்

மகாதேவர் கடன்வாங்கிய தொகையைச் சொல்லி அதற்கு ஒருவித ஏற்பாடு செய்துவிட்டுத்தான் சவத்தை எடுக்க வேண்டும் என்றார்கள். பார்த்தான் தீனதயாளு! அவனுக்கு ஒரு சங்கதியும் புலப்படவில்லை. முதலிலவின் தனது தந்தை கடன்வாங்கியிருப்பார் என்று எண்ணவே யில்லை. அப்படியேதீராது குடும்ப விஷயமாயும் புதுவீடு ஒன்று கட்டின காரணமாயும் ஏதோ வாங்கியிருக்கலாம் என்றாலும் அது மிகவும் சொற்பமாகவிருக்கும் என்று கருதியிருந்தான். அதிகக் கடன் உண்டு என்று இவன் தந்தை உடம்பு அசௌக்கியமாக விருந்தபொழுது பல பெயர்கள் எச்சரித்திருந்த போதிலும் அப்பொழுது இவன் அவ்விஷயமாக யோசிக்கவேயில்லை. இனிமேலப்படியாக அலக்ஷியம் பண்ணுதவண்ணம் மகாதேவர் சவம் எடுபடும்முன் பெருத்த கடன்காரர்கள் அவர் மூத்த குமாரனாகிய தீனதயாளுவைக் கண்டித்துக்கேட்கவே அவன் தனது தலையில் அடிபட்ட சர்ப்பம்போல் சீறி "ஐயா கடன்காரர்களே, நீங்கள் எல்லோரும் ஈட்டின்மேல் கடன்கொடுத்திருக்கிறபடியால் நானும் இந்நிமிஷம் மாண்டேன் என்றாலும் உங்கள் பணம் மோசம் போகாதே? ஈடு உங்கள் பொருளை உங்களுக்குக் கொடுக்குமல்லவா? அப்படி இருக்க நீங்கள் இவ்வளவு அகௌரவமாய் சமயாசமயம் பாராமல் கேட்பது தருமமா? என் தந்தைதானே இப்பொழுது போய்விட்டார். அவருடைய ஆஸ்தி அழியவில்லையே" என்றான். குத்துண்ட சிங்கம்போலிவன் இவ்விதமாக கர்சித்ததை அவர்கள் பார்த்துச் சொற்பம் வெட்கமடைந்து தங்கள் பொருளுக்கு மோசமில்லை என்றிருந்தார்கள். அவ்வண்ணம் அங்குண்டான அவநம்பிக்கையைத் தீனதயாளு ஒருவாறடக்கித் தனது தந்தையிருந்த நியமநிஷ்டைக்கும் அவர் புகழுக்கும் பெயருக்குமொரு விதக்குறைவுமின்றி அவருடைய உத்திரகிரியைகளைச் சரிவரநடத்தி முடித்தான். 13 நாள் காரியம் நடந்தது. அவைகளை விவரமாக இவ்விடம் சொல்வது அனுவசியம். சங்கு வென்பவன் இளைய குமாரனுகையால் அவன் தீனதயாளுவுடன் பாவனைக்குச் சடங்குகள் தோறும் நின்று வந்தான். மாந்தி வெள்ளிக் கிண்ணத்தில் பிண்டம் எடுத்தாள். முதலிரண்டு மூன்றுநாள் கிரியை முடிந்ததும் ஐம்புலத புலத்தாளாகிய காந்தி "ஐயோ! இளையாளாக என்னை

மணந்து விட்டு என் கணவன் மாய்ந்தாரே ! இனி என் சங்குவுக்கும் மாந்திக்கும் கதி என்ன. என்னதான் தீனதயாளு நல்லவன் என்றாலும் மூத்தாள் கூறு இளையாள் கூறு என்ற வித்தியாஸமில்லாமற்போமா. என் செய்வேன்" என்று ஏங்கி ஒருவருக்கும் தெரியாமல் ரகசியமாக தன்னிடமிருந்த நகைகள் நாணயங்கள் வெள்ளி பாத்திரங்கள் இவைகளை யெல்லாம் ஜம்புனாத புலத்துக்கு அனுப்பிவிட்டாள். துக்கம் ஒன்றே மேலிட்டிருந்த தீனதயாளுவுக்கும் மகாதேவர் தமக்கைகளுக்கும் யாதொன்றும் தெரியாது. ஏதோ சந்தேகங்கள் சில காரணங்களால் அப்போதைக் கப்பொழுது தோன்றிய போதிலும், அவரே போய் விட்டார், இப்பண்டங்கள் போவதைத்தானா நாமிப்பொழுது கவனிக்க வேண்டும், என்று இருந்து விட்டார்கள்.

எல்லாச் சடங்குகளும் முடிந்து கிரயக்ஞமும் நடந்தது. அன்றைய தினமும் பல வேதியர்கள் பல பாடல்களியற்றி மகாதேவர் மகிமையைக் கொண்டாடினார்கள். தீனதயாளு அவர்கள் எல்லோருக்கும் தகுந்த மரியாதை செய்தனுப்பினான். சடங்குகள் நிறைவு பெற்றதும் தனது குடும்ப நிலைமை எவ்வாறிருக்கின்றது என்று தீனதயாளு பரிசோதிக்கலானான்.

இவன் அதிகமாகத் தந்தையிட மிருந்தவனல்லனென்பதை நாம் முன்னமேயே சொல்லி யிருக்கின்றோம். அன்றியு மிவன் பகாசுரகிரியிலிருந்து வந்தது முதல் தனது தந்தையின் வியாதி, சிறிய வைத்தியர், பெரிய வைத்தியர், இவ்விஷயங்களிலேயே தனது நினைவை முற்றிலும் செலுத்தியவன். அல்லாமலும் இவன் பெரும் குணமானது, இவனுடைய பந்துக்கள் மகாதேவர் உயிருடனிருந்த பொழுதே குடும்பத்தின் கொடுக்கல் வாங்கல் கணக்கைப் பார்க்க வேண்டும் என்று என்னதான் இடித் திடித்துச் சொன்ன போதிலும், அதைக் கவனிக்காமலிருக்கும்படி செய்து வந்தது. எப்பொழுதுமிவன் கம்பீர குணமுள்ளவனாகையால், 'என்ன மோசம் நடக்கக்கூடும் என் தந்தையே போய் விட்டால் அதன் பிறகு என்ன லாப நஷ்டம் வந்தாற்றாலென்ன' வென்று வெகு வெறுப்பாக விருந்து விட்டான். தான் செய்த பிரயத்தினங்கள் ஒன்றும் கைகூடாமல் தன் தந்தை மாய்ந்துபோகவே இவன் அதிகமான துக்கத்தில் மூழ்கி ஒன்றும் செய்யப் புலப்படாமலிருந்து விட்டான். எல்லாச்

சடங்குகளும் முடிந்த பின்பு இனி நமது கடமை யென்னவென்று யோசிக்கலானான்.

## 8. குடும்ப விசாரம்.

உற்றுரை யெல்லா முடன்கொண் டரசாளப்
பெற்று லதின்மிக்க பேறுண்டோ.

தனது தந்தையோ கண் மூடினார்; தன் செல்வமுமவருடன் குறைந்து விட்டது; சிறு வயதில் தாயை யிழந்த துக்கமென்பது தனக்கப்பொழுது சிறு வயதாகையால் தெரியாமலிருந்தது; ஆனால் இப்பொழுது நல்ல இளம் பிராயத்தில் தனது தந்தையை யிவ்வாறு இழந்தது தீனதயாளுவை முற்றிலும் துக்கத்தில் ஆழ்த்தி விட்டது. தனது பந்துக்கள் அனைவரும் தன்னைப் போல் அவ்வளவு துக்கத்திற் ஆழ்ந்திராமல் சிலர் பண்டங்களை மறைப்பதிலும், சிலர் பாத்திரங்களை ஒளிப்பதிலும், கருத்தாக விருக்கக் கண்ட தீனதயாளு தனது உண்மையான அத்தையை நோக்கி, "அம்மா! பார்த்தாயா, இவ்வுலகத்திலிருக்கும் பொருளாசையை, எனது தந்தை மாண்ட நிமிஷத்தில் எவ்வளவு வித்தியாஸம் இவ்வீட்டில் உண்டாய் விட்டது: இது வரையில் நான் ஒரு செல்வப்பிள்ளை போல் வளர்ந்தேன். இனிபாரம் உறைத்து விட்டதே. ஒரு தாய் வழிப்பட்ட குடும்பமில்லையே; நானெவ்வாறு இவர்கள் எல்லாரையும் ஒன்று சேர்த்துக் காப்பாற்றப் போகின்றேன்" என்றான்.

தாயு:—அப்பா, நானுனக்கு முன்னமேயே சொல்லி யிருக்கின்றேன்; உனக்கொன்றும் தெரியாது; உனது தந்தை போய் இன்னும் இரண்டு வாரங்கூட ஆகவில்லை; இதற்குள் இவ்வீட்டிலுள்ள எல்லாச்சாமான்களும் ஜம்புநாதபுரம் போய் விட்டனவே; ஒட்டை உடை

ந்தது என்று சொல்லப்படும் பாண்டங்கள் நீங்கலாக மற்றொன்றும் நிற்கவில்லையே; உன் துயரத்தின் நடுவில் இதை நான் சொன்னால் நீ என்னவென்று நினைப்பாயோ என்று சும்மாவிருந்தேன், என்றாள்.

தீனதயாளு:—அம்மா, ஏதோ இரண்டொரு பாத்திரங்கள் ஒளிக்கப்பட்டால் அதில் அதிக நஷ்டம் வந்து விட்டது என்று ஏன் நீ மயங்குகின்றாய்! நமது குடியிப்பொழுது மூழ்கியிருக்கும் சங்கதி உனக்குத் தெரியுமா. நான் ஏதோ என்றிருந்தேன், கணக்கை யெடுத்துப் பார்க்கையில் இக்குடும்பத்திற்கு 20,000 ரூபா கடன் ஏற்படுகின்றது; அத்துடனில்லை. எல்லாக் கடன்காரர்களும் நான் அவர்களுடைய பணத்தைக் கொடுத்த பின்பு தான் பகாசுரகிரி போக வேண்டும் என்கிறார்கள்.

தாயு:—தெரியும் அப்பா தெரியும்! பிணம் எடுபடும் முன்னமே மன்னுகுடியான், புற்புலத்தான், இவர்கள் எல்லாரும் உன்னை மறைத்த சங்கதி எனக்குத் தெரியும்; எப்படி இவ்வளவு கடன் ஏற்பட்டதோ அதுதான் விளங்கவில்லை. உனக்கு ஏதாவது தெரியுமா?

தீனதயாளு:—அம்மா, எப்படி ஏற்பட்டிருந்தாற்றுனென்ன? இவைகளவ்வளவும் எனது தந்தையால் ஏற்படுத்தப்பட்ட கடன்; அவரோ கெட்ட விஷயமாக ஒரு தூசுகூடச் செலவிட்டவரல்லர். கொஞ்சம் வைதீகத்தில் அதிகச் செலவிட்டதாலும், இப்பெரும் வீடு கட்டியதாலுமிக்கடனுண்டா யிருக்கலாம். ஆனால், 20,000 எப்படியா யிற்றென்பது தான் ஆச்சரியம்!

தாயு:—வட்டி விஷம்போல் ஏறுமப்பா; நீ சிறுவனாயிற்றே, இந்த ஊர் வைதீகர்களுடைய குணம் உனக்கு ஒன்றும் தெரியாது; மகாதேவருக்குச் சமமுண்டா என்று ஒரு முறை அவர்கள் சொல்லிவிட்டால் உனது தந்தை அவர்களுக்கு வேண்டியதைக் கொட்டிவிடுவார்; வெகு வைதீகர்கள் உனது தந்தையால் இந்த ஊரில் பிழைத்து வந்தார்கள்; அமாவாசைதோறும் சிரார்த்தம்போ லிந்த வீடு விளங்கும் ஒவ்வொருவருக்கும் 1 ரூபாய் தக்ஷிணை கொடுப்பார்; போனவரைப் பற்றி ஒன்றும் சொல்லக்கூடாது; ஏன் இவ்வளவு பெரிய வீட்டில் பதினாயிரம் கொட்டுவானேன்? கலியாணம் பண்ணி

ஞல் 11 கலியாணங்கள் ஊரிலிருக்கும் பந்துக்களை யெல்லாம் சேர்த்துப் பண்ணுவானேன்?

தீனதயாளு:—அம்மா, நீ இவ்வாறு என் தந்தையைப் பற்றி ஒருவித குற்றமும் சொல்ல வேண்டாம்; அவரோ பெருங்குணமும் உதாரமும் உள்ளவராக விருந்தார்; வெகு தேசங்களில் வாடகை வீடுகளிலிருந்து விட்டு நமது சொந்தமாக ஒரு பெரும் வீடு கட்டி நமது பந்துக்கள் மத்தியில் நாமும் ஒரு பெரிய தனிகராக வாழ வேண்டும் என்று இந்த ஊரில் இப்பெரும் மாளிகையில் பதினாயிரம் செலவிட்டார். அவர் பந்துப் பிரியர் என்பது உனக்குத் தெரிந்த விஷயமே. தன் குடும்பத்தில் கலியாணம் நடக்கும்பொழுது தனக்குத்தான் செலவிட சக்தியில்லாத ஏழை பந்துக்கள் பிழைத்துப் போகட்டும் என்ற எண்ணத்துடன் அவர்கள் குழந்தைகள் விவாகங்களையும் சேர்த்துப் பண்ணினார். கொஞ்சம் செட்டாக விருந்திருக்கலாம்; அப்படி யில்லாமற் போனதால் நாம் அவரைக் குற்றஞ் சொல்லலாகாது ; இப்பொழுது தான் எனக்கு விளங்குகின்றது. அவர் இறந்துபோக 2, 3 தினங்களிருக்கும் முன்னதாக ஐயோ? குஞ்சும் குழந்தையுமாக இப்படி விட்டுப்போகின்றேனே என்று இரண்டொரு தடவை அவர் சொல்லி விசனப்பட்டார். அதனால் கடனை அதிகமாக இவனுக்கு விட்டுப் போகின்றுமே என்ற ஏக்கம் அவருக்கு வந்தது என்று நினைக்கின்றேன். இப்பொழுது என்ன பிசகு வந்தது; நமது வீடு, நிலங்களை இவைகளை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால் 30,000 ரூபாவுக்கு சமானமாகச் சொல்லலாம். கடன்கள் கணக்கிடப்பட்ட வரையில் 20,000 ஏற்படுகின்றன ; ஆகையால் நமது தந்தை நமது ஆஸ்திக்கு அதிகமான கடன் விடவில்லை. ஏதோ அவருடைய கடன்களைச் சீக்கிரமடைத்து ஒருவித ஏற்பாடு செய்கின்றேன். சிற்றியின் அபிப்பிராயம் என்னவோ தெரியவில்லை. இனி தாமதிக்காமல் அவளபிப்பிராய மறிந்துகொண்டு எல்லாவித ஏற்பாடுகளுமுடனே செய்யவேண்டும்.

தாயு—இனித்தான் உனக்கு காந்தியின் உண்மையான குணம் விளங்கும். ஜம்புநாதபுலத்தாள் வெகு சாது என்று நீ நினைத்திருப்

பதின் உண்மையை நீயே காணலாம். கைம்பெண்களாகிய எங்கள் 3 பெயர்களையும் காப்பாற்றவேண்டியவன் நீயே யல்லாது அவளிடம் காட்டி விடாதே. நானிதைப்பற்றி உனக்குச் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை.

தீனதயாளு—உங்களைக் கைவிட்டால் ஈசன் என்னைப் பாதுகாப்பாரா? நல்லது சமயம் பார்த்து சிற்றியை யழைத்துவா.

தாயு—இப்பொழுது தான் பொழுது விடிந்திருக்கின்றது, ஸ்நானம் சாப்பாடு இவைகள் எல்லாம் முடியட்டும்; மத்தியானம் இக்குடும்ப சமாசாரம் பேசுவோம். அதற்குள் நீ எல்லாம் யோசித்துக் கணக்குப் பார்த்து வைத்துக்கொள்; இந்த விஷயத்தில் உன் மொத்த அபிப்பிராயமென்ன? சேர்ந்த குடித்தனமா, அல்லது பாகம் என்று எண்ணமா?

தீனதயாளு—எனது தந்தை யிருந்தவரையில் எவ்விதமாக இக்குடும்பம் நடந்ததோ அதேவிதமாய் நானிதை நடத்தவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கின்றேன். எல்லாரும் ஒன்று சேர்ந்திருந்தாற்றான் நமக்கெல்லாம் கௌரவம். அது தப்பினால் நமது கௌரவமும் குன்றும்.

தாயு—அப்பா, உன் பங்கில் ஈசனிருக்கவேண்டும். உனக்கு இவ்வுலகமே தெரியாது. எல்லாரும் உன்னைப் போல் என்றிருக்கின்றாய். இனி அதிகமாக நான் சொல்லுவானேன். வெகு சடுதியில் உனக்கே எல்லாம் விளங்கும். "குலத்தளவே யாகுமாம் குணம்" என்ற பழமொழிப்படி ஜம்புநாதபுரத்தாள் தனது குணத்தை வெகு சீக்கிரம் காட்டிவிடுவாள். காடு ஆறுவதற்கு முந்தி பாதி சாமான்களைத் தூக்கி ஊருக்கனுப்பினவள் எவ்வளவு கபடமுள்ளவள் என்பதை உனக்குள்ளேயே ஊகித்துக்கொள். இனிச் சேர்ந்திருப்பது என்பது ஒருநாளும் முடியாத காரியம். அப்புறம் உன் சாமர்த்தியம்.

தீனதயாளு—எல்லாம் வல்ல ஈசன் எப்படி விடுகின்றார் பார்ப்போம். எனக்கு எவ்வித நஷ்டம் வந்தாலும் சரி, எல்லாரும் சேர்ந்திருக்க என்ன ஏற்பாடுகள் பண்ணவேண்டுமோ அவைகளைச் செய்

கின்றேன். நியாயத்தை விட்டு நான் ஒருபொழுதும் வழுவ மாட்டேன்.

## 9. குடும்பக் கடனைத் தீர்த்தது.

நலம்வேண்டி னாணுடைமை வேண்டுக குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.

தீனதயாளு தனது குடும்பத்தின் நிலைமையை நன்றாக அறிந்துகொண்டான். இதுவரையில் அவன் தான் தனவான் என்று சொற்பம் செருக்கடைந்தவன் என்று சொல்லலாம். செருக்கென்றால் கெட்டவிதமாக வன்று. நமது தந்தை நன்றாகப் பொருள் சம்பாதித்திருக்கின்றார். நன்றாக நமது இனத்தார்களுக்கு அவர்கள் கேட்கின்றவைகளை நாம் கொடுக்கலாம், என்ற பெருங்குணத்தோ டிருந்தவன். இவன் சம்பாதித்த பொருளை இவன் தந்தை விரும்பவே யில்லை. அன்றியுமவர் இவன் கேட்ட பொழுதெல்லாம் பணம் கொடுப்பார். செல்வப் பிள்ளையாக வளர்ந்தவன். இப்பொழுது இவன் கணக்குப் பார்த்தபிறகு தன்னைவிட ஏழை இவ்வுலகத்திலில்லை என்று கருதிவிட்டான். குடும்பமோ 12 பெயர்கள் நிரம்பிய பெரிய குடும்பம். ஆஸ்தியோ 30,000. கடன் 20,000. கடனை உடனே தீர்க்காமல் விட்டாலோ வருஷந்தோறும் வட்டி 2000 ரூபா ஏறிவிடும். இவைகளை யெல்லாம் தீனதயாளு நன்றாக யோசித்து தனது சிறுதாயாரை நோக்கி "சிற்றி, இனி நமது குடும்பத்துத் தலைவர் போய்விட்டார்; அவர் மட்டுமிருந்தால் இவ்வித விசாரம் நான் படவேண்டியதில்லை. குடும்பத்தில் 20,000 ரூபா கடன் ஏற்பட்டிருக்கின்றது. கடனை வைத்துக் கொண்டால் நம்மால் ஒரு நிமிஷங்கூடத் தாங்கமுடியாது. பெரியவர் மட்டில் இன்னுமிரண்டு வருஷம் உயிருடனிருந்திருப்பாரேயானால் இக்கடன்களை ஊதியிருப்பார். அவ்வளவு சாமர்த்தியம் எனக்கேது! நானோ தூரதேசத்தில் உத்தியோகம் பண்ணப்

பட்டவன். நானிப்பொழுது இருக்கும் நாடோ செலவு வெகு அதிக மாகும் நாடு. கொடிக்குத் தன்காய் கனக்காது என்றபடி எந்த செலவு எப்படியிருந்தாலும், எல்லாரையும் என்னுடன் அவ்விடத்தி லழைத்துப்போய் ஒரே குடும்பமாக அங்கிருக்க நிச்சயித்திருக்கின் றேன். அப்படி ஏற்படும் முன்பாக இக்கடன்களுக்கு ஒருவித ஏற் பாடு செய்யவேண்டும். நமது நிலங்களை அநேகமாகச் செலவு செய் தால் ஒழிய கடனை அடைக்க வழியில்லை. அதற்கு நான்மட்டும் போதாது, நீங்களும் என் தம்பி சங்குவுக்கு ரக்ஷகராக விருந்து கை யெழுத்துப் போட்டால்தான் வாங்குகின்றவர்கள்நிலங்களை பயமின்றி வாங்குவார்கள். இல்லாவிடில் வாங்கமாட்டார்கள். என் மனம் ஒத்து நீங்கள் நடக்க வேண்டும்'' என்றான்.

காந்தி—அப்பா, நீ வேறு, சங்கு வேறு, என்று நான் எண்ண வே இல்லை. நீயும் என் வயிற்றில் பிறந்த பிள்ளை யென்றே கருதி யிருக்கின்றேன். ஆனால் தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு என்பார்கள். உனது தந்தை என்னை இளையாளாக மணந்து இரண்டு குழந்தைகளுடன் இச்சிறுவயதில் என்னை நிர்க்கதியாக விட்டுவிட்டார். உனக்கு ஒருவிதக் குறைவும் பண்ணவில்லை. உன் னைப் படிக்கவைத்துப் பதினாயிரம் செலவிட்டு ஒரு ஆளாக்கி இரண்டு காசு சம்பாதிக்கும் திறமையும் உண்டாக்கி விட்டார். என் சங்குவைச் செல்வங்கொடுத்து பேயனாக்கினார். உன் குஞ்சு குழந் தைகளிடம் அவர் எவ்வளவு அன்பு பாராட்டினாரோ அவ்வளவு அன்பு என்னிடத்திலாவது என் குழந்தைகளிடத்திலாவது அவ ருக்கு இல்லை. ஆனால் அதிக பிசகு ஒன்று மில்லை. நான் சொல் லுவதென்னவெனில் நீ வெகு நல்லவன். எல்லாமறிந்தவன். இப்பொழுது இரண்டு காசும் சம்பாதிக்கப்பட்டவன். ஆகையாலும், இக்கடனில் பெரும் பாகம் உன் படிப்புக்காகவே ஏற்பட்டிருக்க வேண்டுமாகையாலும், இக்கடனை நீதான் ஒப்புக்கொள்ளவேண்டும். எப்படியாவது அந்த உபகாரம் பண்ணி அனாதைகளான என் சங்குவுக்கும் மாந்திக்கும் ஒரு ஏற்பாடு செய்துவை.

தீனதயாளு—சிற்றி, தாங்கள் சொல்லுவது எல்லாம் உண்மை யே, ஏதோ பெண்கள் பேசுவதுபோல் பேசினால் காரியம் எப்படி

முடியும். என் படிப்புக்காகவே என் தந்தை செலவிட்டார் என்றால் அதற்காகவே 20,000, ரூபா கடன் ஏற்படுமா? அப்படித்தான் ஏற்பட்டதென்றாலும், அதை நானேதான் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றால் அது சாத்தியமாமா. என்றால் அக்கடனை எப்படி அடைக்க முடியும். பொருளிருந்தால் நீங்கள் வாயைத் திறக்குமுன் கொடுத்துவிடுவேனே. எனக்கு வரும் சம்பளம் என் குடும்ப சம்ரக்ஷணைக்கே போதாதே. இருபத்தைந்து ரூபா சம்பளம் ஒருவனுக்கென்றால் அதைக்கொண்டு அவனால் எவ்வளவு ஆஸ்திசேர்க்க முடியும். என்றால் சாத்தியமில்லை என்று விட்டால் கடன்காரர்கள் நிலங்களை ஏலம் போட்டுக்கொண்டுபோய் விடுவார்கள். ஆகையால் நீங்களே யோசித்துப்பார்த்து நான் சொல்லுவதைச் சிறிது மனத்தில் வாங்கிக்கொள்ளுங்கள். கடன்காரர்கள் கடனைத் தீர்த்துவிடு என்று கேட்கும் முன்னமே நாமே தீர்த்துவிடவேண்டும். ஏனெனில் வட்டி வருஷம் 2000 ரூபா ஆகின்றது. அவ்வண்ணம் கொடுக்க நமக்குச் சக்தியோ இல்லை. என்னுடைய வருஷச் சம்பளமோ 300 ரூபா. சர்க்கார் கிஸ்தி போக நமக்கு நமது நிலங்களால் கிடைக்கும் மாசூல் இப்பொழுது விற்கும் விலைப்படி கணக்கிட்டுப் பார்த்தால் 1,500 ரூபா. அப்பாவின் உபகாரச்சம்பளம் அவருடன் போய்விட்டது. ஆகவே இக்குடும்பத்திற்கு இப்பொழுது ஒரு வருஷத்து வருமானம் 1,800 ரூபா. இந்த வருமானத்திற்குமேல் வட்டி யென்றிருந்தால் அப்புறம் அக்குடும்பம் எவ்வண்ணம் தலையெடுக்க முடியும். சிற்றி, நீங்கள் இதை நன்றாக யோசித்துப் பாருங்கள். இப்பொழுது நான் செய்யப்போகிற தென்னவெனில் கடனுக்கு வேண்டிய நிலங்களைச் செலவுசெய்துவிட்டு மிகுந்ததை வைத்துக்கொண்டு எல்லாரும் ஏக குடும்பமாய் வாழவேண்டும் என்று எண்ணுகிறேன். தகப்பனார் காலத்தில் ஏற்பட்ட கடனுக்குக் குடும்ப சொத்தைச் செலவிடுவதில் ஒருவித சந்தேகமுமில்லை. நீங்களும் மனமொத்து என்னுடன் நின்றால் இவைகள் எல்லாம் காதும் காதும் வைத்தாற் போலச் சுலபமாக முடியும்.

காந்தி—தீனதயாளு, 20,000 ரூபா கடனுக்கு நிலங்களைச் செலவிட்டால் அப்புறம் மிகுந்து நிற்கும் நிலம் ஒரு குழிகூட இருக்காதே. உன் பாட்டில் நிலத்தை விற்றுக் கடனை அடைத்துவிட்டு

நீ போய்விட்டால் அப்புறம் கைம்பெண்ணாகிய நான் என் சின்னஞ் சிறு குழந்தைகளுடன் எங்கு நிற்கின்றது. இவ்வீடு நமக்கென்னத் திற்கு. இதை ஏன் செலவிட முடியாது.

தீனதயாளு—எவ்வளவோ ஆசையின்பேரில் என் தந்தை கட்டிய வீடு இது. இதில் அவர் 10,000 ரூபா கொட்டியிருக்கின்றார். இதை நாம் செலவிடுவதாக வாய் விட்டால் இதை இரண்டாயிரத்துக்குக்கூட இக்கிராமத்தில் ஒருவரும் கேட்கமாட்டார்கள். பஞ்சத்திற்கு பிள்ளை விற்பதுபோல இதை இப்பொழுது விற்பது நியாயமன்று. இனி நமக்கு இப்பெரும் மாளிகை வேண்டியதில்லை என்பது உண்மையே. என்றைக்காவது ஒரு நாள் இதை நாம் விற்கத்தான் வேண்டும். ஏனெனில் நானோ அந்நிய தேசத்தில் உத்தியோகம் பண்ணப்பட்டவன். இங்கு 4,5 பெயர்கள் வசிக்க இவ்வளவு பெரும் வீடுவேண்டாம். ஆனால் இப்பொழுது நாம் ஒன்றும் அவசரப்படக்கூடாது. நிலங்களை விற்றுக் கடனை யடைத்துச் சொற்பம் நிலத்தையும் இவ்வீட்டையும் மிகுத்துக்கொள்ள வேண்டும். அதன் பிறகு சமயம் வரும்பொழுது இவ்வீட்டை விற்றுச் சிறுவீடு குடியிருக்க ஒன்று வாங்கிக்கொண்டு பாக்கி நின்ற பணத்திற்கு நிலம் வாங்கிவிடவேண்டும்.

காந்தி—அப்பா, நீ சொல்லுவது சரி, அப்படியே செய். எப்படியாவது என்னையும் என் குழந்தைகளையும் கைவிட்டு விடாதே நான் என் சங்குவை நம்பவே யில்லை. நீதான் என் குழந்தை என்று நம்பியிருக்கின்றேன், என்றாள்.

இவ்விதமாக காந்தி ஒருவாறு நல்வழிக்கு வந்தாள். காந்தி வறிய குலத்தில் பிறந்தவள் என்றாலும் புகுந்த விடம் பெரியவிடமாக விருந்தபடியால் நற்பழக்கங்களும் சொற்பம் படிந்திருந்தன.

அன்றியும் ஆராய்ந்து பார்க்குங்கால் தகப்பனார் பட்ட கடனைக் குடும்பச்சொத்தால் தீர்த்துக்கொள்ள ஆக்ஷேபம் என்ன. தீனதயாளு தனது தந்தை கடனை அடைக்க ஏற்பாடு செய்யாமற் போனால் கடன்காரர்களுக்கு வட்டி வளர்ந்து கொண்டிருக்குமேயன்றி அவர்கள் தொகைக்கு யாதொரு நஷ்டமும் வரமாட்டாது. கடனைத் தீர்க்காமல் நிறுத்தியிருந்தால் நஷ்டப்படவேண்டியவர்கள்

தீனதயாளுவும் சங்குவுமே. இதைக் காந்தி நன்ருக அறிந்தவளாகையால் எப்படியாவது தீனம் கடனைத் தீர்த்துப் போடானு என்ற விசாரம் அவளுக்கு முற்றிலுமுண்டு. அதைத் தானே பயிரங்கமாகக் காட்டக்கூடாதென்று தனக்கிஷ்டமில்லாதவள் போல் நடித்து அதனுல் தான் லாபமடையப் பார்த்தாள்.

தீனதயாளுவோ நிலம் விவசாயம் இவைகளில் அதிகப் பழக்கமுள்ளவனல்லன். ஆனுல் ஒரு விஷயத்தில் அவன் பிரவேசித்து விட்டால் அதை முற்றிலும் ஊன்றிப்பார்த்து அவ்விஷயத்தில் எப்பொழுதும் ஆழ்ந்திருப்பவர்கள் ஆச்சரியப்படும்படி நடப்பான். அவ்வளவு மேன்மையான குணமவனிட மிருந்ததைச் சணற்காலர்கள் அவன் தனது தந்தைக்கு நடத்தின வைத்தியத்திலிருந்தே தெரிந்துகொண்டார்கள். அது அவ்வாறு பிரயோசனப்படாமற் போய் அவன் தான் பகாசுரகிரி போகும் முன் தனது குடும்ப நிலைமையைச் சீர்திருத்த ஆரம்பிக்கவே அவனுடைய உண்மைக்கும் யுக்திக்கும் வல்லமைக்கும் அவனை ஒவ்வொருவரும் புகழலானுர்கள்.

வெகு சாமர்த்தியமாய்ப் புறப்புலத்தில் தனது தந்தை பெயரிலிருந்த காணி, பூமி இவைகளை யெல்லாம் ஒன்று விடாமல் விற்று அதில் கிடைத்த பணத்தைக் கொண்டு தனது தந்தைவிட்ட கடனை ஒரு தூசாவது பாக்கி நிறுத்தாமல் தீனதயாளு அடைத்தான். சரியான வயதுக்கு வராத தனது தம்பி சங்குவுக்குக் காந்தியைக் கார்டியனுக வைத்து இவ்விஷயமாய் உண்டான எல்லாவித தஸ்தவேஜுகளையும் தீனதயாளு செய்துமுடித்தான். “கடன் தீர்ந்தால் காற்றுப்போல்” என்ற பழமொழியின் சுகத்தைத் தீனதயாளு தான் முற்றிலுமனுபவிப்பதாகக் கருதினுன். காந்தி, தாயு, இவர்களுங்கூட சில சணற்காலர்கள் போல “அநியாயமாக வீண்செலவு செய்து மகாதேவர் இக்குடும்பத்திற்கு இவ்வளவு கடன் உண்டாக்கினுர்” என்று சில சமயம் சொல்லக்கேட்டால் தீனதயாளு அவர்களைக் கண்டிப்பான். தனது தந்தை செய்த செலவு ஒன்ருவது அதிகச் செலவன்று என்றும், தான் அவருடைய நிலைமையிலிருந்தால் அவரைவிட அதிகச்செலவு செய்திருப்பான் என்றும் அப்படியே அவர் அதிகச் செலவு செய்திருந்தபோதிலும் அதைப்பற்

றிப்பேச மற்றவர்களுக்கு யாதொரு அதிகாரமுமில்லை என்றும், மகாதேவர் தன்னுடைய ஆஸ்திக்கு மேலான கடன் விடவில்லை என்றும், ஒவ்வொரு தந்தையும் தனது குமாரனுக்கு அளிக்கவேண்டியது படிப்பேயன்றி ஆஸ்தியும் அளிக்கவேண்டும் என்பது உடன்பாடென்றும், தீனதயாளுவின் கொள்கை. தனது தம்பி சங்குவுக்குத் தனது தந்தை தான் உயிருடனிருந்த காலத்தில் எவ்வளவோ சிரமப்பட்டுப் படிப்பு முதலியவைகள் போட்டுப் பார்த்தும் அவைகள் ஒன்றுவது ஏறவில்லையாகையால், அவன் நிலைமையைப் பற்றித் தீனதயாளு அதிகக் கவலை கொண்டவனாய் தனது சிறு தாயை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானான்:—

தீனதயாளு—தாயே, ஏதோ நான் பகாசுரகிரியை விட்டுக்கீழே இறங்கின காலம் நற்காலமாகவிராமல் நான் என் தந்தையை இழந்து ஆஸ்தியையும் தோற்றுவிட்டேன். இனி சென்றுபோன விஷயங்களைப்பற்றி யோசிப்பதில் பிரயோசனமில்லை. எனது ரஜா அநேகமாய் முடிந்துவிட்டது. இன்னும் ஒருவாரத்துக்குள் நான் என் வேலைக்குத் திரும்பிப் போகவேண்டும். அதைக் காப்பாற்றிக்கொண்டால் தானே நாம் சுகமாய்ச் சாப்பிடலாம். காணியும் பூமியு மதிகமாக விருந்தால் சர்க்கார் வேலையை அலட்சியஞ் செய்வதால் சுகக்குறைவு வரமாட்டாது. என்றால் கூடியமட்டும் நான் நமது பெரியவர் விட்ட கடனை எவ்வளவோ சாமர்த்தியமாக அடைத்து இந்த ஊர் வீட்டையும் நிலங்களையும் மிகுத்து வைத்துக்கொண்டேன். இனி நாம் கடனுக்காக ஒருவனுக்காவது தலைகுனிய வேண்டியதில்லை. இவ்வூர் நிலங்களிலிருந்து நமக்குச் செலவு போக வருஷத்துக்கு 150, 160 கலம் நெல் கிடைக்கும். சராசரி 200, 250 ரூபா ஆயிற்று. இதை வருஷாவருஷம் நமக்கு ஒரு முதலாகப் பண்ணிக்கொள்ளுவோம். நாளை இந்தவூர் நிலங்களைக் குத்தகைக்கு அடைத்துவிடுகின்றேன். ஒரே குடும்பமாக பெரியவர் காலத்தி லிக்குடித்தனம் எவ்வாறு கண்ணியமாக நடந்து வந்ததோ அதற்கு ஒருவிதக் குறைவுமில்லாதவண்ணம் நடத்த நான் எண்ணியிருக்கிறேன். நீங்கள் எல்லாரும் என்னுடன் பகாசுரகிரி வந்துவிடவேண்டும். எல்லாரும் ஒரே குடித்தனமாக விருக்க

வேண்டும். சங்குவுக்குப் படிக்க அவ்விடம் நான் தகுந்த ஏற்பாடு கள் செய்கின்றேன்" என்றான்.

காந்தி இதைக்கேட்டதும் "குழந்தாய், இனி அவர் காலஞ் சென்றபின்பு எங்களை யெல்லாம் காப்பாற்றவேண்டிய யஜமானன் நீ. நீ என்ன சொன்னாலும், கேட்கவேண்டும்; அவர்கள் காப்பாற்றி னதுபோல் எங்களை ஒருவிதக் குறைவுமன்றி நீ காப்பாற்றுவாய்; அதில் சிறிதேனும் சந்தேகமில்லை. ஆனால் அவர்கள் காடு இன் னும் ஆறவில்லையே! அதற்குள் இவ்வீட்டைவிட்டு நான் எவ்வாறு வெளிக்கிளம்பலாம். மேலும் ஒரு வருஷம் இவ்வூரைவிட்டு நான் அப்புறம் இப்புறம் அசையமாட்டேன். ஏதோ சணற்கால் நாற் சந்தியில் என்னை நிற்கவைக்காமல் உட்காருவதற்கு இவ்வளவு நிழ லாவது வைத்தார்களே! அதில் நானிருக்கின்றேன். நீ க்ஷேமமாய் உத்தியோகத்திற்குப் போய்வா. பகாசுரகிரி குளிர்நாடு என்கின் றார்கள். அவ்விடம்விட்டு மாற்றிக்கொண்டு நமது தேசங்களுக்கு வரக்கூடாதா? போனவர்கள் தெய்வமாக விருந்து அவ்வளவு தூரம் சகாயம் செய்யார்களா!" என்றாள்.

தீனதயாளுவுக்கும் பலவித காரணங்களால் அப்பொழுது தனது சிறுதாயார் சொன்ன சொற்கள் வெகு அன்புடன் அவள் யதார்த்தமாகவே சொல்லுவதாகப் புலப்பட்டது. பகாசுரகிரியில் அதிகப் பனிகாலமப்பொழுது ஆகையால் அக்காலத்தில் முதல் முதல் எல்லாரையும் அழைத்துப்போக அவனுக்குத் தைரியம் வர வில்லை. வெகு சீக்கிரத்தில் அவ்விடம்விட்டு வேறு சௌக்கிய மான விடத்திற்கு மாற்றிக்கொண்டு அவ்விடம் தனது குடும்பத்தை ஒன்று சேர்த்து வைத்துக் கொள்ள நிச்சயித்தான். அவ்வாறே தனது சிறு தாயாரிடம் தெரிவித்து, தனது அத்தைமார்களாகிய இரண்டு கிழவிகளை ஜாக்கிரதையாகப் பார்த்துவர காந்தியை வேண் டிக்கொண்டு தனது தம்பி சங்குவைத் தன்னுடன் கூட அழைத் துக்கொண்டு தீனதயாளு தனது சம்சாரத்துடனும் குஞ்சு குழந் தைகளுடனும் பகாசுரகிரி சென்றான். சணற்கால் செலவுக்கு நெல் ஏராளமாகப் போதுமாகையால் அவன் பணம் அனுப்பவேண்டு மென்பதேயில்லை. ஆனால் அவ்வளவு எளிதில் காந்தி அவனை விட வில்லை. அவனிடம் பஞ்சைப்பாட்டுகள் எவ்வளவோ பாடி முக்கிய

மாகக் கிழவிகளுடைய க்ஷேமத்துக்கு தான் ஒருவித குறைவும் பண்ணக்கூடாதாகையால் அவர்களுடைய சம்ரக்ஷணைக்கென்று தீனதயாளு தனக்கு மாதந்தோறும் ரூபா 10 அனுப்பவேண்டும் என்ற ஏற்பாடு செய்துகொண்டாள்; இவ்வாறு எல்லாவித திட்டங்களையும் செய்து முடித்து தீனம் சங்குவுடன் பகாசுரகிரி வந்து சேர்ந்தான். தீனத்தின் சம்பளம் 25 என்றால் இதில் 15 ரூபா, அவன் செலவுக்கு அவ்வூரில் எவ்வாறு போதும். அவன் தனது தந்தைகாலத்தில் எவ்வளவுக்கெவ்வளவு சுகப்பட்டானோ அவ்வளவுக் கவ்வளவு அவர் மாண்டகாலம் முதல் அவன் கஷ்டப்படலானான்; ஆனாலவன் மனோதைரியமே தைரியம் என்று மட்டும் சொல்லக்கூடாது. தன்னுடைய நல்நடைக்கையில் அவன் வைத்திருந்த நம்பிக்கை என்றும் சொல்லலாம். தான் எல்லாவிதத்திலும் வெகு பரிசுத்தனாக விருக்கின்ற வரையில் ஈசன் தன்னைக் கைவிடமாட்டார் என்பது தீனதயாளுவின் முக்கியமான கொள்கை.

சங்குவோ ஒவ்வொரு விஷயத்திலும் தனது தமயனாருக்கு நேர்விரோதமான குணங்களுள்ளவனாக விருந்தான். படிப்பு என்பதேயில்லை. படிக்கவேண்டும் என்ற ஆசையு மவனுக்கு இல்லை. தன்னைவிடச் சிறுவர்கள் அதிகமாகப் படித்திருந்ததைப் பார்த்து அவனுக்கு வெட்கமுண்டாயிற்று என்பதும் கிடையாது. அவன் புத்தி அவ்வாறிருக்க அவன் படித்தவர்கள் எல்லாரையும் "அவனுக்கு என்ன தெரியும்! இவன் பெருமூடன்!" என்று தினந்தோறும் இரண்டுமணிநேரம் பழிப்பான். நாடோறும் போஜனம் செய்தபின்பு பகலில் ஒரு ஜாமகாலமாவது தூங்காமலிருந்தால் அவன் உடம்புக்கு ஆயாசம் வந்துவிடும். தன்னைப்போன்ற நெறி நீங்கி தெரிகெட்டுத்திரியும் புத்தியீனர்களுடன் கூடி வீண்பேச்சு பேசிக்கொண்டே ஒவ்வொரு நாளையும் கழிப்பான்.

அவனைப் பள்ளிக்கூடத்தில் வைத்து அவன் படிக்க வேண்டிய ஏற்பாட்டைத் தீனதயாளு செய்தான். அவ்வளவுதான் அவன் செய்யமுடியும். சங்கு எவ்வளவு தூரம் படித்தான், என்று நமது நண்பர்கள் தெரிந்துகொள்ள விரும்புவார்கள். சங்கு தனது உபாத்தியாயர்களை ஏறவிழித்துப் பார்ப்பானேயானால் அவனைக் கண்டு

உபாத்தியாயர்கள் பயந்து அவனை ஒன்றும் கேட்கமாட்டார்கள். அவன் பெரிய பையனாகையால் அவன் வகுப்புப் பிள்ளைகள் அவனிடம் நடுங்குவார்கள். பெரிய போக்கிலி. ஒரு அக்ஷரம்கூட வரப்பெறாதவன் என்ற பட்டம் சங்குவுக்குப் பள்ளிக்கூடத்தில் வந்தது. வீட்டிலோ சங்குவைக்கண்டால் எல்லாருக்கும் நடுக்கம். அவன் சாப்பிட உட்கார்ந்தால் அது நன்றாகவில்லை, இது கெட்டுப் போயிற்று என்பான். தனது தமயனுடன் சாப்பிட உட்கார்ந்தால் அப்பொழுது ஒன்றும் சொல்ல முடியாதென்று நினைத்து அவன் சாப்பிட்டு விட்டுப்போன வேளை பார்த்து தான் சாப்பிட வந்துட்காருவான். இவ்வளவாவது கிட்டுகிறதே என்று சந்தோஷமேயில்லை. எல்லாவற்றையும் நிந்திப்பான். தமையனார் மலிவான காய்கறி வாங்குகின்றார், என்பான். பருப்பு குழம்பும் வறுவலும் தினந்தோறும் இவனுக்குச் செய்துபோட்டால் திருப்தியாகவிருக்கும். அப்படிச் சமையல் பண்ணினால் உடம்புக்காகுமா என்று தாயு வாயைத்திறந்தால் 'அவளைத் திட்டுவான், உறைப்பு கொஞ்சம் தாழ்ந்திருந்தால் குழம்பு கஞ்சிபோலிருக்கின்றதென்பான். இவ்வாறு எப்பொழுதும் குற்றங் கண்டுபிடித்துக்கொண்டு தனது நிலைமை யின்னதென்று அறியாத கசடனாக அவன்காலமிங்குச் சென்றுகொண்டிருந்தது. படிப்பு என்பது சிறிதேனும் கிடையாது. எவனொருவன் தன் சிறுவயதில் உண்டியையே பிரதானமாகக்கொண்டு ,அதில் அதிகக் கவலைவைத்துப் படிப்பில் கவலையற்று இருக்கின்றானோ அவன் பெரும்பாலும் புத்திமானாகப் படிக்கமாட்டா னென்பது உலகக்கொள்கை. சங்குவு மப்படியேதானிருந்தான்.

சனற்காலில் காந்தியோ வெகு சாமர்த்தியமாகத் தன்னிடமிருந்த சில ஆபரணங்கள், உதவியற்ற சாமான்கள், இன்னும் என்னென்ன விலையாகுமோ அவைகளை யெல்லாம் விற்று ஒரு ஆயிரம் ரூபாவரையில் தன் கையில் முதல் சேர்த்துவைத்துக் கொண்டாள். இந்தத் தொகையாவது ஒரு கைம்பெண்ணிட மில்லாவிட்டால் அவளை ஒருவரும் கவனிக்க மாட்டார்கள் என்பது அவளுடைய கொள்கை. தனக்கு கஷ்டதசை வந்துவிட்டதென்பதை அறிந்த

வளாய் வெகு செட்டாக அவள் குடித்தனம் பண்ணிவந்தாள். ஒரு நாளைக்கு ஒரே வேளைதான். 15 நாழிகைக்குமேல் சாப்பிடுவாள். அவள் மகாதேவர் தமக்கைகளாகிய இரண்டு கிழவிகளைக் காப்பாற்ற வேண்டியதாக இருந்த தென்று நாம் முன்னமே சொல்லியிருந் தோமே. அவர்கள் விஷயமாக அவள் செய்த தொந்தரை சொல்லமுடியாததாக விருந்தது. அந்தக் கிழங்கள் பசிக்கின்ற தென்றால் "மஞ்சள் காணி கொண்டு வந்தவர்கள்கூட இப்படிக் கேட்க மாட்டார்களே. உங்களுக்கிட்டுத்தான் இக்குடித்தனம் இப்படிப் பாழாயிற்று" என்பாள். குளிர்காலத்தில் "குளிர் அதிகமாக இருக்கின்றது, ஒரு துப்பட்டி வாங்கிக் கொடு," என்று அக்கிழங்கள் கேட்டால் "இரட்டைவிரியைப் போர்த்துக் கொள்ளுங்கள்" என்பாள். புடவை கிழிந்து போய்விட்டது என்றால் "பூமியைக் குழி பறித்து அதில் உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்பாள். இவ்வளவுதான் என்று அளவிட முடியாமல் பலவிதமாய்ப் பேச்சிலும் போசனத்திலும் கழுகு பிடுங்கும் வண்ணம் வாயாலும் முகத்தாலும் காந்தி அக்கிழங்களை இம்சித்து வந்தாள். ஆனால் பகாசுரகிரிக்கு எப்பொழுதாவது கடிதம் எழுதும்பொழுது தான் வெகு ஆதரவாய் எல்லாரையும் நடத்துவதாகவும், மாதம் அனுப்பப்படும் 10 ரூபா மேல் செலவுக்குப் போதவில்லை யென்றும் எழுதுவாள். இவ்விதமாக ஒரு வருஷகாலமாயிற்று.

வருஷச் சடங்குகள் ஊரிலேயே நடக்க வேண்டும் என்ற வழக்கப்படி தீனதயாளு சணற்காலுக்கு வந்தான். இருந்த ஸ்திதியை அவன் கண்ணால் பார்த்தான். கிழவிகளின் கஷ்டம் அவனுக்குச் சகிக்கக் கூடவில்லை. அவர்கள் அவனைப் பார்த்து "அப்பா! இத்தனை நாள் ஒரு சொல்லும் சொல்லாமல் உன் தந்தை எங்களை வெகு மானமாக காப்பாற்றி வந்தான்! இந்த ஒரு வருஷம் நாங்கள் பிறந்த நாள் முதல் இதுவரையில் கேட்க வேண்டிய அவ்வளவு சொற்களையும் ஜம்புநாத புலத்தாளிடம் கேட்டு விட்டோம்!! இனி சத்திரம் சாவடியில் நாங்கள் கஞ்சி காய்ச்சியாவது குடிப்போமே யல்லாது இவ்வீட்டிலிருக்க மாட்டோம். வயது அதிகமாகி விட்டபடியால் எங்களுக்கு முன்போல தேகத்தில் சக்தியில்லை மறுபடியும் இபாத்தகியினிடம் எங்களைக் காட்டிக் கொடுக்கா

மல் ஏதாவது ஒரு ஏற்பாடு செய். என்றையத் தினம் உன்னைக் கண்போம் என்று எதிர் பார்த்திருந்தோம். இந்த ஒரு வருஷம் எங்களுக்கு ஒரு யுகமாக விருந்தது" என்றார்கள். சங்கு தன் தாயாரிடம் பகாசுரகிரியில் தான்பட்ட குறையைத் தனது மனம் போனபடி வருணித்தான். காந்தி தீனதயாளுவைப் பார்த்து "அப்பா! நான் உன்னை என் வயிற்றிற் பிறந்த பிள்ளை போலவே எண்ணி யிருக்கின்றேன். உனக்கு 4, 5 குழந்தைகளிருக்கின்றன. எனக்கிருப்பது இரண்டே. ஏதோ சுவாமி அளித்த பிச்சை இரண்டு என்று எண்ணி யிருக்கின்றேன். சங்குவைச் சரியாக உன் ஸம்ஸாரம் நடத்தவில்லை என்று கேள்விப் படுகிறேன். அவனுக்குப் படிப்புப் போதும். அவனை இவ்விடத்திலேயே விட்டுவிடு. அவனுன்னிடமிருந்தால் உனக்கு அவன் படிப்புக்கும் சாப்பாட்டுக்கும் 6, 7-ரூபா ஆவது செலவாகுமல்லவா, அதை என் பெயருக்கனுப்பி விடு" என்றாள். என்ன செய்வான் தீனதயாளு! அவனோ மானி; அவனுக்குக் கிடைக்கும் 25, 30-ரூபா சம்பளத்தில் ஏற்கனவே 10-ரூபா அனுப்பி வந்தான். அது போதாதென்று 2, 1 காந்தி கூட கேட்க ஆரம்பித்தாள். இப்பொழுது சங்குவைச் சணற்காலில் விட்டு விடு என்று சொல்லி, கூட 7-ரூபா கேட்கலானாள். நெல் முதலியவைகளிவர்களுக்கு சணற்காலிலிருக்க அதனுடன் தீனதயாளுவினுடைய சம்பளத்தின் பெரும்பாகத்தை அவர்கள் வாங்கிக் கொண்டு விட்டால் அவன் ஒருவித சகாயமுமில்லாமல் அம்மலைநாட்டில் எவ்வாறு எல்லாச் சாமான்களையும் காசுக்கு வாங்கி குடித்தனம் செய்வான். எல்லாரையும் காப்பாற்ற ஈசனொருவ னிருக்கின்றார்; தன்னைக் கைவிடமாட்டாரென்று அவன் எண்ணி அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு தான் வந்த முக்கிய காரியமான சடங்குகளைச் செய்து முடித்தான். தனது அத்தைகளைத் தனியாக அழைத்து இத்தனை நாள் பட்ட கஷ்டங்களை இன்னும் இரண்டொரு மாத காலம் எனக்காகப் படுங்கள். நான் அவ்விடம் விட்டு மாற்றிக் கொண்டு சீக்கிரம் நமது தேசம் வந்து விடுகிறேன். முன்னமேயிருந்த துரை என்னிடம் அவ்வளவு அன்புள்ளவனல்லன். இப்பொழுது புது துரை ஒருவன் வந்திருக்கின்றான். அவன் வெகு நல்லவன்; என்னிடம் பக்ஷமாக நடக்கின்றான். அவனை வேண்டிக்கொண்டு நான்

எப்படியாவது மலையை விட்டு வெகு சீக்கிரம் கீழே வந்து விடுகின்றேன். அப்புறம் நாம் எல்லோரும் சேர்ந்திருக்கலாம் என்று அவர்களுக்கு ஒருவாறு தைரியம் சொல்லி தீனம் பகாசுரகிரி சென்றான். இவ்வாறு தனது தந்தை போய் இரண்டாவது தடவை பகாசுரகிரி வந்தது முதல் எவ்விதத்திலாவது கீழ் நாட்டுக்கு தான் மாற்றிக் கொள்ளாவிடில் தனது மானத்துக்குக் குறைவு வரும் என்று தீன தயாளு கருதலானான்.

அன்றியும் படித்தவர் ஒருவரும் அதிகமாகக் குடியில்லாத மலைநாட்டில் கிணற்றுத் தவளைபோல் பதுங்கிக் கிடப்பதைக் காட்டிலும் புன்னைப் போன்ற ஏதாவது ஒரு நகரத்தில் ஜீவனம் செய்வதில் பலவித நன்மைகளுண்டு. நகரங்களில் பலவிதத் தொழில்களுண்டு. இரவிலும் பகலிலும் சிரமப்பட்டு ஏதோ கௌரவமாய் ஒருவன் தன் வாழ்நாட்களைக் கழிக்கலாம். காலையிலும் மாலையிலும் இரண்டு தனவான் வீடுகளில் அவர்களுடைய பையன்களுக்குப் பாடஞ் சொல்லலாம். உத்தியோக வேலை போக சிரமமில்லாத மற்ற வேலைகளில் இரவில் இரண்டொரு வித்தியா விஷயங்களைப் பற்றி எழுதலாம். நகரங்களில் ராஜபாஷைகளில் பத்திரிகைகள் பல உண்டு. இவைகளுக்கு ஒரு உத்தியோகஸ்தன் ராஜாங்க விஷயத்தைப் பற்றி எழுதாமல் ஏதோ தேச நடை உடை பாவனை புராணம் இதிகாசம் காவ்யம் நாடகம் இவைகளைப்பற்றி மட்டும் எழுதுவதாக ஏற்படுத்திக் கொண்டால் அவன் மாதம் 10-ரூபாவுக்குக் குறையாமல் லாபமடையலாம். தனது சிறுதாயார் அதிகப் பணம் கேட்டதற்காக அந்த வழக்கத்தை அவன் கைப்பற்றி இரண்டொரு பத்திராசிரியர்களைச் சிநேகம் பண்ணிக் கொண்டால் அவர்களுடைய ஆதரவால் 10-ரூபா தனது சம்பளத்துக்கு மேலாக சம்பாதிக்கலாம் என்று எண்ணலானான்.

இவ்வித எண்ணங்கள் தீனதயாளுவுக்கு எப்பொழுதும் மேலிட்டிருந்தன. பலவித பிரயத்தினம் எப்பொழுதும் செய்து கொண்டேயிருப்பான். ஈசனவன் பங்கிலிருந்தார் என்று சொல்லவேண்டும். ஏனெனில் அவன் செய்த முயற்சிகள் ஒருவாறு கைகூடின. அவனுக்கு வேண்டிய வித்துவானான ஓர் துரை பகாசுரகிரிக்கு வந்திருந்த

பொழுது தீனதயாளுவைப் பார்த்து அவனறிவைக்கண்டு தனக்குள்ளேயே மகிழ்ந்து புன்னையில் ஓர் வேலை யவனுக்குச் செய்து கொடுத்தனர். அவர் உதவியால் தீனதயாளு புன்னை நகர் வந்து சேர்ந்தான். அவன் அவ்வாறு புன்னையில் அமர்ந்த வேலைக்கு அதிகச் சம்பளமாகையால் அவன் கஷ்டமும் கொஞ்சம் நீங்கும் காலம் வந்ததென்று நாம் சொல்லலாம்.

புன்னை வந்ததும் தனது அத்தைகளுடன் தனது சிறுதாயார், தம்பி, தங்கை எல்லோரும் தன்னுடன் கூடவந்திருக்க வேண்டும், எல்லாரும் ஒரு குடும்பமாகவே இருக்க வேண்டும், என்று தீனதயாளு சணற்காலுக்குச் சொல்லி யனுப்பினான். அத்தைகள் மட்டில் வந்து சேர்ந்தார்கள். சிறுதாய் முதலியவர்கள் வரவில்லை. வந்து விட்டால் தீனதயாளுவிடமிருந்து ரூபாவாகப் பெறுவது நின்று விடும் என்ற பயம் காந்திக்கு வெகு அதிகமாக விருந்தபடியால் அவள் ஊரை விட்டு புறப்படவில்லை. முன் போல வீட்டை விட்டு வெளிக்கிளம்பக் கூடாதென்று அவள் சொல்ல முடியாது. ஏனெனில் ஒரு வருஷம் என்று ஏற்பட்டிருந்த கெடு முடிந்தது. ஆகையாலவனிட மிருந்து வரும் ரூபா போய்விடும் என்ற பயத்தைத் தவிர வேறு ஒரு காரணமுமில்லை.

இவ்வண்ணம் தீனதயாளு தனது தந்தை காலஞ் சென்ற 14, 15-மாதங்களுக்குள் தான் உத்தியோகம் பண்ணிக்கொண்டிருந்த மலைநாட்டை விட்டுக் கீழே யிறங்கி புன்னைமா நகர் சேர்ந்து அதிகச் சம்பளமும் பெற்று அத்தை முதலிய தனது பழைய பந்துக்களையும் தனதிருப்பிடம் வரவழைத்துக்கொண்டான். சணற்காலி லிருந்த தனது சிறு தாயார், தம்பி, தங்கை இவர்களுக்கும் ஒருவிதக் குறைவு பண்ணாமல் அவர்கள் என்ன கேட்டபோதிலும் ஏன் என்ற கேள்வியே யில்லாமல் கேட்டவைகளை யெல்லாங் கொடுத்து வந்தான். அவனும் ஒரு பெரிய சமுசாரியாகையால் அவன் நல்ல எண்ணத்துக்கும் உதாரச் செலவுக்கும் அவன் எவ்வளவு விதமாக சம்பாதித்தபோதிலும் கொஞ்சமேனும் கட்டாமலே யிருந்தது. புன்னைமாநகர் பலவிதத்தில் எல்லோரும் சௌக்கியப்படத்தகுந்த நகரம் என்றாலும் வேப்பிலை முதல் விளாவிலை வரையில் எல்லாம் காசுக்கு

வாங்கித்தான் குடித்தனம் செய்யவேண்டும். பெருந்தன்மையில் வளர்ந்தவனுகையால்தீனதயாளுவுக்குச் செட்டென்பது தெரியவே தெரியாது. அப்படியேதான் அவன் மனைவிக்கும். தான் எப்படியிருந்தபோதிலும் அதை ஒருபொழுதும் குறைவாகக் கருதமாட்டான். தன் குழந்தைகளும் தன்னைச் சேர்ந்தவர்களும் வெகு சௌக்கியமாகவிருக்கவேண்டுமென்பது எப்பொழுது மவனுடைய கொள்கையாகையால் அவர்கள் எல்லாரையும் வெகு பிரயாசைப்பட்டுக் காப்பாற்றுவான். அவன் எண்ணங்கள் வெகு கம்பீரமான எண்ணங்கள். நாம் ஏழையாய் விட்டோம் என்றகஷ்டதை நமது குழந்தைகள் அறிந்து கஷ்டப்படக் கூடாதென்று அவர்களுக்கு உணவிலும், ஆடையிலும், வித்தையிலும், ஒருவித தாழ்வின்றி நடத்தி வருவான். இவ்வாறு ஒருவருஷகாலம் புன்னையில் சென்றது. ஏற்கனவே அதிகமாகப் பணம் கேட்டுவந்த காந்தி அவன் அதிக சம்பளத்தில் புன்னைவந்ததும் தனக்கு 25-ரூபா அனுப்பவேண்டும் என்று எழுதியனுப்பினுள். ஐயோ பேதை! எப்படியாவது பிழைக்கட்டும் என்று தன் கஷ்டத்தைக் கொஞ்சமேனும் யோசிக்காமல் அப்படியே தீனதயாளு செய்யலானுன். ஆகையால் அவன் புன்னையில் ஜீவித்த ஜீவனம் கஷ்டஜீவனம் என்றே சொல்லவேண்டும். அப்படி யிருந்தபோதிலும் எப்பொழுதும் சிரிப்பு முகமாயிருந்துகொண்டு தீனதயாளு வெகு சந்தோஷமாகவே யிருப்பான். தான் நன்னெறியை விட்டு வழுவாது கடவுளை நம்பியிருக்கும்வரையில் தனக்கு ஒரு விதக் குறைவும் வராது என்று அவன் ஒரே உறுதியாய் நம்பியிருந்தான்.

## 10. புன்னையில் தீனதயாளுவின் உத்தியோகம்

*மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்*
*கீழல்லார் கீழல்லவர்.*

வெகு பிரயத்தனத்தின்மேல் தீனதயாளு பகாசுரகிரியை விட்டு புன்னைமாநகர் வந்ததை நாம் முன்னமேயே சொன்னோமே. அப்படி வந்தது அநேக காரியங்களுக்கு அநுகூலமாக விருந்தது. புன்னைமாநகரில் கிருக்குங்கச்சேரி என்றொரு கச்சேரி உண்டு. அதில் ஒரு துரை பெரிய உத்தியோகத்திலிருந்தார். அவர் ஒருகாலத்தில் பகாசுரகிரிமலை போயிருந்தபொழுது அங்கு தீனதயாளுவைக் கண்டு அவன் சுறுசுறுப்புக்கும் கம்பீர குணத்துக்கும் வித்தைக்கும் அவனை மெச்சி அவனுக்குப் பெரும் வேலை கொடுப்பதாகச் சொல்லி அப்படியே 25-ரூபாவுக்குப் பதிலாக 50-ரூபா கொடுத்து புன்னைக்கு அழைத்துவந்தார். அதைப்பற்றி நாம் முன்னமேயே சொல்லியிருக்கின்றோம். தீனதயாளுவின் அதிர்ஷ்டம் அவன் புன்னைவந்த கொஞ்ச காலத்திற் கெல்லாம் அத்துரை பெரும்வேலை பெற்று தவளகிரி போய்விட்டார். அதுதான் தீனதயாளுவுக்கு முதல் முதல் புன்னையில் தான் அமர்ந்த வேலையில் சங்கடம் வந்ததற்குக் காரணம். அந்தத் துரை புன்னையை விட்டுப் போன பிறகு தீனதயாளுவின் க்ஷேமத்தைப்பற்றிக் கவனிப்பார்கள் அங்கு ஒருவருமில்லை. அதனுடன் தீனதயாளு வித்துவானாகையால் அவனைச் சிலர் இரண்டொரு முறை சில மதவிஷயமாக அபிப்பிராயங் கேட்டிருந்தார்கள். அக்கேள்விகளில் சாத்தானி ஜாதியர்களுக்கு தலையில் குடுமியில்லாமல் யிருப்பானேன் என்பதொன்று. அதற்கு தீனதயாளு சாத்தானி ஜாதியார்கள் முதல் முதல் ஜெயின பிராமணர்களா யிருந்து அப்புறம் ஹிந்து மதத்துக்கு வந்ததாகத் தோன்றுகின்றதென்று தனது அறிவுக்குத் தக்கபடி சில காரணங்களை எடுத்

துக் காட்டிச் சொல்லி யிருந்தான். எப்பொழுதோ ஒரு சந்தர்ப்பத்தி லவனிப்படிச் சொல்லியிருந்தது அவனுடைய உத்தியோக முறைமையில் புன்னைமாநகரில் அவனுக்கு சங்கடமாக வந்து விளைந்தது. ஏனெனில் அவனைப் புன்னைக்குக் கொண்டுவந்த துரை தவளகிரி சென்றபிறகு ஒரு சாத்தானி பிரபு அக்கிருக்கும் கச்சேரியில் அத்துரையின் பதவிக்கு வந்து சேர்ந்தார். அந்த பிரபுவுக்கு விவேகம் கிடையாது. அவருக்கு மதம், தெய்வம் இவைகள் இரண்டும் கிடையா. வயிறு வெடிக்கத் தின்பதும் உறங்குவதுந்தான் அவருடைய மதமும் தெய்வமுமாம். ஆனால் தனத்தில் பிறந்து தனத்தில் வளர்ந்தவராகையால் வெகு செல்வாக்குள்ளவராக விருந்தார். அவ்வளவு அதிகமாகப் படித்தவரல்லர். அவர் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தபொழுது ஒவ்வொரு வகுப்புகளிலேயும் கடைசியிலிருந்தவர். மூடசிகாமணி யென்று வகுப்புகள் தோறும் தவறாமல் பட்டம் பெற்றவர். ஒருவரி சரியாக எழுதவாவது ஒரு பதம் சரியாகப் பேசவாவது அவருக்குத் தெரியாது. எப்படி யிருந்தாலென்ன; செல்வமும் செல்வாக்குமிருந்தால் அக்காலத்தில் யாவரும் உயர்ந்த உத்தியோகத்துக்கு வந்து விடலாம். இக்காலம்போல் பி. ஏ. முதலிய பெரிய பரீக்ஷைகளில் தேறி 10 ரூபா உத்தியோகம் கிடைக்குமா என்று ஏங்கி நிற்கவேண்டியதில்லை. அந்தச் சாத்தானி பிரபுவின் பெயர் ஏணிவாளன். சற்றேறக் குறைய 3-அடி உயரந்தானிருப்பார். அவரை வாமனவதாரம் என்றே சொல்லலாம். ஆனால் பார்ப்பதற்கு வெகு அழகாகவிருப்பார். உடை தனது கௌரமான அந்தஸ்துக்குத் தக்கபடி தரிப்பார். அதிகமாகவும் எழுதமாட்டார். சிறு வயதிலேயே அவருக்கு கை நடுக்கம் வந்திருந்தது. அக் காரணத்தால் ஒருவரி எழுத ஒருமணி செல்லும்; அவ்வரியும் முதல் வகுப்பில் படிக்கும் பையன்கள் எழுதும் எழுத்துப் போலிருக்கும். இவ்விதத்திலும் இவ்வளவு குறைவு தனக்கிருப்பினும் அவர் தம்மனத்துள் தாம் ஒருவரே எல்லாவிதத்திலும் சமர்த்தர் என்றும் மற்றவர்கள் அறிவில்லாத மூடர்கள் என்றும் எண்ணுகிற எண்ணம் அதிகமாக விருந்தது. பெரும்பாலும் மடமையின் மதம் இதுவே. புன்னைமாநகரில் பெரிய உத்தியோகம் பண்ணினவர்களுக்குள் ஏணிவாளன்

வெகு பாக்கியசாலி என்று எல்லாரும் கொண்டாட வேறொரு காரண முண்டு.

சரஸ்வதியே அவதாரமானாற்போல் அவருக்கு ஒரு பெண் மாணிக்கமுண்டு. அவ்வம்மணி எல்லாக் கலைகளையும் கற்ற பெரும் கல்விக்களஞ்சியம். கலாசாலைகளில் படித்து பரீக்ஷைகள் கொடுத்தவளல்லள் என்றாலும் அவ்வுத்தமி எல்லாப் புருஷர்களையும்விட அதிகமாகக் கற்றவள். அவள் பெயர் மாணிக்கம். மகாபாரதத்தின் கதாநாயகியான திரௌபதை யுதிஷ்டிரருடன் சார்பாக சம்வாதம் பண்ணினதும், சத்தியபாமைக்குப் புத்தி புகட்டினதும் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அந்த சந்தர்ப்பங்களில் திரௌபதை புத்தியை நாம் எவ்வாறு புகழ்ந்து பேசுவோமோ அதற்கு மேலாக மாணிக்கத்துடன் ஒரு நிமிஷம்மட்டில் நாம் பேசி யிருப்போமேயானால் அவளறிவை அதிகமாகப் புகழுவோம். இம்மாணிக்கம் தனது தந்தை, தாய், மாமியார், மாமனார், கணவன், ஊரார், நண்பர்கள், இவர்களெல்லாரும் உத்தம சீலி என்று கொண்டாடும் விலையற்ற மாணிக்கம். படிப்பு வெகு அதிகமாகையால் எந்த வித்வான் தன்னை காணவந்தபோதிலும் அவனுக்கு கொஞ்சமேனும் பின்வாங்காமல் அவனுடன் வாதாடி அவனை அவ்வுத்தமி முற்றிலும் வென்று விடுவாள். அவள் உத்தமிகளுக்கெல்லாம் உத்தமியாகையால் யார் வந்து எந்தச் சமயத்தில் தன்னைப் பார்த்தபோதிலும் அவர்களுடன் தைரியமாக வாதாடி அவர்கள் வெட்கித் தலை குனிந்தோடும்படி செய்வாள். அவளுக்குப் படிப்பு வெகு அதிகமாகையால் வெட்கமென்பது கொஞ்சமேனுமில்லை.

இவ்வளவு அதிகமாகக் கல்விகற்ற மாணிக்கம் ஒரு பிள்ளைக் குழந்தையாகப் பிறந்திருக்கலாகாதா என்று ஏணிவாளர் எப்பொழுதாவது ஏங்கினால், என்னையே ஒரு புருஷக்குழந்தையாக பாவித்துக் கொள்ளுங்கள் என்று மாணிக்கம் தனது தந்தைக்குத் தைரியம் சொல்லுவாள். அவருக்கு இவ்வம்மணியைத் தவிர வேறு குழந்தைகளே யில்லை யாகையால் அவள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அப்படியே தான் அவரும் எண்ணிக்கொள்ள வேண்டியதாக விருந்தது. அதுமட்டுமன்று. அவ்வளவு கலைகளைப்

புகட்டி அவ்வளவு செல்வமாய் ஏணிவாளர் மாணிக்கத்தை வளர்த்த ஆசையால் அவர் தான்போகு மிடங்களுக் கெல்லாம் மாணிக்கத்தை இட்டுக்கொண்டு போவார். சில சமயங்களில் கிருக்குங் கச்சேரிக் கும் அழைத்து வருவார்; தனக்கு லெளகிக காரியங்களில் சந்தேக மிருந்தால் அவ்வுத்தமியைக் கேட்பார். அவளிவர் பிசகை ஒரு நிமிஷத்தில் எடுத்துக்காட்டுவாள். ஒரு பெண்பாலுக்கு இவ்வளவு இடங்கொடுக்கலாமா என்று யாராவது கேட்டால், மாணிக்கம் என் ஆண் குழந்தையன்றோ என்று புன்னகையுடன் ஏணிவாளர் சொல் லுவார். ஏதாவது ஒரு சமயத்தில் பிரசங்கங்கள் கேட்க அல்லது விநோதங்கள் பார்க்க ஏணிவாளர் போகும்படி நேரிட்டால் முதல் முதல் மாணிக்கத்துக்கு இடமுண்டா என்று விசாரித்தறிந்து கொண்டு தான் போவார். அச்சபையில் அக்கிராசனம் மாணிக்க மாதுசிரோமணிக்குத்தா னிருக்கும். அக்கல்விக் களஞ்சியம் அங்கு வரப்போகின்ற தென்பதை யறிந்தவுடன் பதின்காத வழிக்குள் ளிருக்கும் சிறு பருவமுள்ள வித்வான்களும் வேகமாகக் கூட்டங் கூட்டமாக வந்து புதியதாய் மலர்ந்த மலரை வண்டுகள் மொய்ப் பனபோல அவ்வுத்தமியைச் சூழ்ந்துகொண்டு உட்காருவார்கள். தனது அருமைக் குழந்தையின உயர்ந்த அறிவை நினைத்து நினை த்து மனமகிழ்ந்து மயங்கி யிருக்கும் ஏணிவாளருக்கு அவ்வாறு பல புருஷர்கள் தனது சிறுபெண்ணைச் சூழ்ந்துகொண்டு பரிகாச மாகப் பேசுவது மற்றவர்களுக்கு அருவருப்பாக விருந்தபோதிலும், ஆனந்தமாகவே யிருக்கும். அச்சபையில் ஏதாவது ஒரு கேள்வி அல்லது சந்தேகமுண்டானால் அதற்குப் பதில் முதல் முதல் தைரி யமாக எழுந்து அளிப்பது மாணிக்கந்தான். எல்லா வித்வான்களும் வெட்கிப் போகும்படி அப்பேதை பிரசங்கிப்பாள், சிரிப்பாள், பரி காசம் பண்ணுவாள், கைதட்டுவாள், கூத்தாடுவாள், கண்ணிமைப் பாள், காதைக்கடித்துப் பேசுவாள், இளைஞர்கள் தாம்பூலம் மடித் துக் கொடுக்க அதை ஆநந்தமாய்ப் போட்டுக்கொள்ளுவாள். அவர் கள் அவள் ஆடையைப்பற்றி யிழுக்க அவர்களருகில் கலகல வென்று சிரித்துக்கொண்டு வந்துட்காருவாள். வித்தையின் மகத் துவ மிருக்கும் வரையில் ஏனிவ்வண்ணம் நாம் செய்யக்கூடாது என்று மாணிக்கம் எப்பொழுதும் இறுமாப்புட னிருப்பாள். இதன்

நுட்பத்தை யறியாத சில பெண்கள் இவளும் ஒருபெண்ணு! இவள் தாசியம்மா! எல்லா புருஷர்களையும் தொட்டுப் பேசுகிறுள்! வெட்கமில்லையா! என்று தங்களுக்குள்ளேயே சொல்லிக்கொள்ளு வார்கள். இது ஒரு சமயத்தில் ஏணிவாளர் காதுகளிலும் விழும். யார் என்ன சொன்னுற்றுனென்ன. நாம் 1000 ஆண்பிள்ளைகளுக் கொப்பாகவல்லவோ இந்த ஒரு மாணிக்கத்தைப் பாவித்திருக்கின் ரும் என்று தனது சந்தோஷத்துக்கு ஒருவிதக் குறைவுமின்றி எப்பொழுதும் அவர் தனது பெண்ணை நினைத்து ஆநந்தக் கடலி லேயே மூழ்கி யிருப்பார். மாணிக்கத்தைச் சிறு வித்வான்கள் எப் போதும் சூழ்ந்துகொண்டே யிருப்பார்கள். துரைகளும் பெரிய உத்தியோகஸ்தர்களும் மாணிக்கத்துடன் கைகொடுத்துப் பேசுவார் கள். அவளைத் தங்கள் வண்டிகளில் ஒரு பொற்பதுமையைத் தூக்கிவைப்பதுபோல் தூக்கிவைத்துக் கொண்டு தங்களுக்கிஷ்ட மான விடங்களுக்கு அழைத்துப் போய்விடுவார்கள். பலநாள் வைத்திருந்து அவளுடன் வித்யா விஷயமாய் வாதாடிவிட்டுத் திருப்பி அனுப்புவார்கள். அவ்வாறு பேசக்கண்டாலும் போகக் கண்டாலும் ஏணிவாளர், மெய்மறந்து ஆநந்தபரவசராய் நிற்பார்;

ஏணிவாளர் உத்தியோக முறைமையில் புகழ்பெற்றதற்கு இன்னுமொரு காரணமுண்டு. அவருக்கு ஆண் குழந்தையில்லை என்று முன்னமேயே சொன்னேமே. தனது பெண் குழந்தை யிடம் ஆண் குழந்தை அபிமானம் வைத்து அவளை ஆண்குழந்தை யாகவே நடத்திவந்த போதிலும் சர்க்காரில் பெண் குழந்தைக்கு உத்தியோகம் கொடுக்கமாட்டார்களாகையால் அவ்வாசையை ஒரு வாறு நிறைவேற்றிக்கொள்ள ஏணிவாளர் அபிமான புத்திர னொரு வனை எடுத்து வளர்த்தார். அவன் பெயர் இருத்தைவாயன். ஏணி வாளர் 3-அடி உயரமென்றுல் அவன் அதற்கும் குறைவாக 2¾அடி உயரந்தானிருப்பான். அதனுலேயே அவன் உத்தியோகத்துக்கு சரியானவனல்லவென்று ராஜாங்க வைத்தியர்கள் அவனுக்கு வேலை கொடுக்கக்கூடாதென்று அகற்றிவிட்டார்கள். ஆனுல் ஏணிவாளர் தான் எடுத்துக்கொண்ட காரியத்தை எளிதில் விடப் பட்டவரல்லர். வெகு சிரமப்பட்டு பெரிய அதிகாரிகளுக் கெல் லாம எழுதி இருத்தைவாயனை வேலையில் தன்னிடம் நியமித்துக்

கொண்டார். தனது அபிமான புத்திரனுக்கு வேலை பண்ணி வைத்தது மட்டும் போதாது. தனக்குக் கீழ் எவ்வளவு உன்னத பதவியில் அவனை வைக்கவேண்டுமோ அவ்வளவில் அவனை அதிக சீக்கிரத்தில் வைக்கக்கருதி அவனைப்போல் இனி வித்வானே கிடையாதென்று பலவிதமாகப் பெரிய அதிகாரிகளுக்கு சிபார்சு செய்து அவனுக்கு வேலையான 2-3 வருஷங்களுக்குள் அவனுக்கு தன்னுடைய சம்பளத்தில் பாதி சம்பளம் கிடைக்கும்படியான பெரிய வேலைக்குத் தனக்குள்ளேயே முதல் குமாஸ்தாவாக வைத்துக் கொண்டார்.

இருத்தைவாயனோ வெகு சாதாரண மனிதனாகவிருந்த போதிலும் பெருங்கபடியாக விருந்தான். எப்பொழுதும் சிரித்த முகமாயிருப்பான். தாழ்ந்த குரலில் பேசுவான். ஒருவரையாவது கடிந்து பேசவே மாட்டான். ஆனால் எல்லாரும் நாசமாய்ப் போய் அவர்கள் சம்பளங்கள் அவ்வளவும் நமக்குச் சேராதா என்று எப்பொழுதும் நினைத்துக் கொண்டே யிருப்பான். எவனாவது ஒருவன் தனக்கு கெடுதல் செய்துவிட்டால் அவனைச் சிரித்துக் கொண்டே உத்தியோகத்தை விட்டு நீக்கிவிட வழி தேடுவான். உள்ளுக்குள் இவ்வளவு கெட்ட எண்ணங்களிருந்த போதிலும் ஒவ்வொருவனுடைய யோக க்ஷேமத்தை ஒவ்வொரு நாளுமிரண்டு முறை புன்னகையுடன் விசாரிப்பான். அவனை முதல் முதல் பார்ப்பவர்கள் அவனைவிட சாது இவ்வுலகத்திலிருக்கவே மாட்டார்கள் என்று நினைப்பார்கள். ஆனால் ஏணிவாளருக்கோ இருத்தைவாயனைவிடப் பரமசாது இவ்வுலகத்தில் ஒருவருமில்லை யென்பது ஓரே நிச்சயம். அவர் ஒருவரைத் தவிர அக்கிருக்குங் கச்சேரியில் மற்றவர்களுக்கெல்லாம் நல்ல பாம்பை நம்பினாலும் நம்பலாம், இருத்தைவாயனை மட்டும் நம்பலாகாது என்பது அபிப்பிராயம். அதுதான் உண்மை.

இவ்விருத்தைவாயனுக்கு ஜனகதாதை ஒருவருண்டு. அவர் காலையும் மாலையும் ஏணிவாளரைக் கண்டு "இவ்வுலகத்தைப் பரிபாலிக்கும் விஷ்ணுவின் அவதாரம் தாங்கள். ஏதோ என் குழந்தை இருத்தைவாயனைத தாங்கள் குழந்தையாகவே எண்ணி அவனை

இவ்வளவு தூரம் முன்னுக்குக் கொண்டுவந்து விட்டீர்கள். இன்னும் அவனுடைய க்ஷேமம் தங்களைச் சேர்ந்தது" என்று சொல்லு வார். ஊறுகாய்ப் போடுவதில் இருத்தைவாயன் தந்தை வெகு சமர்த்தர். ஏனெனிலவர் தனது சிறுவயதில் பரிசாரகத் தொழிலில் பழகினவர். மாங்காய், நெல்லிக்காய், எலுமிச்சங்காய், இவ் வூறுகாய்கள் அழகாகப் போட்டு ஏணிவாளருக்கு அவர் அடிக்கடி கொடுப்பார். அவர் செய்யும் தோத்திரங்களாலும் அவர் கொடுக்கும் ஊறுகாய்களாலும் ஏணிவாளர் மனம் குளிர்ந்து மெய் பூரித்து சதா இருத்தைவாயன் நினைவாகவே யிருப்பார். இக்காரணங்களாலும் தான் இருத்தைவாயனிடம் வைத்திருந்த புத்திர வாஞ்சையாலும் எல்லாவிதத்திலும் இருத்தைவாயனைத் தனக்கு அடுத்த பதவிக்கு எப்படியாவது கொண்டுவர வேண்டும் என்று முயன்று அவ்வாறே ஏணிவாளர் நிறைவேற்றிக் கொண்டார்.

ஆனால் இருத்தைவாயன் வேலைக்காரனில்லையா என்ற சந்தேகம் வரலாம். அவன் சாதாரணமான மனிதன் என்று நாம் முன்னமேயே சொல்லி யிருக்கிறோமே. தனது பேனா, மைக்கூண்டு, மேஜை இவைகளையெல்லாம் வெகு சுத்தமாகப் பலமுறை துடைத்து வைத்துக் கொள்வான். அந்தக் கடிதங்கள் புஸ்தகங்கள் அவைகளுக்கு ஏற்பட்ட விடத்திலிருக்கும்படி சரியாகப் பார்த்து வைத்துக் கொள்ளுவான். ஒரு புது உத்தரவு எழுதவேண்டி யிருந்தால் அதற்குச் சரியாகப் பழய உத்தரவு ஒன்றை ஒரு கடிதத்தின் கீழ் பதுக்கி வைத்துக் கொண்டு அதின் நடைப்பிரகாரம் அதைப் பார்த்துப் பார்த்து புது உத்தரவு வெகு அழகாகத்தானே யுக்தியாக எழுதுவதுபோல் எழுதுவான். அச்சமயத்தில் யாராவது தன்னிடம் வருவதைக் கண்டால் தன்னெழுத்தை அவனுக்காக நிறுத்துவதுபோல் சிரிப்பு முகத்துடன் நிறுத்தி பழைய உத்தரவு அவன் கண்ணுக்குத தெரியாதபடி பதுக்கிவைத்து அவனுடன் சிரித்துப் பேசி அவனை அனுப்புவான். ஆனால் இரவும் பகலும் உழைத்து எல்லாரிடமும் வேலை வாங்குவான்.

ஏணிவாளர் இயல்பாக வெகு நல்லவர். ஆனால் உத்தியோக முறைமையில் கையெழுத்து வைப்பதைவிட மற்றவித கௌரவ

மான வேலை அவருக் கொன்றும் இல்லை யாகையால் ஒழிந்த வேளை களில் யாராவது கோட் சொன்னால் அதைப் பிரியமாகக் கேட்பார். கனிவர்க்கங்கள், தாது புஷ்டி லேகியங்கள் இவைகளை எப்பொழு தும் புசித்துக் கொண்டு சுகமாகக் காலங் கழிப்பார். எப்பொழுதும் இவருக்குத் தூக்கம் முகமே ஒழிய விழித்த முகமும் கிடையாது. சொற்பம் ஸ்தோத்திரப் பிரியர். யாராவது தன்னைப் புகழ்ந்தாலும் தன்னை அடிக்கடி வந்து பார்த்தாலும் அவர்களை ஏணிவாளர் நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவருவார். வெகு தனிகராகையால் உத்தி யோகஸ்தர்கள் செலவுக்குப் பணமில்லை என்று தனது கஷ்டத்தை வாய்விட்டு சொல்லிக் கொண்டால் ஏணிவாளர் அவர்களுக்கு 500,1000 கொடுப்பார். கொடுத்த பணத்தை திரும்பிக் கேட்க மாட்டார். ஒரு கலியாணம், கார்த்திகை என்று யாராவது உத் தியோகஸ்தர்கள் உத்தரவு கேட்டால் சலியாமற் கொடுப்பார். ஒரு வனை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்று மனம் வைத்து விட்டால் அவனைப் பற்றி ஆயிரம் பொய் சொல்லியாவது அவனைப் போல் சாமர்த்தியசாலி யில்லை யென்று மேலதிகாரிகளுக்குக் காண் பித்து பெரிய உத்தியோகங்கள் பண்ணி வைப்பார். இவர்கள் அவ் வித நன்கு மதிப்புக்கு ஒவ்வாத வண்ணம் ஏதாவது உத்தியோக முறைமையில் பிழைகள் செய்து விட்டாலும் அதை மேலதிகாரி களுக்குக் காட்டாமல் தானாகவே மறைத்து விடுவார்.

தீனதயாளுவைப்போல் அவருக்கு வேண்டாதவர்கள் ஒரு சிறு பிழையைத் தெரியாமலே பண்ணி விட்டால் அதை எவ்வளவு பெரி யதாகக் காட்டவேண்டுமோ அவ்வளவு பெரிதாகக் காட்டி எல்லா அதிகாரிகளுக்கும் தெரியும்படியாகச் செய்வார். தீனதயாளுவை சில வேளைகளில் கூப்பிட்டுப் பழித்து பரிகாசம்பண்ணி "ஆம், ஓய்? நாம் பெரிய வேலை கொடுக்கவில்லை என்று மட்டும் எப்பொழுதும் நம்மேல் குற்றஞ் சாற்றுகின்றீர், இவ்வாறு பிழைசெய்தால் உமக்கு எப்படி வேலை உயரும்?" என்று கண்டிப்பார். ஏதாவது அதிகச் சம்பளமாக வேண்டிய சந்தர்ப்பம் பார்த்து, அவ்வதிக சம்பளம் கொடுக்காமலிருப்பதற்குக் காரணமாக இக்குற்றங்களை அவர்வெளிக் கொண்டுவருவார், இவன் என்ன செய்யக்கூடும்! என்னைவிட

அதிகப் பிழை செய்தவனை மன்னித்ததுபோல என்னை ஏன் மன்னிக்கக்கூடாது என்று கேட்கலாமா! ஏணிவாளர் இத்துடன் தீனதயாளுவை விடமாட்டார். தீனதயாளு வெகு வித்வானாகையால் பல பெரிய மனிதர்களுக்குத் தெரிந்தவன். அவர்களை ஏணிவாளர் கண்டால் தானாகவே முன்னிட்டுக் கொண்டு "என்ன! நான் ஏதோ தீனதயாளுவிடம் கருணையாக நடக்கவில்லை என்று சொல்லுகின்றீர்கள். நேற்றையத் தினம் அவன் ஒரு உத்தரவு அனுப்புவதற்குப் பதிலாக தனது சொந்த பிரஸங்கம் ஒன்றை மேலதிகாரிக்கனுப்பினான். என்மூலமாக எல்லாக் கடிதங்களும் போகவேண்டுமாகையால் நான் அதைப்பார்த்து உடனே அதை நிறுத்தி அவனைக் கூப்பிட்டு அவன் பிழையை அவனுக்குக் காட்டிச் சரியாகச் செய்தேன்" என்று சொல்லுவார். இவர் சொல்லுவதைத்தான் ஜனங்கள் நம்புவார்கள். ஏழைபேச்சு அம்பலமேறுமா! இவ்வாறு ஒரு சமயத்தில் தீனதயாளு சாத்தானிகள், ஜெயின பிராமணர்கள்என்றெழுதிய காரணத்தாலோ, அல்லது தன்னைச் சேர்ந்தவர்களை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற நோன்பாலோ ஒரு பாவமும் அறியாத தீனதயாளுவிடம் ஏணிவாளர் கருணையாக இருக்கவில்லை. எல்லாருக்கும் நல்லவனான தீனதயாளு ஏதோ தனது போதாத காலத்தால் ஏணிவாளரும் இயல்பாகவே நல்லவர் என்ற பெயர் பெற்றிருந்தும் தீனதயாளுவிடம் கடுகடுத்தமுகமாகவே யிருந்தார். தன்னுடைய பந்துக்கள் பல பெயர்களைக் கிருக்குங்கச்சேரியில் ஏணிவாளர் உத்தியோகஸ்தர்களாக நியமித்திருந்தார். பெரிய துரைகள் யாராவது "இக்கச்சேரியில் சாத்தானிகள் அதிகமாக விருக்கிறார்களே, இவர்கள் உமது பந்துக்களா?" என்று கேட்டால், "இல்லை. நாங்கள் வெள்ளை மலர்கட்டும் சாத்தானிவர்க்கம், இவர்கள் சிவப்பு மலர்கட்டும் வர்க்கம்; இனம் ஒன்றென்றாலும் எங்களுக்குள் கொள்வினை கொடுப்புவினை ஒன்றுங் கிடையாது, நாங்கள் பந்துக்களல்ல" என்பார். சுருக்கிச்சொல்லின் இவரால் உபகாரம் பெற்றவர்களில் பலர் பந்துக்கள் மட்டுமல்ல; சமீப பந்துக்களாக விருப்பார்கள். உபகாரகுணமே இவரிடம் மேலிட்டிருந்தபடியால் இவர் சொல்லுவதை ஒருவரும் ஆக்ஷேபிக்க மாட்டார்கள். ஏணிவாளர் கம்பீர நடையாலும் பார்வையாலும் ஒவ்வொரு துரைகளை

யும் மயக்கி, தன் கீழிருப்பவர்களிடம் வெகு சாமர்த்தியமாய் வேலை வாங்கிப் பேனுவைத் தன் கையிற்பற்றி சிறு உத்தரவு ஒன்றுகூட எழுதாமலே எல்லா உத்தரவுகளுக்கும் தன் கையொப்பம்மட்டும் வைத்து மேலான அதிகாரிகளுக்கனுப்பி அவர்களிடம் கீர்த்தி பெற்றுத் தன்னைவிட சமர்த்தன் ஒருவனுவது கிடையாது என்று பெயர் வாங்கிவந்தார். இதில் இவருக்கு முக்கிய சகாயம் இருத்தைவாயன். கையெழுத்துப் போடத்தெரியாமல் சிலர் பழைய ராஜாங்கத்தில் தாசில் பண்ணிஞர்கள் என்று கதை சொல்லுகிருர்களே அதைக் காட்டிலும் கையெழுத்து ஒருவாறு போட்டாவது உத்தியோகம் பண்ணுவது எவ்வளவு மேன்மை!

ஏணிவாளர் தீனதயாளுவை எவ்வளவோ கெடுத்து வந்த போதிலும் தீனதயாளுவுக்கு தனது யஜமானனிடம் ஈசுவரபக்தி. நிர்க்கதியாக விருக்கும் நமக்கு அன்னம் அளிக்கப்பட்டவர் இவரே என்று காலையும் மாலையும் ஏணிவாளரைத் துதிப்பான். அவரைப் பற்றியாவது அவரது பெண்டு பிள்ளைகளைப் பற்றியாவது யாராவது ஏதாவது சொல்லத் தீனதயாளு கேட்டால், தானங்கிருந்தால் அப்பேச்சுகளைச் செவிகொடுத்துக் கேட்பதிஞல் தனக்குப் பாவம் சம்பவிக்கும் என்று மெய் நடுங்கி ஒதுங்கிவிடுவான். இவ்வண்ணம் தீனதயாளு புன்னையில் உத்தியோகம் பண்ணிவந்தான். அங்கு அவன் பிழைப்பு அவ்வளவு நன்ருக விருந்ததாகச் சொல்ல முடியாது.

## 11. காந்தி புன்னைக்கு வந்தது

*அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்*
*களவறிந்தார் நெஞ்சிற் கரவு.*

தீனதயாளுவின் உத்தியோகந்தான் இப்படியாயிற்றே. அவன் குடும்ப ஸ்திதியோவென்றால், அதுவும் பலவிதத்தில் அவனுக்குத் துயரத்தையே உண்டாக்கிக் கொண்டிருந்தது. அவன் மலைநாட்டில் உத்தியோகம் பண்ணினபொழுதும் புன்னைமாநகர் வந்தபொழுதும் காந்தி அவனிடமிருந்து பற்றிய ரூபாவை நாம் முன்னமேயே சொல்லியிருக்கின்றோம். வெகு மானியான தீனதயாளு எல்லாவற்றிற்கும் உட்பட்டிருந்தான். இவ்வளவும் போதாதென்று காந்தி அவன் புன்னைக்கு வந்த இரண்டாம் வருஷம் தனது பெண், பிள்ளை இவர்களுடன் சணற்காலை விட்டுப் புறப்பட்டுப்புன்னை வந்து சேர்ந்தாள். தான் வருவதாக முன்னமேயே தெரிவிக்காமல் வந்தாளாகையால் தீனதயாளு அவளை வெகு அன்பாக உபசரித்து "இதுதான் தாய் என்ற பந்துவின் லக்ஷணம். நானாகவே நியாயமாய் இவ்விதம் வந்து என்னிடம் இரண்டு மாதமாவது சௌக்கியமாக விருக்கக்கூடாதா என்று எழுதியிருக்க வேண்டும். அப்படிச் செய்யாதது என் பிசகு. ஆனால் ஏதோ பற்பல தொந்தரையால் நானப்படி எழுதாமலிருந்து விட்டேன். தாங்கள் என்னை மன்னித்து இவ்வளவாவது தயை செய்தீர்களே; அதே என் பாக்கியம்" என்றான். அதற்குக் காந்தி "ஆம் அப்பா, ஆசை வெட்கமறியாது, என்பது பழமொழி. நீ என்னதான் என்னை ஒதுக்கி வைத்தாலும் நான் ஒட்டிக்கொள்ளத்தான் வேண்டுமென்று இங்கு நீ அழைக்காமலிருக்கும் பொழுதே வந்திருக்கின்றனன்" என்று சொல்லி விசனப்பட்டாள். தீனதயாளு தனது சிறிய தாய் விசனப்பட்டதைக்கண்டு தானும் அழுதுவிட்டான். அவள் சொல்லுவதெல்லாம் அன்புடன் சொல்லுவதாக எண்ணி, தீனதயாளு தன்னைத் தானே நொந்தவனாய் தன்னை மன்னிக்கவேண்டு

மென்று கேட்டுக்கொண்டு, எப்படியாவது தன்னை நாடித் தனது சிறுதாய் வந்ததற்காகச் சந்தோஷமடைந்தான். அன்று முதல் தான் கச்சேரியிலிருந்து திரும்பி வரும்பொழுதெல்லாம் ஏதாவது புதிய கனிவர்க்கங்கள் வாங்கி வந்து தனது தாயாருக்கு அன்புடன் கொடுப்பான். எவ்வளவோ ஆதரவாக இவர்கள் எல்லாரையும் நடத்தி வரலானான். சங்குவுக்கு அதிகப் படிப்பில்லை யாகையால் அவனுக்குத் தக்கபடி ஏதாவது ஒரு வர்த்தகனிடம் குமாஸ்தா வேலை போட்டுக்கொடுக்க முயற்சி செய்து வந்தான். மாந்திக்கு விவாகத்துக்குத் தகுந்த பருவம் வந்துவிட்டபடியால் எல்லாரும் சேர்ந்திருக்கும்பொழுதே புன்னையில் பள்ளிக்கூடத்தில் படித்து வரும் பையன்களில் புத்திமானாய் ஒருவனைத் தெரிந்தெடுத்து அக்குழந்தைக்குக் கலியாணத்தை நடத்திவிடவேண்டும் என்ற கருத்துக் கொண்டான். அவனிவ்வளவு நல்ல மனமுடனிருந் தானே. காந்தி வந்த காரணம் என்ன வென்பதை நாம் சற்று விசாரிப்போம்.

காந்தியின் தங்கை பூந்தி என்றொருவளிருந்தாள். அவளும் இளையாளாக ஒரு வறிய அந்தணனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாள். அவனும் ஜம்புநாதபுரத்தான். அவன் பெயர் கையாந்தகரை. கழுத்தில் தாவடம் மனதில் அவகடம் என்றால் அவனிடம் அப் பழமொழி உண்மை. பேசும்பொழுது அவனைவிட யோக்கியன் வேறொருவன் இருப்பானோ என்று சந்தேகிக்க வேண்டியதாக விருக்கும். ஆனால் அவன் சொல்லும் சொற்களவ்வளவும் ஏதோ பின்னால் ஒரு பெரும் மோசத்தையே பற்றியிருக்கும். தனது மோசக்கருத்தை அறியும் புத்தியுள்ளவர்களைக் கண்டால் விலங்குகள் வெளிச்சத்துக்கு அஞ்சிப் பதுங்குவது போல் அவர்கள் சமீபத்தில் அணுகவே மாட்டான். மோசக்காரர்கள் இயல்பாகவே அதி புத்திமான்களாக விருக்கவேண்டுமல்லவா. அவ்வாறு கையாந்தகரையும் வெகு புத்திமான். அவன் பல சிறு தொழில்களிலிருந்து தனது வஞ்சகக் குணத்தால் அவைகளை எல்லாம் ஒன்றின்பின் ஒன்றாக இழந்திருந்தான். கடைசியாய்த் தான் பிழைக்கவழி தெரியாமல் காந்தியை ஒருவிதமாக மோசம்பண்ணிப் பிழைக்க வேண்டும் என்று தீர்மானித்தான். தரித்திரத்துக்கே பசி அதிகம்.

கையாந்தகரை மூன்று ஆள் உணவு உட்கொள்ளுவான். எப்பொழுதும் விபூதி, ருத்திராக்ஷம் தரித்துக்கொண்டிருப்பான். அவன் சிவநாமம் உச்சரியாத நிமிஷம் கிடையாது. இந்த கையாந்தகரை என்பவன் ஒருநாள் சணற்காலுக்கு வந்து காந்தியைக்கண்டு அவளிடம் பின்வருமாறு சொல்லலானான்:—"காந்தி, உன்னைப்போல் பைத்தியக்காரி நான் கண்டதில்லை. மூத்த பிள்ளை புன்னையில் உத்தியோகம் பண்ணுகிறான். நீ சணற்காலில் சாணி தட்டிக்கொண்டிருக்கிறாய்! நீ உன் குழந்தைகள் சகிதம் புறப்பட்டு புன்னை போனால், ஏன் வந்தாய் என்று அவன் உன்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளமாட்டான். அவன் குடித்தனத்தோடு உன் குடித்தனமும் ஒன்றாய்விடும். அதிகச் செலவிருக்கமாட்டாது. இங்கு நிலங்களை ஏதோ ஒரு கலம் ஏற்றக்குறைச்சலாய் ஸ்வாமி போகத்துக்கு அடைத்துவிட்டு, அதில் வரும் மாசூலை நான் விற்றுப் பணமாக்கி வட்டிக்கு விட்டு உனக்குக் கணக்கு ஒப்புவிக்கிறேன். புன்னையில் நீ இவ்விடம் தனிக்குடித்தனம் பண்ணுவதற்காக உனக்கு வரும் பணத்தை ஏதோ இரண்டொன்று குறைத்துக்கொண்டு அவனிடமிருந்து வாங்கி என் பெயருக்கு அனுப்பினால் அதையும் நான் பெற்றுக்கொண்டு வட்டிக்கு கணக்கு ஒப்பிவிக்கின்றேன். கணக்கு கணக்காகவே யிருக்குமே யல்லாது அதில் ஒரு தூசுகூட பிசகாது. நீ வேறு உன் தங்கை வேறே. அடுத்த தெரு வக்கிரமணியனை இந்த வீட்டில் வந்து குடியிருக்கச் சொன்னால் அவன் வீட்டைப் பார்த்துக்கொள்ளுவான். நானும் மாதமிரண்டு தடவை ஜம்புநாதபுரத்திலிருந்து இவ்விடம் வந்து போகிறேன். அப்படி செய்தால் உன் குஞ்சு குழந்தைகளுக்கு ஒருவிதக் குறைவின்றி ஏதோ நீ ரகசியமாக கையில் சேர்த்து வைத்துக்கொள்ளலாம். கையில் காசில்லாத கைம்பெண்ணை இக்காலத்தில் யார் லக்ஷியம் பண்ணுவார்கள்" என்றான்.

கையாந்தகரை இவ்வாறு சொன்னதைத் தனது நன்மையை நாடிச் சொன்னதாகவே காந்தி நினைத்து விட்டாள். தனது தங்கை புருஷன் தன்னை மோசம் பண்ணும் கருத்துள்ளவனாகவிருப்பான் என்று அவள் எண்ணவிடமேயில்லை. ஆனால் கையாந்தகரையோ

எள்ளளவேனும் நல்ல எண்ணத்துட னிவளிடம் இப்படிப் போதித்த வனல்லன். சிறுகச்சிறுக நெல்லாகவும் பணமாகவும் காந்தியிட மிருந்து பற்றலாம் என்ற கருத்துடன் சொன்னதேயன்றி வேறன்று. அவன் பேச்சை அவள் கேட்டதாகத் தெரிந்துகொ ண்டதும் கையாந்தகரை 10 ரூபா கடன் வாங்கி வந்து காந்திக்கும் அவள் குழந்தைகளுக்கும் கைச்செலவுக்குக் கொடுத்து புன்னைக் குப் பிரயாணம் பண்ணி அனுப்பினான். ஆகவே காந்தி இவ்வித போதனையால் வந்தவள்.

அவர்கள் தன்னிடம் வந்ததில் தீனதயாளுவுக்கு அந்தரங்க மாகவிருந்த ஆனந்தத்தைக் காந்தி கண்டறிந்து கொண்டாள். இன்னும் அவன் மனத்தை முற்றிலும் கவர அவனுக்குப் பிடிக்கும் என்று தான் அறிந்திருந்த சில சமையல்களைச் செய்துபோட்டாள். சில பக்ஷணங்களைச் செய்து கொடுத்தாள். தீனதயாளுவோ வேப் பம் எண்ணெயைக் கலத்தில் போட்டால் நெய்யென்று நினைத்து புசிக்கப்பட்டவன். ஏனெனில் எல்லாவிதத்திலும் அதிக தொந்த ரைப் பட்டவனாகையால் ஒன்றையாவது ருசி பார்த்து புசிக்கப்பட்ட வனல்லன். தான் வந்தவுடனே தனது காரியத்தைத் தெரிவிக்கக் கூடாதென்று காந்தி சமயம் பார்த்துக்கொண்டிருந்தாள். அந்த மாதம் முடிந்து அடுத்த மாதம் முதல் தேதியில் தீனதயாளு சம் பளம் 50-ரூபா வீடுகொண்டு வந்தான்.

அன்றிரவு போசனம் கழிந்து தீனதயாளு தாம்பூலம் போட் டுக்கொண்டிருக்கும் சமயம் பார்த்து அவனுடைய கடைசிக் குழந் தையாகிய பாலசந்திரனை அவள் தனது இடுப்பில் தூக்கிவைத்துக் கொண்டு அவன் சமீபத்தில் வந்து "குழந்தாய், இவன் வெகு துஷ்டன். வெகு புத்திசாலி. எல்லா பேச்சுக்களும் இவனுக்கு ஒரு வயதிற்குள்ளேயே வந்துவிட்டன. பொழுது புகுந்து ஜாம மாயிற்றே. குழந்தையானல் இன்னும் தூங்காதா" என்று கொஞ்ச லானாள். அவள் சொல்லுவதை அவ்வளவு அதிகமாகக் கவனிக் காமல் தீனதயாளு வெகு சந்தோஷமாகத் தனது குழந்தையைச் சிரித்துக்கொண்டு பார்த்தான். அது காந்தியின் இடுப்பைவிட்டு ஒரு முழிப்பாய் முழித்துக்கொண்டு தன் தந்தையின்மேல் தாவி

ற்று. தீனதயாளுவும் வெகு ஆவலுடன் பாலசந்திரனை வாங்கி தன் மார்பின்மேல் போட்டணைத்துக்கொண்டான். ஆயிரம் துக்கம் தீனதயாளுவுக் கிருந்தபோதிலும் அவன் தன் இளங்குழந்தை களைக் கண்டால் அவ்வளவையும் மறப்பான். குழந்தைகளைக் கண் டால் அவனுக்கு வெகு ஆனந்தம். அவனுக்கு நான்கு, ஐந்து குழந்தைகள் என்றாலும் ஒவ்வொரு குழந்தையினிடமும் அவன் குறைவில்லாத அன்புள்ளவன். அக்குழந்தைகளும் வீங்கலும் தூங்கலுமாக விருக்காமல் பார்ப்பதற்கு வெகு லக்ஷணமாகவே யிருக்கும். இதுவும் ஒரு நற்சமயந்தான். இவன் சொற்ப நாழிகை தனது குழந்தையிடம் கொஞ்சட்டும். அப்புறம் நமது சங்கதியை ஆரம்பிப்போம் என்று, காந்தி தானும் பாலசந்திரனிடம் கொஞ்சிக் கொண்டிருந்தாள். இப்படி இவர்களிருந்தபொழுது மூன்றாவது மனிதன் ஒருவன் பார்த்திருந்தால் தீனதயாளுவின் கபடமற்ற குண மும் காந்தி ஏதோ கபடமான எண்ணத்துடன் அங்கு வந்திருக் கிறாள் என்றும் அவனுக்கு எளிதில் விளங்கும். குழந்தையிடம் விளையாட்டின் மும்முரம் ஓய்ந்ததும் காந்தி "அப்பா குழந்தாய்! இன்று முதல் தேதியாயிற்றே, சம்பளம் வந்ததா?" என்றாள். "ஆம் அம்மா! வந்தது. நியாயமாய் அதை நான் தங்கள் கையில் கொண்டுவந்து கொடுக்கவேண்டும். ஏதோ அவசரத்தில் மறந்து விட்டேன். அதோ மேசையின் அறையில் வைத்திருக்கின்றேன். என்ன சம்பளம்! என்ன உத்தியோகம்! பெரிய நகரங்களில் வாழ ஒன்று வெகு பணக்காரனாக விருக்கவேண்டும்; இல்லை யெனில் வெகு தரித்திரனாக விருக்கவேண்டும். இவ்விருவர்களுக்குந்தான் நகரவாசம் வெகு சிலாக்கியம். நடு நிலைமையிலிருக்கப்பட்டவனுக்கு வெகு கஷ்டம். இன்று வெள்ளிக்கிழமை. பெட்டியைவிட்டு பணத்தை எடுக்கக் கூடாதென்றிருக்கின்றேன். வேறு கிழமை யாக மட்டுமிருந்தால் இதற்குள் சம்பளம் செலவாயிருக்கும். நகர த்தில் நடு நிலைமையிலுள்ள உத்தியோகஸ்தர்கள் சம்பாதிப்பதெல் லாம் பாற்காரன், தயிர்க்காரி, அரிசிக்காரன், வண்ணான், அம்பட் டன், வீட்டு வாடகைக்காரன், இவர்களுக்கேயல்லாது வேறல்ல. குப்பைக்காரனுக்கு 2-ரூபா மாதச்சம்பளம் கொடுத்து இந்நகரத்தில் பிழைக்கவேண்டும் என்றால் ஒருவன் முன்னுக்கு வருவதெப்படி?"

காந்தி:—நல்லது நான் சணற்காலிலிருந்தால் எனக்கு நீ 25-ரூபா அனுப்புவாயல்லவா?

தீனதயாளு:—ஆம்! என்ன ஆக்ஷேபம்.

காந்தி:—இப்பொழுது நானிவ்விடத்திலேயே யிருந்தபோதிலும் சணற்காலிலேயே இருப்பதாக எண்ணி 25-ரூபா என்னிடம் கொடு. நான் அந்தப்பணத்தை வாங்கித் தனியாக மிகுத்து வருகின்றேன். கடைசியாய் அப்பணம் எங்கு போகும். ஒரு ஆபத்து சம்பத்து என்றால் எல்லாம் உனக்குத்தான் உதவும், என்றாள்.

தீனதயாளு தவளை தன் வாயால் தான் கெடுவது போல் "ஆம் என்ன ஆக்ஷேபம்" என்று சொல்லி சிக்கிக்கொண்டான். அதிகச் செலவு என்பான். 4, 5 ரூபா அதிகச் செலவாக விருக்கட்டும். அதுபோக 20-ரூபா கொடு என்று காந்தி கேட்பாள். பலவிதமாக முகாந்திரங்கள் சொல்லிப் பார்த்தான். அவன் க்ஷேமத்தையே கருதி பணம் மிகுக்கவந்தவள் போல காந்தி மாயப்பொடி தூவிவிட்டாள். தான் வந்த உத்தேசப்படியே அந்த மாதம் ரூபா 20-பறித்துக்கொண்டாள். கையாந்தகரை போட்டமுடி சரியாய் நிறைவேறிற்று. அவ்வஞ்சகனின் குடும்பம் பிழைக்க வழியுமாயிற்று.

தீனதயாளுவிடம் ஈசன்தானிரங்கவேண்டும். பால சமுசாரி; வெகுமானி, உத்தியோக முறையிலோ ஏணிவாளனுடைய கடாக்ஷக்குறைவினால் அவனுக்குச் சந்தோஷமேயில்லை. பல பெயர்கள் செய்யும் வேலைகளை அவன் ஒருவனே செய்யும்படி சில சமயத்தில் உத்தரவாகும். முடியாதென்று நியாயத்தை எடுத்துச்சொன்னால் வேலை செய்ய அவனால் முடியவில்லை என்று எங்கு யஜமானனுக்குத் தோன்றிவிடுமோ என்று அவன் இரவும் பகலும் உத்தியோகத் தொழிலிலேயே தனது காலத்தைக் கழிப்பான். கவலையாலும் விசாரத்தாலும் அதிக உழைப்பாலும் அவன் தேகம் மெலிந்து வாடியிருந்தது. இந்த கஷ்டம் போதாதென்று காந்தி அவன் பாடுபட்டுத் தேடிவரும் பணத்தைப் பங்கிட்டுக்கொள்ள வந்து சேர்ந்தாள். சங்குவோ புதுசம்பந்தி வீட்டில் மாப்பிள்ளையிருப்பதாகத் தன் மனத்தில் எண்ணி நடந்து வந்தானேயல்லாது, இது

நமது குடும்பம், நமது அண்ணன், என்ற அன்புடனும் ஒற்றுமையுடனும் நடக்கவேயில்லை. எது கொடுத்தாலும் குற்றமும் குறையும் சொல்லி வந்தானேயன்றி சந்தோஷமும் திருப்தியும் காட்டிக் கொள்ளவேயில்லை. மாந்தி வெகு நல்ல பெண். குழந்தையென்றாலும் தனது தமையன் தீனதயாளு படும் சிரமங்களை ஒருவாறு உணர்ந்தவளாகவே காட்டிக் கொண்டாள். இவ்வண்ணம் வெகு சிரமத்தின்பேரில் இரண்டொரு வருஷகாலமும் சென்றது.

நாளுக்கு நாள் தீனதயாளுவுக்குச் சங்கடங்கள் அதிகரித்துக் கொண்டே வந்தன. அவன் தலையால் வணங்கி தனது சிறு தாயாரையும் அவள் குழந்தைகளையும் அன்பும் ஆதரவுமாகத் தாங்கி வந்தாலும் அவ்வம்மணி அவன்படும் கஷ்டத்துக்கு ஒரு நாள்கூடப் பரிதாபமில்லாமல் தனது பாகம் என்று பணம் பற்றுவதில் எப்பொழுதும் கண்ணாகவே யிருந்தாள். சங்கு நெறி நீங்கிய தத்தாரி என்று பெயர் எடுத்து வந்தானேயல்லாது தனது தந்தை மகாதேவர் அல்லது தனது தமையன் தீனதயாளு இவர்களில் யாராவது ஒருவர் வழியில் நடக்கப்பட்டவனாகக் காணப்படவில்லை. மாந்தி மட்டும், ஏதோ தான் பிறந்த குலத்தை அனுசரித்தவளாய்ச் சிறிது அன்பும் பற்றுமாகவிருந்தாள். தீனதயாளுவுக்கு அக்குழந்தையை ஒரு நல்லவிடத்தில் விவாகம் செய்து கொடுத்து விட வேண்டுமென்பது கருத்து. இதை வெளியிடாமல் வெகு காலமாக ஒருவனைப் பார்த்திருந்து தன் மனத்துள் ஏதோ சில ஏற்பாடுகள் செய்து வந்தான். காந்தியின் எண்ணங்கள் எவ்வளவு நாளிவனுக்குத் தெரியாமலிருக்கும். சொற்ப நாளைக்கெல்லாம் புலப்பட்டு விட்டன. ஒரே குடும்பமாக விருக்கும் பொழுது மாந்தியின் விவாகத்தைச் சிறப்பிற்றாற்றான் கௌரவம்; அக்குழந்தைக்கு நல்லவரனும் வரும்; என்று அவன் கருதி அது நிரம்பும் வரையில் நாம் வாயைத் திறவாமலிருந்து அப்புறம் குடும்ப விஷயமாக ஒருவித ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ஆலோசித்தான். தீனதயாளுவுக்கு வருஷந்தோறும் ஒரு குழந்தை உண்டாய்க் கொண்டிருந்தது. வருஷம் வருஷம் அடுப்பில் பெரிய பானை ஏற்றி சமையல் செய்யும்படியாயிற்று. சமுசாரம் விருத்தியாவதற்குத் தகுந்தபடி

அவன் சம்பளம் உயரவில்லை. அதுபோனால் போகட்டும் என்றால் காந்தி சம்பரமமாக வீட்டில் சாப்பிட்டுக்கொண்டு கிராமத்தில் வரும் மாசூலை தீனதயாளுவுக்குக் காட்டாமல் அவனிடமிருந்து ரூபா கைப்பற்றி வந்தாள். இந்த அநியாயம் எத்தனை நாள்தான் நிலைக்கும். சுமார் 2-வருஷ காலமாக விருந்து விட்டு காந்தி தான் மட்டும் நெல் முதலியன என்னவாயிற்று பார்த்து வரலாம் என்றும் தானனுப்பிய பணங்களை பூந்தியின் கணவன் எவ்வளவு மட்டும் விருத்தி பண்ணி வைத்திருக்கின்றான் என்று தெரிந்து கொள்ளும் பொருட்டும் சணற்கால் போய் 10, 15-நாளில் திரும்பி வருவதாகச் சொல்லிப் புறப்பட்டாள். அவள் புறப்பட்ட காலம் சித்திரை மாதமாக விருந்தது. அதுதான் சமயம் என்று பார்த்து தீன தயாளு நற்குலத்தில் பிறந்த ஒருவாலிபனுக்கு மாந்தியை விவாகம் செய்து கொடுத்தான். நல்லவரன் நேர்ந்தபடியாலும், தாமதித்தால் அவ்வரன் தப்பிவிடும் என்று தோன்றியபடியாலும் காந்தி வரவை எதிர் பார்க்காமலே தானே அவ்விவாகத்தைச் செய்து முடித்ததாகத் தனது சிறு தாயாருக்குக் கடிதமும் அனுப்பினான். வரன் சிலாக்கியவரனாக இருந்தபடியால் ஒருவரும் ஒருவித ஆக்ஷேபம் சொல்ல இடமேயில்லாமலிருந்தது. தீனதயாளுவும் இனி நமது கடமை நிறைவேறிற்று. மாந்தி இன்னும் 7, 8 மாத காலத்தில் தன் கணவன் வீடு போய் விடுவாள். நாம் கவனிக்க வேண்டியதெல்லாம் அக்குழந்தையைப்பற்றி, நமது தந்தை மாந்தியை வெகு செல்வமாக வளர்த்து வந்தார். அவர் ஆத்துமா குளிரும்படி அவளை நல்ல இடத்தில் கொடுத்து விட்டோம் என்று தீன தயாளு மனம் களித்தான்.

பிற்க சணற்கால் சென்ற காந்தி பூந்தியின் புருஷனைக் கண்டு அவனிடம் இரண்டு வருஷத்துக் கணக்கு கேட்டாள். அவன் ஒரு தூசுகூட விடாமல் அழகாகக் கணக்கு எழுதி வைத்திருந்தான். நெல்லுக் கணக்கு, பணக்கணக்கு எல்லாம் சரியாகக் காட்டினான். நெல்லினத்தில் 200-250 ரூபா வரவும், பணமாக காந்தி யனுப்பியதில் ரூபா 500-க்கு மேல் வரவும் ஏற்பட்டது. நாம் நமது குமாரனிடம் ஒரே குடித்தனம் பண்ணின யுக்தியாலல்லவோ இவ்

வளவு முதல் நமக்குண்டாயிற்றென்று காந்தி களித்தாள். தனக்கு இவ்வழி உபதேசித்ததற்காக கையாந்தகரையைப் புகழ்ந்தாள். அவள் சந்தோஷம் அற்ப சந்தோஷம் என்பது இன்னும் அரை நாழிகைக்குள் அவளுக்கு விளங்கும். எப்படி என்பதை நாம் உடனே விசாரிப்போம்.

அவ்வளவு சரியாய்க் கணக்கெழுதி யிருந்த கையாந்தகரை யை நாம் முதலில் ஏன் கபடமுள்ளவன் என்று தெரிவித்தோம்; அதன் காரணத்தையும் நாம் விசாரிப்போம். இவ்வண்ணம் முதல் முதல் காந்தியின் சந்தோஷத்தை வரவு கணக்கைக் காட்டி அந்த துஷ்டாத்துமா பெருக்கி, அதன் பிறகு அவன் செலவு கணக்கை எடுத்தான். அக்கணக்கோ வரவு கணக்கைவிடப் பதின் மடங்கு பெரிய புஸ்தகமாக விருந்தது. மாச மிரண்டு முறை ஐம்புநாத புரத் திலிருந்து தான் சணற்காலுக்கு வந்து போனது கால் நடையாக விருந்தபோதிலும் வண்டி வாடகை போகவர 4-ரூபா போட்டுக் கொண்டான். அவன் சாப்பிட்டது சத்திரம் சாவடியாக விருப் பினும் தனக்கு 4-நாளைக்குப் படிச்செலவு காலரை இரண்டு ரூபா யாக கணக்கில் குறித்தான். அதன் பிறகு பாக்கு வெற்றிலைச் செலவு, இளநீர் செலவு, என்று பல செலவுகள் எழுதியிருந்தான். சணற்கால் வீட்டில் அவன் கை வைத்ததே யில்லை. அவ்வீட்டிற்குச் சுண்ணாம்பு அடித்த செலவு, கூறைமாற்றிய செலவு, என்று வருஷத்துக்கு 40-ரூபா வரையில் காட்டியிருந்தான். தானவ்வாறு அந்தக் குடும்பத்தைப்பார்த்ததற்காகத் தனக்கு நான்கு கலம் மாதச் சம்பளமென்றும் சணற்கால் நெல்லவ்வளவையும் தான் ஐம்புநாத புரத்துக்கனுப்பி யிருந்தான். இந்தச் செலவுகளெல்லாம் போக இரண்டு வருஷங்களிலும் மிகுந்தது 200-ரூபா. மாதம் மாதம் வெகு சரியாக கணக்கு எழுதப்பட்டிருந்தது. கையாந்தகரை தன்னை ஏமாற்றிய சங்கதி காந்திக்கப்பொழுது தான் புலப்பட்டது. தான் தீனதயாளுவின் அவஸ்தையைக் கவனிக்காமல் அவனிடம் அபகரித்த பணமெல்லாம் இவ்வாறாயிற்றே என்று அவள் மனம் பதைத்தாள். மிகுந்த பணம் 200-ரூபா எங்கே என்று அவள் கேட்டால் அதற்குக் கையாந்தகரை, திடீர் என்று பணம்

கிடைக்குமா? அந்தத் தொகையை மாதம் 100-க்கு 3-ரூபா வட்டியாக நான் விட்டிருக்கின்றேன்; இந்த ஊர்களில் அதிக வட்டிகிடைக்காதாகையால் பட்டிக்காட்டில் போட்டிருக்கின்றேன்; இன்னும் 2, 3-வாரத்துக்குள் பெயர்த்துக் கொடுக்கின்றேன், என்றான். பாம்பினடி பாம்பறியும் என்னும் பழமொழிபோல் காந்திக்கு இப்பணமும் தனக்கு கிடைக்கமாட்டாது, வட்டிக்கு விடப்பட்டிருந்தாலல்லவா கிடைக்கும், கையாந்தகரை தனக்கே எடுத்துக் கொண்டு விட்டான் என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கி விட்டது.

இந்த அவஸ்தையில் அவள் சணற்காலிலிருந்த பொழுது தான், மாந்தியின் விவாகம் நடக்கப்போவதாக தீனதயாளு காந்திக்கெழுதியதும், "அடா! பாவி! இவ்வளவு மோசம் நீ செய்வாய் என்றிருந்தால் நான் உனக்கு ஒரு காசுகூட அனுப்பி யிருக்கமாட்டேன், என் குழந்தைக்கு விவாகம், இந்த சமயத்துக்கு என்றாவது 100-ரூபா கொடு," என்று கெஞ்சினாள். அவள் என்ன கெஞ்சினாற்றான் என்ன! போன பணம் திரும்பிவருமா!! கைம்பெண் கைக்காசு அதிகமாக விருத்தியுமாமா!!! தீனதயாளுவின் பெருந்தன்மையும், அவனுக்கு ஆயிரம் பணச் செலவிருந்தும் அவன் அலக்ஷியமாகப் பணம் கொடுத்து வந்ததும், அதை வாங்கித் தான் காரியாக்கியதும், அவன் அப்பொழுது தனது மாந்திக்கு நல்வரன் தேடிக் கலியாணத்துக்கு ஏற்பாடு செய்திருந்ததும், அதே சமயத்தில் கையாந்தகரை தன்னை வஞ்சித்ததும், காந்திக்கு நன்றாக விளங்கிற்று. அத்தருணத்தில் அவளுக்கு கொஞ்சம் நற்புத்தி வந்ததாகவும் சொல்லலாம். அப்புத்தி அப்படியே நிலைத்திருந்தால் எவ்வளவு நன்மை. அதுதானிருக்கின்றதில்லை. பெரும்பாலும் கைம்பெண்களை அவர்களுடைய நெருங்கின பந்துக்கள் கபடவார்த்தைகளால் ஒரு நிமிஷத்தில் மாற்றிவிடக் கூடும். தான் செய்த சூது ஒருவிதமாக காந்திக்குத் தெரிந்து விட்டது, இனி தனக்கு வரும் வருமானம் ஒருகால் குறைந்துவிடும் என்று கையாந்தகரை எண்ணி ஜம்புநாதபுரத்துக்குச் சொல்லி யனுப்பி தனது மனைவியாகிய பூர்ணிமை வரவழைத்தான்.

சமயம் நேரிடும் பொழுதெல்லாம் மூத்தாள் குமாரனுகிய தீனதயாளு என்றென்றைக்கும் காந்தியையும் அவள் குழந்தைகளை யும் காப்பாற்றமாட்டான் என்றும் எப்பொழுதும் அவளைக் காப் பாற்றப்பட்டவர்கள் பூந்தியும் தானுந்தான் என்றும், காந்தி தனது குடும்பத்துக்கும் பூந்தி குடும்பத்திற்கும் வித்தியாஸம் பண்ணக் கூடாதென்றும் சொல்லிக்கொண்டே வந்தான். அவன் சொல்லி ஒழிந்த சமயங்களில் அதே பாடத்தை அவன் ஏவுதலின்படி பூந்தி ஒப்பிப்பாள். காந்தி ஸ்நானம் பண்ணுவதற்கு முந்தியே அவள் ஈரப்புடவையைப் பூந்தி துவைத்துணர்த்துவாள். காந்தி புன்னையிலிருந்து வந்தவளாகையால் பட்டணங்களில் 10-நாழிகைக் கெல்லாம் சாப்பிடுவது வழக்கம் என்று கருதி 10-நாழிகைக்குள் பூந்தி காந்திக்கு வேண்டிய உணவை ருசியாகவும் அழகாகவும் செய்து வைப்பாள். இவ்வாறு புருஷன் பெண்சாதி யிருவர்களும் காந்திக்கு மாயப்பொடி தூவி வந்தார்கள். இன்னும் சொற்பநாளி வளை சணற்காலில் நிறுத்தி இவளை நல்ல வார்த்தையாலும் உபசார த்தாலும் நம்மை நம்பச் செய்ய வேண்டும், இல்லாவிடில் நமக்கு பணம் வரமாட்டாதென்று கைபார்ந்தகரை அஞ்சி, புற்புலத்துப் பஞ்சு உடையானுக்கு சொல்லியனுப்பியிருக்கிறேன்; அவன் ஒரு சமயம் என்றால் இல்லை என்று சொல்லாமல் பணங்கொடுப்பான்; நாளை அவன் நூறு ரூபா கொண்டு வருவான்; அதையாவது நீ கையிற்கொண்டுபோனால் எனக்குத் திருப்தியாகவிருக்கும் என்று ஆசைவார்த்தை காட்டி நிறுத்திவைத்தான். பணம் வரப்போகிற தில்லை என்பது கையார்ந்தகரைக்கு நன்றாகத் தெரியும். ஒரு கால் கிடைத்தால் மாந்திக்கு இச்சமயத்தில் நாம் ஏதாவது சீர் செய்ய லாமே என்பது காந்தியின் ஆசை. இன்று 10-நாழிகைக்கு வரும், ஏதோ இன்று அசந்தர்ப்பம், பஞ்சுடையான் பருத்திக்காட்டுக்குப் போய் அங்கிருந்தபடியே ஸப்த ஸ்தானத்துக்குச் சென்று விட்டா னும், நாளை அகத்தியம் பணம் வரும். அவன் ஒரு நாளும் மோசம் பண்ணப்பட்டவனில்லை. அவன் வீட்டிலேயே கலியாணமாம், கைப் பணமெல்லாம் வெளியில் செலவாய்விட்டதாம், இன்னும் இரண்டு நாளைக்குள் தனது தலையை அடகு வைத்தாவது பணம் அனுப்பு கிறேன் என்று எழுதியிருக்கிறான். ஓகோ இது கிஸ்து காலம்,

ஆகையாற்றான் பணம் கிளம்புவது இவ்வளவு வருத்தமாகவிருக்கின்றது. என்று இவ்விதமாகப் பலவித சாக்கு போக்குகள் சொல்லி சணற்காலில் காந்தியை 20, 30-நாள் கையாந்தகரை நிறுத்திவிட்டான். அதற்குள் புன்னையில் மாந்தியின் விவாகம் நிறைவேறி 10-நாளுமாய்விட்டது. தன்னை யிப்படி அவன் மோசம் பண்ணி விட்டான் என்று காந்தி கொஞ்சம் வருத்த மடைந்தவளாகவே யிருந்தாள். பூந்தி பணிவிடையும் அவள் புருஷன் புன்னகையும் காந்தியின் கோபத்தைச் சிறிது மாற்றிற்றென்றாலும் அது முற்றிலும் மாறுபடவில்லை. இப்படி நீ மோசம்பண்ணுவாய் என்று நான் ஒரு நாளும் எண்ணவே யில்லை என்று காந்தி ஒரு நாள் பூந்தியும் அவள் புருஷனும் மட்டும் தனதருகாமையிலிருந்தபொழுது சொன்னாள்.

கையாந்தகரை—இதுதான் பெண்கள் பைத்தியக்காரிகள் என்பது. பூந்திக்கு நீ என்ன உறவு! தமக்கையல்லவா! உன்னை மோசமே பண்ணினேன், என்றிருக்கட்டும். அந்த சொத்தை நான் தெருவில் வாரிவிடவில்லையே. நானும் பூந்தியுந்தானே சாப்பிட்டோம். உன் வயிறு வேறு, அவள் வயிறு வேறா. நான் ஏழை என்று தானே இவ்வளவு சந்தேகம் உனக்கு வந்தது என்றான். ஏழைதானே என்றும் நீ என்னை சந்தேகித்தாயே என்றும் அவன் சொன்னதும் காந்தி மனம் இளகிற்று. போனால் போகட்டும். நமது தங்கைதானே சாப்பிட்டாள். நமக்கு இவ்வளவு பணிவிடை யார் பண்ணப்போகிறார்கள் என்ற சந்தேகமும் அவள் மனதில் சொற்பம் உதித்துவிட்டது. முகக்குறியாலவள் நம்மிடம் சிறிது நம்பிக்கை வைத்தவளாகக் காணப்படுகின்றாள் என்று கையாந்தகரை கண்டு கொண்டான். இரும்பைச் சூட்டின் பதத்திலேயே அடித்து நீட்டவேண்டும் என்றபடி மறுபடியும் பின் வருமாறு சொல்லலுற்றான்:—

"காந்தி! பஞ்சு உடையான் பணத்தைக் கொடுக்காமலிருந்தது நமக்கு லாபம் என்று நீ நினை. அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு போய் நீ புன்னையில் செலவிட்டிருந்தால் அது மறுபடி உனக்குக் கிடைக்க எத்தனை நாள் செல்லும். யோசித்துப் பார்.

நல்லது இந்த 100-ரூபா போய்ச் சேராமல் எந்த சங்கதி குறைவா யிற்று. கலியாணம் நின்றுபோகவில்லையே. உத்தியோகத்திலிருக் கப்பட்டவனுக்கு பணத்துக்கு என்ன குறைவு. அவன் கையில் ஒரு காசு இல்லாவிட்டாலும் அவனுடைய சினேகிதர்களான மற்ற உத்தியோகஸ்தர்கள் 1000,500 அரை நிமிஷத்தில் கொண்டுவந்து கொட்டுவார்கள். உத்தியோகஸ்தர்களுக்கு பணத்தின் கஷ்டமே கிடையாது. மாதம் 30-நாள் கழிந்ததும் முதல் தேதி சுளைசுளை யாய் அவர்கள் ரூபாவை எண்ணுகின்றார்கள். குடித்தனக்கார னுக்குப் பணமேது. வட்டிப் பணம் சம்பாதிப்பதில் நமக்கு எவ் வளவு கஷ்டமோ அவ்வளவு கஷ்டம் உத்தியோகத்திலில்லையே. ஆகையாற்றான் வட்டிப்பணத்தைச் செலவிட நாம் பின்வாங்குவது போல உத்தியோகத்தி லிருக்கப்பட்டவர் தங்கள் சம்பாத்தியத் தைச் செலவிடக் கூசுகின்றதில்லை. நமக்கு வேண்டியதெல்லாம் நமது குழந்தை க்ஷேமமாக இருக்க வேண்டும் என்பது. அப் படியே கலியாணம் நிறைவேறினதாகக் கடிதம் வந்துவிட்டது. இதனுடன் முடிந்ததா. இன்னும் ஆறும் மாதமிருக்கின்றது. தீபாவளிச்சீர் சங்கராந்திச்சீர் இவைகளெல்லா மிருக்கின்றன. அவைகளி லொன்றுக்கு உன் பணமாக 100-ரூபா நீ கொண்டு போக லாம். இப்பொழுது குடித்தனக்காரன் பணத்துக்கு வருந்தும் காலம். அப்பொழுதோ கார் அறுப்பாயிருக்கும். காசு கையில் நிரம்ப விருக்கும். நீ என்னைப்பற்றி வித்தியாஸமாக எண்ணாதே. நானிப்பொழுது சொல்லுவதில் பிரயோசனமில்லை. நான் போகப் போகத் தெரியும்'' என்றான்.

புத்தியீனர்கள் மனம் இழுத்தபடி யெல்லாம் திருப்பும். காந்தியும் இவ்வண்ணம் கையாந்தகரை சொன்னது சரியாகவிருக் கின்றதென்று எண்ணலானாள். பூந்தி தனது சிசுரூஷையைப் பதின்மடங்கு அதிகமாகப் பண்ணலானாள்! புன்னைக்குத திரும்பிப் போகவேண்டும் என்று காந்தி தெரிவிக்கவே கையாந்தகரை "நல் லது நீ போகவேண்டியது அவசியந்தான். எத்தனை நாளிங்கிருந் தாலும் எங்களுக்கு ஒரு பெரிய உபகாரந்தான். ஆனால் சங்குவும் மாந்தியு மவ்விட மிருக்கின்றார்கள். நீ அவர்களுடைய நிமித்த மவ்

விட மிருக்கவேண்டும். சீக்கிரம் போகவேண்டியதுதான். ஏதோ வெகு கஷ்டப்பட்டு உனக்கு 20-ரூபா மாதம் மாதம் தீனதயாளு கொடுப்பதாக நீ எண்ணுதே. அவன் உனக்குக் கொடுக்கும் பணம் ஏதோ உபகாரத்துக்கு என்று நீ நம்பாதே. அவன் வெகு வஞ்சகன். அப்பொழுது மகாதேவர் பட்ட கடனுக்கு நீ மட்டும் கையெழுத்துப் போடாவிட்டால் அவன் நமது நிலங்களில் ஒரு குழியையாவது விற்று அக்கடனை தீர்த்திருப்பானு. அக்கடன் மட்டும் தீராமலிருந்தால் அவனிதற்குள் ஜெயிலிலிருக்கவேண்டும். நீ பைத்தியக்காரி யாகையால் அக்காலத்தில் அவன் கோறினபடி கையெழுத்துப் போட்டு மாட்டிக்கொண்டாய்; ஒரு நிமிஷத்தில் எல்லா நிலங்களையும் ஒன்றுக்குப் பாதியாக விற்று கடனை அடைத்து விட்டு அவன் பகாசுரகிரி சென்றான். அவன் விற்ற நிலங்கள் இப்பொழுது என்ன விலை, உனக்குத் தெரியுமா! என் வயிறும் குடலும் மண்டுகின்றன. படுகையோரம் நமக்கு நேத்திரமாக ஒரு நாற்றங்கால் மகாதேவர் சமயம் பார்த்து 300-ருபாவுக்கு வாங்கியிருந்தார். தீனதயாளு அதை 400-ருபாவுக்கு விற்றான். அதின் விலை இப்பொழுது 4,000. இவ்வண்ணம் சங்கு மைனர் என்று அவனை மோசம் பண்ணி அவனுக்கு கார்டியனுகிய உன்னை வஞ்சித்துக் கையெழுத்து வாங்கி இக்குடித்தனத்தை தீனதயாளு பாழாக்கிவிட்டான். அப்பொழுது நான் சமீபத்திலில்லை. உனக்கு புத்தி சொல்லுகின்றவர்கள் ஒருவரும் இல்லாமல் போனுர்கள். நீ முழுகிப்போனுய். மகாதேவர் பலநாள் சேர்த்த சொத்து ஒரு நாழிகையில் போய்விட்டது, இல்லாவிடில் தீனதயாளு உத்தியோகம் பறந்துபோயிருக்கும். இன்னும் நான் சொல்லுவதைக் கேள். தீனதயாளு புன்னையில் 50-ரூபா சம்பாதித்து அதில் 20-ரூபா உனக்குக் கொடுத்துவிட்டு 30-ரூபாவில் குடித்தனம் பண்ணி 10, 12-பெயர்களைக் காப்பாற்றுகின்றான் என்று நீ நினைக்கிருயா என்ன? அரிசி மூட்டைக்குமட்டும் காணுமா அவன் 30 ரூபா! காணுதே! இன்னுமவனுக்கு பலவிதமாக எவ்வளவோ வருமானம் வருகின்றது. அவைகளெல்லாம் உனக்கு என்ன தெரியும்! புன்னை பாங்கியில் அவன் 10,000 ரூபா வட்டிக்குப் போட்டிருக்கிறுன். அது எனக்கல்லவோ தெரியும், எனக்கும் புன்னை

யில் சிநேகிதர்களிருக்கின்றார்கள். அவர்கள் மூலமாய் நான் எல்லாம் விசாரித்திருக்கின்றேன், என்றான்.

காந்தி இதைக் கேட்டதும் ஒரு பெருமூச்சுவிட்டு "அடா! நான் ஒரு பெரும் பைத்தியக்காரக் கைம்பெண்! மோசம்போனேனே. நீ சொல்லுவது அவ்வளவும் உண்மை என்று இப்பொழுதுதான் விளங்குகின்றது. தீனதயாளு வெகு செலவாளி, எல்லாக் குழந்தைகளுக்கும் வேண்டியவைகளில் ஒருவித குறைவில்லாமல் செய்து வருகின்றான். ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு சிறு மெத்தை, ஒரு சிறு பெட்டி, தினந்தோறும் கச்சேரியிலிருந்து வரும்பொழுது ¼-ருபாவுக்குக் குறையாமல் கனிகள் வாங்கி வருவான். இவ்வளவு செலவு என்னமாய் நடக்கின்றதென்று நானுந்தான் ஆச்சரியப்படுவேன். நீ சொல்லுகின்றபடி யில்லாவிடில் இவ்வளவு செலவுகளுக்கு அவனுக்கு பணமேது. பாங்கியில் பணம் வைத்திருக்கின்றான் என்பதற்கு ஐயமேயில்லை. நல்லது இருக்கட்டும், இனி தெரிந்தது, நான் விழித்துக்கொண்டேன்" என்றாள்.

கையாந்தகரை இச்சூட்டிலேயே அவள் புன்னை போய்ச் சேரவேண்டும் என்று கருதி, சாண்பட்டுக்கரைபோட்ட கலியாணகூடம் ரவிக்கைத் துண்டு ஒன்று மாந்திக்கும், 100-ம் நம்பர் நூலில் சாயம் போட்ட இரண்டு மதுரைச் சாயவேஷ்டி சங்குவுக்கும் அவளிடம் எடுத்துக்கொடுத்து குழந்தைகளைச் சாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள் என்று உபதேசம் பண்ணி அவளை ஊருக்கனுப்பினான்.

ஐயோ ! இவ்வுலகமிப்படி யிருக்கின்றதே. இவ்வுலகத்தின் உண்மையை அறிந்தவர்கள் யார். பேச்சாலும் பாசாங்காலும் எத்தனை பெயர்கள் ஜீவிக்கின்றார்கள். உடுப்பாலும் சிபார்சாலும் எத்தனை பெயர்கள் உத்தியோகம் பண்ணுகிறார்கள். ஒரு பாவமும் அறியாத யோக்கியனான தீனதயாளு உத்தியோக முறையிலும் தனது குடும்பத்திலு மிவ்வளவு அவஸ்தைப்படவேண்டுமா! தெய்வத்திற்கு கண்ணில்லையா! இல்லை என்று ஒருபொழுதும் சொல்லக்கூடாது. எப்பொழுது ஈசன் தீனதயாளுவினுடைய கஷ்டங்களை நீக்குவாரோ தெரியாது.

# 12. குடும்ப விபாகம்

*பல நாளும் பக்கத்தா ராயினும் நெஞ்சிற்*
*சில நாளும் ஒட்டாரோ டொட்டார்.*

நாம் முன்னமே தீனதயாளு தனது தங்கை மாந்தியின் விவாகத்தைச் செய்து முடித்தானென்று சொன்னோமே. அவ்விடத்தி லதை அவ்வளவு சுருக்கமாகச் சொன்னோம். அதில் அவன் பட்ட அவஸ்தை ஈசனுக்குத்தான் தெரியும். 40-காணி ஆஸ்தியுள்ள ஒரு மிராசுதாருடைய ஒரே மகன் சபாபதிசர்மா வென்பவன் புன்னைக்குப் பெரிய பரீக்ஷைக்குப் படிக்கவந்தான். அவன் குலங்கோத்திரங்களை விசாரித்து மாந்திக்குச் சரியான புருஷன் அவனென்று தீனதயாளு தீர்மானித்து தன்னுடன் சம்பந்தம் பண்ண மனமிருக்குமா வென்று அவனுடைய பெற்றோர்களுக்குக் கடிதம் எழுதினான். அவர்களும் தீனதயாளுவின் குலங்கோத்திரங்களை அறிந்தவர்களாகையால் அவன் கருத்துக் கிசைந்ததுமன்றி சொற்ப நாள் கழித்து நடத்தினால் பலவித அசந்தர்ப்பமாகையால் கூடிய சீக்கிரத்தில் செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். அவ்விதம் சீக்கிரம் நடத்துவதிலேயே தீனதயாளுவுக்கும் எண்ணம். ஆனால் நடத்துவது எப்படி. என்ன குறைத்துச் செய்தாலும் விவாகம் என்றால் 700 800,-ரூபாவுக்குக் குறைவில்லாமல் வேண்டுமல்லவா. அவ்வளவு பணத்துக்கு தீனதயாளு எங்கே போவான். அவனுக்கு சமீப பந்துக்களான சிறிய தகப்பனார்கள், மாமன், மைத்துனன், முதலியவர்கள் வெகு பணக்காரர்களாக இருந்தார்கள். அன்றியுமவர்கள் மகாதேவர் உயிருடனிருந்த காலத்தில் அவர் கேட்ட தொகை ஒரு நாழிகைக்குள் பையை யாகக் கொண்டுவந்து அவிழ்த்தவர்கள். தீனதயாளு அவர்களில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே கடிதம் எழுதி எப்படியாவது அந்தச் சமயம் உபகாரம் பண்ணி தன்னை ஆளாக்கிவிட வேண்டும்,

அச்சமயத்தில் தனக்கு கொடுக்கப்படும் பொருளை எப்படியாவது தான் இரண்டொரு வருஷங்களுக்குள் தீர்த்து விடுவதாகக் கெஞ்சிக்கொள்ளும் வண்ணம் எழுதினன். ஒருவனுவது, பதிலெழுதவில்லை. சிலர் 15 நாளைக்கு முன் கேட்டிருந்தால் அகத்தியம் 700 அல்ல 1000-கொடுத்திருப்போம் என்றும், அப்பொழுது கேட்பாரில்லாமல் பணம் கட்டிக்கிடந்ததென்றும், வாய்தாப் பணம் வசூல் ஆரம்பிக்கவே எல்லாப் பணமும் கரைந்து விட்டதென்றும், எழுதினார்கள். இக்காரணங்கள் அவ்வளவும் பொய். தீனதயாளுமட்டும் ஒரு ஒட்டை வீட்டையாவது இரண்டு பொட்டல்காணி நிலத்தையாவது ஈடுவைக்கிறேன் என்று எழுதி யிருப்பானுகில், நான், நீ, என்று ஒவ்வொருவனும் வேண்டிய பணம் கொடுத்திருப்பான். இனிப் பணங்கொடுக்கும் விஷயத்தில் மிராசுதார்களைப் போல் பெரும் கணக்காளிகள் கிடையாது. என்ன பந்துவானுலும் நிலம் அல்லது வீடு ஒத்தியின்றி ஒரு காசுகூட வட்டிக்கிடார்கள். சமயம் என்று என்ன தான் கதறினுலும் பணமில்லையென்று ஒரே பொய் சொல்லிவிடுவார்கள். அவ்வண்ணம் பொய் சொல்லுவதால் பாபமில்லை என்பது அவர்கள் பணம் என்ற குரு அவர்களுக்குபதேசித்த மூலமந்திரம்.

என்ன செய்வான் தீனதயாளு! அவன் அருமையாகப் பலநாள் சேகரித்து வைத்திருந்த கோசங்களையும் புஸ்தகங்களையும் பஞ்சத்துக்குப் பிள்ளை விற்பதுபோல் விற்று 400-ரூபா செலவுக்கு ஏற்படுத்திக் கொண்டான். பின்னையில் தான் பழகின இரண்டொரு தனவான்களின் காலில் விழுந்து தனக்குச் சொற்பம் பொருளுதவி செய்யவேண்டும் என்று வேண்டிக்கொண்டான். அவன் ஒரு பொழுதும் கேட்காதவனுகையால் அத்தனவான்களாகிய நண்பர்கள் அவன் கேட்ட தொகையை ஒரு சீட்டுகூட வாங்கிக்கொள்ளாமல் கொடுத்தார்கள். இதுதான் நகரத்திலுள்ள நண்பர்களுக்கும் நாட்டுப்புறத்திலுள்ள பந்துக்களுக்கும் வித்தியாஸம். இவ்வாறு தான் சேகரித்த பொருளைக்கொண்டு மாந்தியின் விவாக முகூர்த்தத்தைத் தீனதயாளு சிறப்பித்துத் தான் தனது தந்தைக்குப் பட்டிருந்த கடனை தீர்த்துக்கொண்டதாகக் களிப்படைந்தான்.

இவ்வளவெல்லாம் செய்துமுடித்து கையில் காசுகூட மிற்காம லனிருந்த பொழுதுதான் காந்தி கலியாணகூடம் ரவிக்கையுடன் சணற்காலிலிருந்து திரும்பிவந்தனள். கையாந்தகரை அவளுக்குச் செய்திருந்த உபதேசத்தால் அவள் தீனதயாளுவிடம் வெகு கோப மாக வந்தாள், அவள் மனம் வேறுபட்டிருப்பதை யறியாத தீனம் அவளை வெகு சந்தோஷமாக உபசரித்து மாந்தியின் முகூர்த்தம் நடந்ததைச் சொன்னன். ஏதோ களிப்பதுபோல் காந்தி களித் தாள். சங்குவின் விவாகம் எப்பொழுது; அவனுக்கும் காலத்தில் நடத்திவிட வேண்டாமா, என்று வேண்டிக் கொள்ளுவதுபோல் கேட்டாள். அதற்கு தீனம் பிள்ளையின் விவாகத்தைப் பற்றிக் கவலைப்படுவது வெகு பிசகு. இப்பொழுதோ எங்கு பார்க்கினும் பெண்கள் அதிகம். பெண்ணை வளர்த்து வைத்துக்கொண்டிருப் பவன் நம்மை நாடி ஓடிவருவான். அன்றியும் சங்குவுக்கு வயது 20 ஆகப்போகிறதென்றலும் இன்னும் ஸ்திரமாக ஒரு வேலையிலமரா வில்லை. ஏதாவது மாதம் 10-ரூபாவாவது அவன் தலையெடுத்துச் சம்பாதிக்க ஆரம்பித்தாலப்பொழுது அவன் விவாகத்தை முடிக்க லாம் என்று எண்ணியிருக்கிறேன், என்றன். அதற்குக் காந்தி அப்படித்தான் உன் விவாகம் நடந்ததோ என்று கேட்க,

தீனதயாளு—இல்லை. ஆனலக்காலம் வேருக விருந்தது, இக்காலமிப்பொழுது வேறு. நல்லது நமக்குப் பணமிருந்தால் ஏதோ இருக்கின்றதை வைத்துக்கொண்டு பிழைத்துப்போகிருன், என்று ஒரு கால்கட்டு கட்டி விடலாம். அதுவுமில்லையே. நல்லது எனக்காவது அதிகசம்பளம் ஆனல் எப்படியாவது இக்குடும்பம் முன்னுக்கு வந்துவிடும் என்று பார்த்தால் அதற்கும் ஒருவிதஹேஷ்யங்களுமில்லை. நமது காலம் இப்படியே போகுமா, எப்பொழுதாவது விடியாதா, இன்னும் இரண்டொரு வருஷத்திற்குள் நல்ல தசைவந்தால் சங்குவின் விவாகத்தைச் சிறப்பாக நடத்துவோம், அப்பொழுது நல்லவிடத்துப் பெண்களும் நமக்கு நாம் தேடாமலே கிடைக்கலாம். இப்பொழுதுதான் மாந்தியின் விவாகத்தைச் சிறப் பித்தேன். அதில் நான் பட்ட கடனைத் தீர்க்க இன்னுமிரண்டு வருஷகாலஞ் செல்லும். எங்கிருந்து கொடுப்பேனே எப்படி

அடைப்பேனே ஈசனுக்குத்தான் தெரியும்! எப்படியாவது இன்னும் இரண்டு வருஷம் பொருத்துக்கொள்ளுங்கள் என்றான்.

அதற்குக் காந்தி வெகு விசனப்படுபவள் போல் காட்டிக்கொண்டு அவன் தந்தைமட்டு முயிருடனிருந்தால் அவ்வளவு வயதாய் அவனை விவாகமின்றி நிறுத்தி வைத்திருப்பாரா வென்று கேட்டாள். இப்படி அவள் கேட்டது தீனதயாளுவின் மனத்தை வருத்திற்று. வெகு கம்பீர குணமுள்ளவனானதையால் அப்படிக் காந்தி கேட்டதை அவன் குற்றமாக எண்ணாமல் "ஐயோ! நமது தேசத்துப் பெண்களின் இயல்பு இப்படியிருந்தால் எக்காலம் நமது தேசத்துக்கு க்ஷேமம் உண்டாகப் போகிறது, ஒருவனிவ்வுலகத்தில் ஜனித்து விட்டால் அவனுக்குப் பொருளிருக்கின்றதோ இல்லையோ, விவாகம் அவனுடைய 20-வது வயதுக்குள் நடந்தேறவேண்டுமென்று நமது நாட்டுப் பெண்கள் எண்ணிவிடுவார்கள். விவாகமாய் இரண்டு மூன்று வருஷங்களுக்குள் அவனுக்கு குழந்தைகளும் உண்டாய்விட்டால் அவன் எவ்வாறு ஜீவனம் பண்ணப்போகின்றான் என்ற கவலை அவர்களுக்கு ஏன் உண்டாகாமல் போகிறது. ஏதோ பணக்காரர்கள் தங்கள் பொருளின் நம்பிக்கையால் அவ்வாறு இறங்குவதில் அதிகப் பிசகில்லை என்று சொன்னாலும் ஒருகால் சொல்லலாம். ஏழைகளும் அப்படியே எண்ணினால் அப்புறம் குடும்பம் கடைத்தேறும் வழி எப்படி" என்று இவ்வண்ணமாக யோசித்தான். தனது சிறுதாயைப்பற்றிக் கெடுதலாக எண்ணவேயில்லை. அன்றைப்பொழுது அப்படிப்போயிற்று. காந்தியும் தான் வந்தவுடனே சண்டையிடக் கூடாதென்று வெகு வருத்தத்துடன் தனது கோபத்தை ஒருவாறு அடக்கியிருந்தாள்.

அவள் ஊர்போய் திரும்பிவந்ததற்குள் தீனதயாளு ஒரு மாதச் சம்பளம் வாங்கியிருந்தான். அதில் தனக்குக் கிடைக்கவேண்டிய ரூபா வேண்டுமென்று காந்தி கேட்கவே தீனதயாளு வெகு மரியாதையாக "அம்மா, நான் முன்போல் பணங்கொடுக்க முடியாதுபோலும் தோற்றுகின்றது. மாந்தியின் விவாகம் முடித்து வைத்ததில் ரூபா 800-வரையில் கடன் பட்டிருக்கின்றேன். மாதம் 20-ரூபாவாகக் கொடுத்தால் வட்டி என்பதில்லாமல் இக்கடனைத் தீர்க்க

எனக்கு 40-மாதகாலம் செல்லும்; இக்கடனுக்கும் கொடுத்து உங்களுக்கும் நான் கொடுப்பதாக விருந்தால் அதன்பின்பு வீட்டுச் செலவுக்கு ஒன்றும் மிகுந்து நிற்கவில்லையே. என் ஸ்திதியை நீங்களே யோசித்துப் பாருங்கள். நானிதுவரையில் 2-வருஷகாலமாகக் கொடுத்ததைத் தாங்கள் என்ன செய்தீர்கள்; அந்தத் தொகை 500 ரூபாவரையில் மிகுந்து இருக்கவேண்டுமே, அதல்லாமல் இரண்டு வருஷ காலமாக நாம் இவ்விடம் ஏககுடும்பமாக விருக்கின்றபடியால் ஸ்வாமி போக வரும்படி அப்படியே முதலாக விருக்கவேண்டுமே. அதில் குறைந்தபக்ஷம் 300-ரூபா யிருக்கலாம். அதின் கணக்கென்ன? அவ்விரண்டு தொகையும் நமது சுவாதீனத்தி லிப்பொழுதிருந்தால் ஒருவன் தயவையும் எதிர்பார்க்காமல் அப்பணத்தைக் கொண்டு இக்கடனைத் தீர்த்துவிட்டு நாம் ஸ்வேச்சையாக விருக்கலாமே" என்றான்.

அவன் சொன்னதில் ஒருவித வித்தியாஸமு மில்லை. தான் வேறு காந்தி வேறு என்ற எண்ணமே இல்லாமல் ஏக குடும்பமாகையால் ஊர் வருமானமென்ன. நீங்கள் சேர்த்துவைத்த முதலென்ன, அவ்விரு பொருள்களையும் கணக்கிட்டால் நமது கடனுக்குச் சரியாகின்றபடியால் அதைக் கொடுத்து விடலாமே என்று தீனதயாளு தனது சிறு தாயைக் கேட்டானேயல்லாமல் வேறல்ல. அவன் கெட்டுத் தான் வாழவேண்டுமென்று கெட்ட எண்ணங்கொண்டிருந்த காந்தி மனத்தில் அவ்வண்ணம் படவேயில்லை. அவள் மூன்றுநாள் இரையெடாமலிருக்குஞ் சருப்பம் சீறுவதுபோலச் சீறி "அடா! தீனதயாளு, நீ இவ்வளவு மோசக்காரன் என்று நானிதுவரையில் எண்ணவேயில்லை! அன்றையத்தினம் நான் எப்பொழுது கையெழுத்துப் போட்டேனோ அப்பொழுதே மோசம் போனேன்! ஒன்றும் தெரியாத கைம்பெண்ணை, உன்னை நான் கைவிடாமல் காப்பாற்றுகின்றேன் என்று ஆசை வார்த்தை சொல்லிவிட்டு நீ என்னை இவ்வண்ணம் நடுத்தெருவில் விடுவாயென்று நான் எண்ணவேயில்லை. உன் செலவு ஆயிரமிருக்கலாம். எனக்கென்ன. எனக்கு நீ வழக்கம்போல் கொடுக்க வேண்டிய ரூபாயைக் கொடுத்து விடவேண்டாமா? உனக்குச் சம்பளம் 20-ரூபா குறைச்சல் என்று நீ நினைத்துக்கொள்ள வேண்டாமா? நல்லது உன் சொந்தத் தாய்

கேட்டிருந்தால் நீ மாட்டேன் என்பாயா? மாந்திக்குக் கலியாணம் உன்னே யார் பண்ணச் சொன்னுள்? என் குழந்தையின் அழகைக் கண்டு எவனுவது ஒருவன் 1000, 2000 கொடுத்துக் கலியாணம் செய்துகொண்டு போகாஞ? என் பணம் ரூபா 20 எனக்கு வந்தா லொழிய நான் ஜலங்கூட பானம் பண்ணேன்" என்ருள்.

தீனதயாளுவோ வெகு மானி. தன்னேப் பார்த்துத் தனது சிறு தாயார் மனமிரங்க வேண்டியிருக்க, தான் மாந்திக்கு நல்லவிடத்தில் விவாகம் பண்ணிவைத்ததைப் பற்றி மெச்சவேண்டி யிருக்க, காந்தி யிவ்வாறு தன்னேக் கடிந்து பேசினதைப் பற்றியும் தனக்குச் செல்லவேண்டிய ரூபா 20 கிடைத்தாலொழிய ஜலபானம் பண்ணு கின்றதில்லே என்று வீம்பாடுவதைப்பற்றியும் தீனதயாளு வெகு விசனமடைந்தான். ஈசா! சாதுக்கள் மனத்தை தாமரை இலேயில் விழுந்த நீர்த்துளியை ஆட்டிவைப்பதுபோல் நீ ஆட்டிவைப்பது நியாயமா என்று பதைத்தான். "அம்மா, நானே சொந்தத்தாயின் பாக்கியத்தின் பெருமையற்ற அனுதை. தாயின் இயல்பென்று சொல்லப்படும் குணத்தைப் புஸ்தகங்களில் சொல்லி யிருப்பதை படித்ததாலும், எனது நண்பர்கள் வீட்டில் அவர்கள் தாயார்கள் அவர்களுக்கு நடந்துகொள்ளும் நீதிகளாலும் அறிந்தவன். எனது தாய் கேட்டால் நான் கொடுக்காமலிருப்பேனு என்றீர்களே. நான் தங்களே என் தாயைவிட வேருக ஒரு நிமிஷமாவது பாவித்தவனே யல்லன். தாங்கள் என்னே இன்றையத்தினம் கடிந்து பேசினது போல் என் தாயாக விருந்தால் தாங்கள் ஒரு பொழுதும் பேசி யிருக்கவே மாட்டீர்கள். நானறிந்த மட்டில் மாந்திக்கு இப் பொழுது கிடைத்த புருஷன்போல் என்னதான் நாம் சிரமப்பட்டா லும் கிடைக்காது.

"கடனுக்கு ரூபா 20, தங்களுக்கு ரூபா 20, ஆக ரூபா 40-நான் மாதம் மாதம் கொடுத்துவிட்டால் அப்புறம் 10-ரூபாயில் 12 பெயர் கள் இவ்வூரில் எவ்விதமாகப் பிழைக்கமுடியும்?. நான் சம்பளம் வாங்கித் தங்கள் கையில் அப்படியே கொண்டுவந்து கொடுக் கிறேன். உங்கள் கையாலேயே நீங்கள் செலவிட்டு மிகுந்ததை எடுத்துக்கொள்ளுங்கள்!" என்ருன்.

சணற்கால் ஸ்வாமிபோகத்தை மறுபடி எடுத்துப் பேசினால் காந்தி ஒருகால் இன்னுமதிகமாகக் கோபிப்பாள் என்று அப்பேச்சை விட்டுவிட்டான். காந்தியோ கையாந்தகரையின் உபதேசம் பெற்று வந்தவள். தீனதயாளு என்ன நயந்து சொல்லியும் அவள் காதுகளில் ஒன்றுமேறவேயில்லை. வழக்கம்போல் தனக்குக் கிடைக்க வேண்டிய 20-ரூபா கிடைத்தே தீரவேண்டுமென்று பிடிவாதம் பிடித்தாள். சிறிது இணங்குவதுபோல் அன்றையத்தினம் விட்டுக் கொடுத்தாள். மாந்திக்குக் கலியாண காலத்தில் செய்யப்பட்ட நகைகளைப் பார்த்து, இது குறைவு, அது தாழ்வு, என்று குற்றங் கண்டுபிடிக்கலானாள். எல்லா விஷயத்திலும் தீனதயாளு தன்னை வஞ்சிப்பதாக வெளியிட்டுச் சொல்லத் தொடங்கினாள். உள்ளுக்குள் என்ன விருந்தபோதிலும் அதுவரையில் வெளிக்கு ஏககுடும்பமாக விளங்கிய அக்குடும்பம் காந்தி சணற்கால் போய் திரும்பி வந்தது முதல் சண்டையும் சச்சரவுமாக பார்ப்பவர்கள் பரிதாபப் படும்படியாயிற்று. புன்னை பாங்கில் பணம் பதுக்கி வைத்துக்கொண்டு தீனதயாளு சங்குவை வஞ்சிப்பதாகவும் ஏற்கனவே சங்கு கார்டியனாகத் தன்னைப் பண்ணிக் கபடமாகக் கையெழுத்து வாங்கி நிலங்களை ஒன்றுக்குப் பாதியாய் தீனதயாளு விற்றதாகவும் காந்தி பல பந்துக்களிடம் சொல்ல ஆரம்பித்தாள். உத்தியோக முறைமையில் பொழுது புகுந்து 5-நாழிகை வரையில் ஏணிவாளனிடம் படாதபாடு பட்டுத் தீனதயாளு வீடுவந்தால் வீட்டிலுமவனுக்கு அவஸ்தை ஸகிக்க முடியவில்லை. சண்டை சச்சரவில்லாத இரவேயில்லை. நமது வீடு சாதாரண ஜனங்கள் வீடுபோலாயிற்றே என்று தீனதயாளு வருந்துவான். சங்கு ஒவ்வொரு நாளைக்கும் ஒரு புதுச் சட்டை ஒரு புதுவஸ்திரம் எடுத்துக்கொண்டு வந்து அது தனக்கு வேண்டும், வாங்கிக்கொடு என்பான். இப்பொழுது கையில் பணமில்லை நாளைக்குப் பார்த்துக்கொள்ளுவோம் என்றால் அவனுக்குக் கோபம் வந்துவிடும். தன் குடும்பம் மூழ்கிப் போகலாகாது என்ற நல்ல எண்ணத்தால் தான் நிலத்தை விற்றுக் கடனை யடைத்ததைக் காந்தி கைம்பெண்ணை வஞ்சித்துக் கையொப்பம் வாங்கினதாகக் கருதினாளே என்று தீனதயாளு நினைத்துநினைத்து வருந்தினான். எவ்வளவுக் கெவ்வளவு ஒற்றுமையாக விருந்து குடித்தனத்தை அழகாகக்

கொண்டுபோகவேண்டும் என்று அவன் நினைத்தானே, அவ்வள வுக் கவ்வளவு அவன் கோழை மனத்தைக் கண்டு காந்தி அவனிடம் பற்றிக்கொள்ள வேண்டியதைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்று ஏற்படுத்திக்கொண்டாள். இவ்வித பந்துத்துவம் எத்தனை நாள் நிற்கும். தீனதயாளுவின் ஜனனமே காந்தியையும் அவளுடைய குழந்தைகளையும் காப்பாற்றுவதற்கென்று அவள் நினைத்துவந்தாளே யன்றி அந்தத் தீனதயாளுவுக்குக் குஞ்சு குழந்தைகளிருப்பதைப் பற்றி அவள் சிறிதேனும் கவலையே படவில்லை. தீனதயாளு உத்தி யோக முறைமையி லிருக்கப்பட்டவனாயிற்றே, அவன் மானியே என்று மவள் சிறிதேனும் உத்தேசிக்கவேயில்லை.

இவ்வாறு இக்குடும்பம் சொற்பம் கலைந்து நிற்கும் சமயத்தில் இக்குடும்ப சச்சரவை விருத்தி பண்ணிவைக்கவே கையாந்தகரை புன்னைவந்து சேர்ந்தான். அவன் வெகு கலகக்காரன். பார்வை க்கு வெகு ஆசாரசீலனென்றும் ருத்திராக்ஷம் அணிவதில் கொஞ்ச மேனும் தப்புகிறதில்லை என்றும் நாம் முன்னமே சொல்லியிருக்கின் றோம். அவன் இரண்டு வருஷமாய்க் காந்தி அனுப்பிய பணத்தை யும் ஸ்வாமி போகத்தையும் ஜரித்துக் கொண்டவனாகையால் ஒரு கால் தனது உண்மையான குணத்தை அறிந்து கொண்டு காந்தி எங்கு அனுப்பும் தொகையை நிறுத்தி விடுகின்றாளோ என்று பய ந்துவிட்டான். தீனதயாளு ஒருகால் கணக்கு கேட்டு எங்கு தான் மோசக்காரன் என்பதை காந்திக்குக் காட்டிவிடுவானோ என்றும் சொற்பம் அஞ்சலானான். இக்காரணங்களை உத்தேசித்து தான் சமீபத்திலிருந்து காந்திக்கு உபதேசம் பண்ணினு லொழிய தனது ஜீவனம் போய்விடும் என்றபயம் அவன் மனத்தில் உதித்தது. அன் றியும் அவன் காந்தியின் நன்மையையே நாடிவந்தவன் போல் தான் சங்குவுக்கு நல்லவிடத்தில் ஒருபெண் திட்டம் செய்து வந்ததாகவும் சொன்னான். தனது மகனுக்கு நல்லவிடம் பார்த்து விவாகமுகூர்த் தம் வைத்துவந்ததாக கையாந்தகரை சொல்லவே காந்திக்கு வெகு ஆனந்தம் உண்டாயிற்று. அந்த விஷயமாய் தீனதயாளு ஒருவிதக் கவலையுமில்லாம லிருந்ததையும், கையாந்தகரை வெகுவித முயற்சி கள் செய்து பெண்தேடி வந்ததையும் நினைத்து நினைத்து தனது

தங்கை புருஷனை தனக்கு வெகு அனுகூலமான பந்து என்று தனது மனத்துள் நிச்சயித்தாள். இப்பெண் யார் என்று விசாரிக்கலாம். இச்கையாந்த கரைக்கு வாணாந்தகரை என்றொரு தம்பி அவனும் கையாந்தகரை போலவே பிழைக்க வழியற்றவன். அவனுக்கு ஒருபெண். அழகாகவே யிருக்கும். ஆனால் அவள் தாயாருக்குக் குறளியென்று பெயராகையால் பெண் ஒரு முழம் உயரந்தா னிருக்கும். இப்பெண்ணை சங்குவுக்குக் கையாந்தகரை தீர்மானித்ததின் கருத்து தனது தம்பி வாணாந்தகரையையும் தன்னுடன் சேர்த்து வைத்துக்கொள்ளும் பொருட்டு. இவ்வளவு செலவுக்கும் சனப்கால் நிலம் போதாதே. தீனதாளுவிடம் இன்னும் 5,10-அதிகமாக வாங்கிக்கொள்ள காந்தியை ஏவினால் அவள் அப்படியே செய்வாள். அவனும் கொடுப்பான் என்று அவனுக்குத் தோன்றிற்று. எப்பொழுது இந்த எண்ணங்கள் வந்தனவோ அப்பொழுதே அவன் புறப்பட்டு புன்னைவந்து சேர்ந்தான்.

தனது சிறுதாயார் காந்தியின் சமீப பந்துவென்ற காரணத்தால் தீனதயாளு அவனை வெகு அன்புடன் உபசரித்தான். அதிக ஆசாரக்காரனாகையால் அவன் புன்னைமா நகரத்திலுள்ள பெயர்களைப் பற்றியும் அவ்விடத்திய ஆசாரத்தைப் பற்றியும் தூஷித்துப் பேசலானான்.

கையாந்தகரை—என்ன! இந்த ஊரில் என்ன அக்கிரமம். பையன்கள் ஒருவரும சந்தியாவந்தனமே பண்ணுகின்றதில்லை. நம்மூர் பையன் சுப்பராயன அடுத்த தெருவில் சக்கிராச்சாரி ஓட்லில் சாப்பிடுகிறான். அவனைப் பார்க்கப்போனேன். போட்ட சட்டை கழற்றாமல் இலையில் வந்து எல்லாப் பையன்களுடனும் உட்காருகின்றான். நெற்றியில் விபூதி என்பதே கிடையாது. என்ன அக்கிரமம்! என்ன அநியாயம்!!

தீனதயாளு—பெரிய பட்டணங்களில் அப்படித்தான். அதனால் பிசகாக நீங்கள் எண்ணவேண்டாம். எல்லாரும் சிறுபையன்கள். இப்பொழுது அப்படியிருந்து விட்டுக் கடைசியாக தாங்கள் வேலைகளில் செல்லும் காலத்தில் வெகு ஆசார சீலர்களாய் விடுவார்கள்.

சையாந்தகரை—ஒவ்வொருவனுக்கும் மூலகச்சம் ஒருமுழம் பின்தொங்குகின்றதே. அல்லது குடுமி என்ன பாவம் பண்ணிற்று. பாதிப்பையன்கள் குடுமியைக் கத்தரித்து விட்டுக்கொண்டிருக்கிறார்கள். பாதிப்பையன்கள் கோராக்குடுமி வைத்திருக்கின்றார்கள்.

தீனதயாளு—ஐயா! குடுமியிலும் வேஷ்டியிலும் என்னவிருக்கின்றது. ஏதோ சிறு பையன்கள்! எவன் புத்திக்கு எது அழகென்று தோன்றுகின்றதோ அதைச் செய்து கொள்ளுகிறான். இடமாதிரி வெளிதோற்றத்தால் என்ன கெடுதி. ஏதோ இரண்டொரு வருஷம் அப்பையன்களிவ்வாறு இருந்து விட்டு அப்புறம் ஒருவித ஸ்திரியாகத்துக்கு வந்து விடுவார்கள். இது ஒரு பிரமாதமன்று.

சையாந்தகரை—என்ன ஐயா! எல்லாரும் அர்த்த க்ஷௌரமா? ஒருவனாவது கழுத்துக்குக்கீழ் பண்ணிக் கொள்ளவில்லையே.

தீனதயாளு—அதனால் என்ன பிசகு. குழந்தைகள்தானே. அவர்கள் இன்னும் சொற்பகாலம் போனால் சரியாய் நடப்பார்கள். பட்டணத்திலிருக்கும் நன்மை வெளியில் கிடையாது. இவ்விடத்தில் அடுத்த வீட்டுக்காரன் இன்னானென்று நமக்குத் தெரியாது. அவனவன், அவனவன் வேலையைப் பார்த்துக்கொண்டு போவான். ஒவ்வொருவனும் ஒரு தொழிலில் சுறுசுறுப்பாகத் தனது காலத்தைக் கழிப்பான். பிறர் வீட்டுச் சமாசாரம் பட்டணத்துக்காரனுக்குத் தெரியவே தெரியாது. கிராமத்தில் சிலர் கழுத்தில் போட்டிருப்பது கௌரீசங்கர ருத்திராக்ஷந்தான், ஆனாலவர்களில் சிலர் எத்தனை பெயர்களுடைய பணத்தை எடுத்துக்கொண்டு மோசம் பண்ணியிருக்கிறார்கள். மதகஜ கருணத்துக்கும் அவருடைய நாட்டுப் பெண்ணுக்கும் இருக்கும் உறவின் முறை எல்லாருமறிந்த விஷயம். பிரசித்தமாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். கிராமங்களில் மேல் ஆசாரம் அதிகம் வம்பில் ஊரில் பெரியமிராசுதார் தட்டுக்கூடை ஐயரிருக்கின்றார். பகல் காலத்திலேயும் அவர் அவ்வூர் பாகவதருடைய இளைய ஸம்ஸாரத்திடம் உட்கார்ந்து கொண்டிருக்கின்றார். வெகு தர்மிஷ்டர்தான். போன வருஷம்

அவர் வாஜபேயம் என்ற யாகத்தை வெகு அழகாக நடத்தினர். வந்தவர்களுக்கு 1-ரூபா பூரி தக்ஷிணை கொடுத்தார். ரூபா 10,000-செலவிட்டார். அதனால் யாகமாதாவுடைய ஸம்ஸாரத்தினிடம் அவரிருக்கும் பாவம் தொலையுமா? கிராமத்தையும் நகரத்தையும் சீர்தூக்கிப்பார்க்கின் இப்பொழுது கிராமவாஸம் கெட்டிருப்பதுபோல் பட்டணவாஸம் கெடவில்லை. ஏதோ பள்ளிக்கூடத்துப் பையன்கள் மூலைகச்சம் கட்டுகிறதாலும், அர்த்த கூஷாரம் பண்ணிக்கொள்ளுவதாலும் என்ன முழுகிப்போயிற்று என்றார்.

கையாந்தகரைக்கு பதில் பேச வழியில்லை. ஏனெனில் தீனதயாளு எடுத்த உபமானங்கள் ஒவ்வொன்றும் இல்லை யென்று சொல்லக்கூடாத உபமானங்கள். அன்றியும் அவன் சில கிராமந்தாரைப்பற்றிச் சொன்னதை "நீங்களும் கழுத்தில் ருத்திராக்ஷமணிந்திருக்கின்றீர்களே, காந்தி யனுப்பிய பொருளை மோசமின்றி அவளிடம் கொடுத்தீர்களா" என்று தீனதயாளு தன்னைக் குறித்துக்கேட்பது போல் கருதினன். இரண்டொரு நாள் சென்றன. தீனதயாளுவின் உண்மையான ஸ்திதியை கையாந்தகரை கண்டு கொண்டான். வாஸ்தவம் தனது உள்ளத்தில் விளங்கியபோதிலும் அதைக் காந்தியிடஞ் சொல்லாமல் புனை பாங்கியில் 10,000-ரூபா தீனதயாளு போட்டிருப்பதாகவே அவள் காதில் ஓதிவந்தான். அன்றியும் கையாந்தகரை மனதில் பெரும் பயம் ஒன்று தோன்றி விட்டது. தீனதயாளுவினுடைய செலவு அவன் வருமானத்துக்கு மேலாகவிருந்தது. அதை அடக்கமுடியாமல் அடிக்கடி சிறு கடன்கள் அவன் வாங்கியிருப்பதை கையாந்தகரை தெரிந்து கொண்டான். அவ்வாறு கடனை வளரவிட்டால் கடைசியாக குடும்ப சொத்தை அக்கடன் தொடும், நாம் பிழைக்கும் வழியும் போய் விடும் என்று கையாந்தகரை அஞ்சி எப்படியாவது சணற்காலில் மிகுந்திருக்கும் சொத்துடன் காந்தி தனிமையில் சங்குவுக் கென்று பாகம் பிரித்துக்கொண்டு போக வேண்டிய வழியை அவளுக்கு உபதேசிக்கலானன். தனது பிள்ளைக்குப் பெண் பார்த்து வந்த அப்பாதகன் சொன்ன பேச்சுகள் எல்லாம் அவளுக்கு வெகு பத்தியமாக அப்பொழுது விளங்கிற்று. அவன் ஏற்கனவே செய்த மோசம் அவள் மனதில் ஏறவேயில்லை.

இப்படி யிருக்கையில் ஒரு நாள் காந்தி தீனதயாளு கச்சேரிக்குப்போகாமலிருக்கப்பார்த்து அவனிடம் வந்து "நீயோ உன் குழந்தைகளிடம் விசுவாஸமாயும் உன் குழந்தைகளுக்கு உயர்ந்த நகைகள் பண்ணுவதும், சிற்றாடை, வேஷ்டி முதலியவைகள் வாங்குவதுமாக இருக்கின்றாய். ஏதோ உலகம் நிந்திக்குமே என்று மாந்திக்கு ஒரு விவாகம் பண்ணிவைத்தாய்! சங்குவுக்கு என் கலியாணம் பண்ணவில்லை என்றால் இன்னும் கொஞ்ச நாள் போகட்டும், என்று சாக்குப்போக்குச் சொல்லுகிறாய். இப்படியே நான் எத்தனை நாளிருக்கிறது. என் குழந்தைகளுக்கு இனி வழி என்ன? நீதான் கதி என்று நானிதுவரையில் நம்பியிருந்தேன். இப்பொழுது மாதம் 20-ரூபா கொடுப்பதையும் நிறுத்திவிட்டாய். நாளை உனது பெண்சாதி சோறுபோடுவதையும் நிறுத்தி விடுவாள். எப்பொழுதும் நீ மோசம் பண்ணிக்கொண்டே யிருக்கின்றாய். இனி நான் விழித்துக் கொண்டேன். இனி என்னால் உன்னிட மிருக்க முடியாது. என்ன ஏற்பாடுண்டோ அதைச் செய்து என்னை நல்வழியாய் ஒதுக்கி விட்டால் அதே பெரும் புண்ணியம்" என்றாள்.

இப்படிக் காந்தி சொன்னது தீனதயாளுவின் மனத்தை ராமபாணம் பிளப்பதுபோல் பிளந்தது. இம்மாதிரி வரப்போகிறதென்பதை அவன் எதிர்பாராதவன் என்பவனல்லன். ஏனெனில் அக்காலத்தில் அவர்கள் செய்த அக்கிரமங்கள் அக்குடும்பம் அப்படியே வெகு நாள் நடக்கும் என்று எண்ணவிடமில்லாமல் இருந்தது. தனது தந்தை தேகவியோகமாய் விட்ட நாலைந்து வருஷகாலம் எவ்வளவோ தன்னால் இயன்றமட்டும் வெகு அன்பும் ஆதரவுமாக தீனதயாளு அக்குடும்பத்தைத் தாங்கி வந்தான். அவன் என்ன செய்தாலும் செய்யவில்லை யென்ற சொல்லும் அவன் என்ன கொடுத்தாலும் கொடுக்கவில்லையென்ற சொல்லும் மேலிட்டு நின்றன. காந்தியின் குணம் அவன் குணத்துக்குச் சிறிதேனும் ஒவ்வாததாக விருந்தது. தனக்கு நன்மை நினைப்பவர்கள் இன்னாரென்ற பகுத்தறிவற்றவளாய் அவளிருந்தாள். கையாந்தகரை தான் தனக்கு வேண்டிய பந்து என்று அவள் கருதி விட்டாள். தனக்கு ஒரு நாட்டுப் பெண்ணை அமர்த்தி வந்தவனை பெரும்பாலும்

பெண்கள் அவ்வாறு தான் நினைப்பார்கள். தீனதயாளுவுக்கும் தனது வருமானத்திற்குமேல் செலவாக விருந்துகொண்டு கடன் ஆயிரத்துக்கு மேலேறினபடியால் இனி எதாவது செய்துதான் முடிக்கவேண்டுமென்ற எண்ணம் தோன்றிவிட்டது.

வியவகாரம் என்று வந்துவிடவே கையாந்தகரையைத் தீனதயாளு கணக்குக் கொடுக்கும்படி கேட்டான். அவன் ஒருவிதத்திலாவது சரியாகக் கணக்குக் கொடுக்கவில்லை. அவன் அது வரையில் பாசாங்கு செய்து வந்ததெல்லாம் பொய்யாய் முடிந்தது. அப்பொழுதாவது அவன் குணம் காந்திக்கு வெளியாகவில்லை. பெண் அமர்த்திய பெருமையொன்றே மேல் நோக்கி நின்றது. உலக வழக்கப்படி ஆளுக்கு சமபாகம் என்றும் சணற்காலிலுள்ள வீட்டிலும் நிலத்திலும் தனக்கு பாதி யென்றும் தான் தனது தந்தை போன பிறகு பட்டகடன் குடும்பக்கடனாகை விருந்த போதிலும் அதைத் தான்மட்டும் ஒப்புக் கொள்ளுவதாகவும் தீனதயாளு சொன்னான். "அப்பொழுது அநியாயமாய் என் தலையில் கற்போட்டு கையெழுத்து வாங்கினாயே! அம்மாதிரி இந்த சமயத்திலும் என்னை ஏமாற்ற முடியாது" என்று காந்தி சொல்லி, மிகுந்திருந்த வீட்டிலும் நிலத்திலும் தீனதயாளுவுக்கு ஒரு தூசு கிடைக்காது. அதுவரையில் நடந்த மோசம் நடந்து விட்டது. மிகுந்திருந்ததை அப்படியே மனோராஜியில் தனக்கு ஒப்பித்துவிட்டு தீனதயாளு ஒதுங்கவேண்டும். இல்லாவிடில் தான் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு பிராணனை விடுவேன், என்று காந்தி கீலியினாட்டமாடினாள். சங்குவும் தான் மைனர் வயது நீங்கி மேஜராய் விட்டபடியால் தனது தாயினிடம் நின்று கொண்டு அவ்வாறுதான் செய்யவேண்டுமென்று ஓங்கிச் சொன்னான். கையாந்தகரை இவ்விருகட்சிகளுக்கும் நியாயமெடுத்துப் பேசுகிறவண்ணம் தீனதயாளுவைப் பார்த்து "இவ்விருவர்கள் பேசுவது நியாயத்தை ஒத்திருக்கின்றது என்று ஒருவரும் செல்லமாட்டார்கள். ஒரு மனிதனுக்கு இரண்டுபுத்திரர்கள் என்றால் அவனுடைய ஆஸ்தி முதலியவைகளுக்கு அவ்விருவரும் பாத்தியமுள்ளவர்களாகின்றார்கள். ஒருசாண் நிலமாயிருந்தாலும் ஆளுக்கு அரைசாண் தான்வரும். ஒரு ஓட்டை வீடாயிருந்தாலும் ஆளுக்கு அரை ஓட்டை தான் உண்டு.

ஆகையாலிவர்கள் சொல்லுவது ஒரு பொழுதும் நியாயமில்லை. ஆனால் இந்த விஷயத்தில் தாங்கள் ஒரு சங்கதி யோசித்துப் பார்க்க வேண்டும். பெரியவர்களிருந்த காலத்தில் காந்தி, சங்கு, மாந்தி யிவர்களிருந்த பெருமை தங்களுக்குத் தெரியும். அப்படியே இதுவரையில் தாங்களும் ஏதோ உலகத்தார் எல்லாரும் தங்களைப் புகழும்படியாகவே நடத்தி விட்டீர்கள். தாங்களோ இப்பொழுது 4-காசு சம்பாதித்துப் புசிக்கும் பதவியிலிருக்கிறீர்கள். இவர்கள் இன்றைக்கெல்லாம் சணற்கால் நிலத்திலுண்டாகும் மாசூலைக் கொண்டு தானே ஜீவிக்க வேண்டும். சங்குவோ இக்காலத்திய பிள்ளைகளைப்போல் படிப்பால் சம்பாதிப்பவனாகக் காணப்படவில்லை. இவைகளை யெல்லாம் யோசித்து நல்ல ஏற்பாடு ஒன்றை தாங்கள் செய்தாற்றான் அழகாகவிருக்கும்" என்றான்.

தீனதயாளுவுக்கு வந்த கோபம் கணக்கில்லை. விசேஷமாக அதிகக் கோபம் வராதவர்களுக்குக் கோபம் வந்து விட்டாலதை யடக்குவது வெகு கஷ்டம். என்ன பண்ணுவான்! கையந்தகரை நியாயமானவன் என்று பெயரும் புகழும் பெற்றிருப்பானேயானாலவனிடம் தீனதயாளு கோபிக்கவே மாட்டான். ஒருவித நற்குணமுமில்லாத போக்கிலி தனக்கு தர்மோபதேசம் பண்ணத் துணிந்ததானது தீனதயாளுவுக்குப் பொறுக்கவில்லை. "ஐயா, கையாந்தகரை, உமக்கும் நமக்கும் ஒருவித பாத்தியமுமில்லை. நீர் நியாயங்களைக் கற்றறிந்தவருமல்லர். கற்று அறியாமலே சில நியாயப்படி நடக்கலாம். நீர் கொடுத்த கணக்கால் நியாயப்படி நடக்கப்பட்டவருமல்லர் என்றும் ஏற்பட்டிருக்கின்றது. நீர் உமது வாயை மூடலாம். உம்மை நான் புத்தி கேட்டால் அப்பொழுது சொல்லலாம்" என்றான். அவன் முகத்திலப்பொழுது இருந்த கோபக்குறியும் அவன் பார்த்த நோக்கமும் அவன் மனத்தில் சொல்லவேண்டுமென்று இருந்த பல சங்கதிகளை அவன் வெளிவிட்டுச் சொல்லாமல் மறைத்துக் கொண்டான் என்பதை வெளியிட்டன.

என் தங்கைப்புருஷனிவர் என்று தெரிந்தும் உமக்கும் நமக்கும் என்ன பாத்தியம் என்று தீனதயாளு கேட்டானே! இப்படித்

தான் எல்லாரையும் விலக்குகின்றான்! என்று காந்தி குறைந்து கொண்டாளே யல்லாமல் கையாந்தகரை தன்னைச் செய்த மோசத்தை அவள் அறிந்து கொள்ளவில்லை. அவர்களுடைய நோக்கத்தைத் தீனதயாளு அறிந்துகொண்டான். இனிதான் பல வார்த்தைகள் பேசி மனமிழப்பதால் ஆகும் பயன் ஒன்றுமில்லை என்பதும் அவனுக்கு நன்றாகத் தோன்றிற்று. அவன் பைத்தியக்காரன் என்று அவனுடைய சிறிய தாயார் எண்ணி யிருந்த போதிலும், அக்காரணத்தைக் கொண்டே மாதம் மாதம் அவனிடம் பொருள் கைப்பற்றி யிருந்த போதிலும், அவன் பைத்தியக்காரனல்லன். வெகு கம்பீர குணமுள்ளவன். தனது சிறிய தாயாருக்கு தான் கொடுக்கப் பாத்தியப்பட்டவன். அவளப் பொருளை தனது கையில் வைத்துக் கொண்டு தனது குழந்தைகளுக்கு உபயோகிப்பாள் என்று எண்ணங்கொண்டு கொடுத்தவனே யல்லாது வேறல்ல. பாகவிஷயத்தில் அவனது தாற்பரிய மெல்லாம் தனது தந்தை அவ்வளவு சிரமப்பட்டுக் கட்டிய வீட்டில் தனக்கொரு பாகம் கிடைத்தால் அதை அவர் நினைப்பாக வைத்துக் கொள்ளலாம், என்று கருதினான். காந்தியும் சங்குவும் பிடிவாதம் பிடிக்கவே தீனதயாளு எல்லாவற்றையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று மனோராசியாக விட்டு அந்தப்படி சீட்டுப்பண்ணிக் கொடுத்து சர்க்கார் கச்சேரியில் பதிவு செய்தும் அளித்தான். நாமும் குடும்பிகளாயிற்றே! நமக்கும் அதிகக் குழந்தைகளிருக்கின்றனவே! என்று தீனதயாளுவின் மனைவி கொஞ்சம் வருத்தப்பட்டுப் பார்த்தாள். எல்லாவற்றிற்கும் நம்மைப் படைத்த ஈசனொருவ னிருக்கின்றான். தர்மத்துக்கு ஒரு நாளும் குறைவு வராது, நமது காலம் இப்படியே யிராது, என்று அக்காலத்துக்குத் தக்கபடி ஏதோ ஒரு விதமாகத் தைரியம் சொல்லி அவளைத் தீனதயாளு சம்மதிக்கச் செய்தான்.

தன்னிடம் தனது தகப்பனாருடைய தமக்கைகளான இரண்டு மூன்று கிழங்களி ருந்தனவே; அவர்களிலிரண்டு பெயர்கள் அதிக வயது சென்றவர்களாக விருந்தார்கள். அவர்களுக்கு அந்திய காலத்தில் புன்னையில் வசிக்க அபிப்பிராயமில்லாமலிருந்தது. தேக வியோகமாகும்முன் நதிக்கரையி லிருந்து

கொண்டு ஸ்நானங்கள்செய்து ஸ்வாமி தர்சனம் பண்ணிவிட்டுப் பிராணனை விட்டால் பெரும்பலன் என்று அவர்கள் கருத்துக்கொண்டிருந்தார்கள். அதைத் தான் கெடுப்பானேன் என்று தீனதயாளு சணற்காலில் சங்குவுக்குத் தான் கொடுத்த வீட்டில் ஒரு அறைமட்டும் அக்கிழங்கள் வசிக்கக் கொடுக்கவேண்டும் என்று தனது சிறுதாயாரிடமும் தம்பியிடமும் கேட்டுக்கொண்டான். அவர்கள் தங்கள் கோரிக்கைப்படி எல்லாம் நடந்தபடியால் அதற்கு என்ன ஆக்ஷேபம் என்று வெகு சந்தோஷமாகச் சொன்னார்கள். வீட்டில் ஒரு அறையில் மட்டில் வசிக்க அவர்கள் இடங்கொடுத்தார்களேயன்றி அவ்விரு கிழங்களுடைய போஷணைக்குத் தீனதயாளு தானே பணமனுப்புவதாக ஒப்புக்கொண்டான். இவ்விதமாக இவ்விருகிழங்கள் சணற்காலில் போய் மறுபடியும் வசிப்பது தீனதயாளுவுக்கு மனமேயில்லை. ஆனாலிவர்கள் அந்தியகாலத்தில் வேண்டிக்கொண்டதைத் தடுக்கவும் அவனுக்கு மனமில்லை. எப்படியும் காந்தியின் கைக்கீழ் புசிக்காமல் அவர்கள் தனிக்குடித்தனமிருப்பார்களாகையால் ஒருவிதக் கெடுதலுமிராதென்று ஒரு சமயத்தில் எண்ணினான். ஒரு சமயத்தில் என்ன விருந்தாலும் மறுபடி அவர்கள் சணற்கால்போவது உசிதமில்லை என்று நினைத்தான், கடைசியாய் அந்தியகாலத்தில் அவர்கள் வேண்டுகோளைத் தடுக்க மனமில்லாமல் அவர்களை சணற்காலுக்கனுப்பினான். கையாந்தகரை தனது கருத்து முற்றிலும் நிறைவேறிய செருக்குடன் புன்னையை விட்டுப் புறப்பட்டான். காந்தியிடம் அவள் தனது புத்தியால் பிழைக்கவேண்டும் என்று சொல்லியும் சங்குவிடம் அவன் தனது தந்தையின் பெயருக்குக் குறைவு வாராமல் நடக்கவேண்டும் என்று உபதேசித்தும் தீனதயாளு அவர்களை ஊருக்கனுப்பினான். மாந்தி மட்டும் இதனுடன் நாங்கள் மரியாதையாக வாழுங்காலம் முடிந்ததென்று சொல்லிக்கொண்டு வண்டி ஏறினாள்.

## 13. தீனதயாளுவின் வறுமை

*நெருப்பினுட்டுஞ்சலு மாகு நிரப்பினுள்*
*யாதொன்றுங் கண்பாடரிது*

என்று நாயனார் பாடிய குறள் யாரிடம் உண்மையாக விருந்ததென்றால் தீனதயாளுவினிடந்தான். தன்னிடம் ஒரு நிமிஷமாவது ஒட்டாமல் எப்பொழுதும் குற்றமும் குறைவுமே சொல்லிக் கொண்டிருந்த காந்தியையும் சங்குவையும் தன்னைவிட்டுப் பிரித்து தனது பிதா சம்பாதித்த பொருளில் ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் அவர்களுக்கே கொடுத்து தீனதயாளு அவர்களை சணற்காலுக் கனுப்பினான். மாந்தி எக்காலத்திலும் தீனதயாளுவிடம் ஒட்டிக்கொண்டு அவன் படும் கஷ்டத்தைப் பார்த்து சிறு பெண்ணாலும் பரிதவித்தவளாகையால் அவள் தன்னைவிட்டுப் போகும்படி நேரிட்டதில் அவனுக்கு வெகு வருத்தம். காந்தி தன் பெண் தன்னுடனிருக்கவேண்டும் என்று பிடிவாதமாக அவளை அழைத்துப்போய்விட்டாள். என்னவாயிருந்த போதிலும் மாந்தி தனது புருஷனுடன் போயிருக்க வேண்டியவளாகையால் சொற்பகாலந் தான் காந்தியினிடமிருப்பாள் என்றும் அதன் பின்பு அவள் புருஷனுடனிருக்குங் காலத்தில் தானடிக்கடி அழைத்து அவளுக்குச் செய்யவேண்டியதைச் செய்யலாம் என்றும் ஒருவாறு தனது மனத்தை தீனதயாளு தேறுதலைசெய்துகொண்டான். தனது தந்தையின் ஞாபகம் தனக்கிருக்கும்படி அவர் கையாண்டபொருள் ஏதாவதொன்று தனக்கு வெகுமதி கொடுப்பதாக எண்ணிக்கொடுக்க வேண்டுமென்று தனது சிறுதாயாரை வேண்டினான். அப்படியே ஆகட்டும் என்று அவ்வம்மணி சொல்லிப்போய் ஒன்றாவது அனுப்பவேயில்லை. ஐயோ! அவர் கையாண்டபொருளைக் கண்டு தானா களிக்கவேண்டும்! அவர்கள் ஞாபகம் என்னைவிட்டு நீங்குமா! இவ்வண்ணம் பைத்தியக்காரத்தனமாகக் கேட்டோமே! என்று ஒருவேளை தீனதயாளு தன்னைத்தானே நொந்துகொள்வான். எவ்

வளவோ அன்பு மகாதேவர் தனது காலத்தில் தீனதயாளுவிடம் வைத்திருந்தார் என்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயமாக விருந்தும் அவர் பொருளில் ஒருதூசுகூட தீனதயாளுவுக்குக் காந்தியும் சங்குவும் காட்டவேயில்லை. அவனாகவே எவ்வளவோ எடுத்துக் கொண்டிருந்தால் ஏன் எடுத்துக்கொண்டாய் என்று கேட்பாரே யில்லை. ஆனாலவன் அப்படிச் செய்யப்பட்டவனல்லன். பிறந்த மேனியாய் யிருந்தான். இவ்வளவுடனிருந்தால் பாக்கியமென்றே சொல்லலாம். இது கூட இல்லாமல் கடனும் குடும்பபாரமுமல்லவோ அவனை மூடிக்கொண்டு வருத்தப்படுத்தின!

பாகமேற்படுத்திக் காந்தியை சுனற்காலுக் கனுப்பியபின் தீனதயாளுவுக்கு யிருந்தது தனது பெருங் குடும்பமும் 2000-ரூபா கடனுந்தான். இக்கடனை அடைக்க அவனுக்குத் தன்னைத்தவிர வேறு முதலேயில்லை. அவனுக்கு உத்தியோகத்திலிருந்து கிடைத்த சம்பளமோ புன்னையில் காலக்ஷேபத்துக்கே பற்றுமோ பற்றாதோ வென்றிருந்தது. என்ன செய்வான்! அவன் கொள்கையோ பெரும்பாலும் ஜனங்களுடைய கொள்கைபோலப் பணம் சம்பாதித்து மிகுத்துவைக்கவேண்டும் என்பதன்று. வயிறு பசிக்காமல் கஞ்சியோ கூழோ குடித்து குழந்தைகளுக்கு தகுந்த படிப்புப் போட்டுவைத்து அவர்களை ஆட்களாக்கிச் சம்பாதிக்க விட்டுவிடவேண்டும் என்பதாம். அதற்கு யாதொரு குறைவுமின்றி ஈசன் நமக்குச் செலவுக்குக் கொடுக்கவேண்டுமே என்று இரவும் பகலும் வருத்தப்படுவான். இவ்வுலகத்தில் 4-பெயர்கள் தனவான்களிருந்தால் 96-பெயர்கள் தினம் கூலிதேடிப் புசிப்பவர்களாயிருக்கின்றார்கள். ஆகையால் அதிக ஜனசமூகத்தில் சேர்ந்திருப்பதால் தானும் ஒரு ஏழையென்றும் ஏதோ ஈசன் அருளால் தினக் கூலிக்குச் சரியாகத் தனக்கு மாசக்கூலியாவது அவர் அளித்தாரே என்றும் சந்தோஷப்பட்டவனாக இருந்தானேயன்றி தன் மனத்துள் தனது வறுமைக்கு ஒரு நிமிஷமாவது அவன் வருத்தமே படவில்லை. ஆனால் தான் தனது உத்தியோகமுறைமையில் ஏணிவாளனிடமிருந்தபடியால் அந்தப் பிரபு தனக்கு அச் சம்பளத்துக் காவது குறைவு வைக்காமல் நடத்தவேண்டுமே! அதுவும்

குறைந்து விட்டால் என்ன செய்கின்றது என்று மட்டும் சிற்சில வேளைகளில் வருத்தமடைவான். நாமாய்ச் செய்து கொள்வதொன்றுமில்லை. எல்லாம் ஈசன் செயல். அவர் திருவுள மிருந்தால் நமக்கு ஒருவிதக் குறைவும் வராது என்று தேர்ச்சி செய்துகொள்வான். கடன் எப்படித் தீரும், அதற்கு வழி என்ன, மாதச்சம்பளம் சாப்பாட்டுக்குப் போதுமோ போதாதோ என்றி ருக்க கடன் அடைவது எவ்வாறு; அவன் பல பெயர்களிடம் கைம் மாற்ருக வட்டியின்றிப் பெருந்தொகைகள் வாங்கியிருந்தான். அவர் களிடம் அதிக காலம் நிறுத்திவைக்க அவனுக்கு மனமில்லாமல் மறுபடியும் தனது பந்துக்களாகிய சில தனிகர்களை தனக்கு ஒத் தாசை செய்யும்படி வேண்டாத வண்ணம் வேண்டிக்கேட்டான். ஒருவராவது உபகாரம் பண்ணவில்லை. அப்பொழுது தானவனுக்கு இவ்வுலகத்தின் உண்மை தெரியவந்தது. அதுவரையில் எல் லோரும் தன்னைப்போலவே பெரும் எண்ணமுள்ளவர் என்றெண்ணி யிருந்தான். அதிகமாகப் பண விஷயமாய் அவர்களிடம் பழகப் பழக எல்லாரும் பொய்சொல்லிப் பணமில்லை என்று பலவித வீண் காரணங்கள் எடுத்துரைத்து அவனை அனுப்பிவிட்டார்கள். அதே பந்துக்கள் எவனுவது ஈடுவைத்து கடன் கேட்கவந்தால் அவன் கேட்குமுன் பொருள் கொடுக்க ஆரம்பித்தார்கள். தீனதயாளு வுக்குத் தனது வறுமையின் கொடுமை அப்பொழுதுதான் விளங்கி அவன் மனத்தை வருத்திற்று. அவன் அத்தை முதலிய பந்துக் கள் அவன் யாரிடமாவது பணங்கேட்டு அவனில்லை என்றுவிட் டான் என்று திரும்பி வரும்பொழுது தமது பேதமையால் "அந்த சணற்கால் வீட்டில் பாதியிருந்தால் பணமில்லை என்று அவன் சொல்லுவானு" என்று கேட்பார்கள். அப்பந்துக்கள் சகஜமாகக் கேட்டபோதிலும் அது தீனதயாளுவின் மனத்தை வருத்தும். அதுவரையில் அவன் குடும்பத்தில் அதிகச் செலவில்லை. அதிகச் செலவெல்லாம் பாகம் ஏற்பட்டதின்மேல் நடக்கவேண்டிய செலவு களாயிருந்தன. அவனுடைய இரண்டு ஆண்குழந்தைகள் பூணூ லுக்குக் காத்திருந்தார்கள். இரண்டு பெண் குழந்தைகள் விவாகத் துக்கு என்று நின்றிருந்தார்கள். முன்னமே இவனுக்கு 2000ரூபா கடன். இனி நடக்கவேண்டிய செலவோ வருஷம் ஒன்றுக்கு ஒரு

ஆயிரமாவது கையில் மிகுந்திருந்தாற்றான் சரிவர நடக்கமுடியும். அவன் குஞ்சு குழந்தைகளோ உணவு என்பதைத் தவிர வேறு ஒருவிதச் செல்வமு மில்லாமலிருந்தன. ஆண் குழந்தைகளுக்குச் சம்பளம் சரிவரக் கொடுத்து பள்ளிக்கனுப்புவான். பெண் குழந்தைகளும் ஆண்குழந்தைகளைப் போலவே படிக்கவேண்டும், அவர்களுக்கும் ஈசன் புத்தியைக் கொடுத்திருக்கின்றார், ஆகையால் படிப்பால் அதைச் சீர்திருத்தாமல் விடுவது பாவம் என்பது அவன் கொள்கை. ஆகையால் அவர்களின் படிப்புக்காக வீட்டில் ஒரு உபாத்தியாயர் ஏற்படுத்தி அவருக்கு மாதம் 5 ரூபா சம்பளம் கொடுத்துவந்தான். தனது கஷ்டம் என்னவாயிருந்தபோதிலும் சம்பளம் வந்த முதல் நாள் சணற்காலுக்குக் கிழவிகளின் போஷணைக்காக மாதம் 7 ரூபா அனுப்பிவந்தான். அவர்களுக்கு அனுப்புவதை நிறுத்தினால் ஈசன் தனது சம்பளத்தையும் நிறுத்திவிடுவார் என்பது அவனுடைய அந்தர்கதமான அபிப்பிராயம். ஏனெனில் தான் அவர்களைக் காப்பாற்றாவிடில் தன்னை ஈசன் எப்படிக் காப்பாற்றத் துணிவார் என்பான். அவன் மானி, என்றையத்தினமாவது நமது பணத்தை அவன் கொடுப்பானேயன்றி மோசம் செய்யான் என்பதாக அவனுடைய நண்பர்கள் அவனை ஒரு வார்த்தைகூடப் பணவிஷயமாகக் கேட்காமல் விட்டுவிட்டார்கள்.

இவ்வாறவன் அவஸ்தைப்படும் பொழுதெல்லாம் அவனுடன் கூட நின்று பரிதபித்தவர்கள் தாயும் அவன் மனைவியுமாகிய பனிமொழியாளுமாம். பனிமொழியாளும் தீனதயாளுவும் குழந்தைப் பருவம் முதல் ஒரே வீட்டில் விளையாடி வளர்ந்து அதன்பிறகு இல்வாழ்க்கையில் அமர்ந்தவர்கள். இவ்விருவருடைய தாம்பத்தியம் வெகு சிறப்பானது, வறுமையொன்று நீங்கலாக அவ்விருவர் பாக்கியத்துக்கு ஒப்பான பாக்கியம் காண்பதரிது. அவ்வறுமையும் அவ்வம்மணியின் குணங்களை மேலெடுத்துக் காட்டிற்று. வறுமை என்பது மனைவியின் குணத்தை அளந்து கண்டுபிடிக்கும் ஓர் அளவுகோல் போலாம். தன் புருஷன் படும் சிரமமெல்லாம் தனது சிரமமாக எண்ணி வீட்டில் தீனதயாளு கொண்டுவந்து போடுவதைச் சந்தோஷமாகப் பெற்றுக்கொண்டு முதலில் குழந்தைகள் வயிறு

வாடாமல் அமுதளித்து மிகுந்ததை புருஷனுக்கிட்டு தனக்கு இருக்குமோ இருக்காதோ இல்லையென்று வாய்திறவாமல் அவள் காலங்கழித்து வந்தாள். அவள் காலம் அதிகமாகக் குழந்தை களைப் பெற்று அவைகளைப் பாதுகாப்பதிலேயே கழிந்துகொண்டிருந்தது. தாயுவினிடம் பனிமொழியாளுக்குத் தேவதா விசுவாஸம். தாயுவுமிவளை அருந்ததி என்று கருதி நடத்திவந்தாள். "தெய்வத்துக்குக் கண்ணில்லையா! நீயும் உன் குழந்தைகளும் இவ்வாறு வருந்தவேண்டுமா! இக்காலம் மாருதா! பாலசந்திரனுக்குக் காது கூட குத்தவில்லையே! நல்ல சிவப்பில் ஒருசோடி கடுக்கன்போட்டால் அவன் முகம் சந்திரபிம்பம்போல் விளங்குமே! எத்தனை நாள் இந்த கஷ்டமிப்படியே யிருக்கும்! நேற்றையத்தினம் உத்தியோகமானவர் களுக் கெல்லாம் 200-300 வேலை யுயர்ந்ததே! அவன் அதிர்ஷ்டமிப்படி யிருக்கவேண்டுமா!" என்று கண்ணீர் வடிப்பாள். அதற்கு பனிமொழியாள், "அம்மா வயிறு நிரம்பப் புசிக்கவேண்டும்; அரை நிரம்ப உடுக்கவேண்டும்; நகை யென்ருல் நமது யஜமானுக்குப் பிடிக்காது, நகைக்குத்தான் எங்குபோகிறது. செலவு நடந்தால் பெரும்பாக்கியம்" என்பாள்.

பாகம் நடக்கும்முன் "நாம் குடும்பிகளாயிற்றே; பாதிவீடாவது தங்கவிடம் ஒன்று நமக்கு என்று வைத்துக் கொள்ளவேண்டாமா" என்று சொற்பம் குடும்பினி என்ற அதிகாரமுறைமையில் அவள் மெதுவாகத் தீனதயாளுவைக் கேட்டாள். அதற்கு அவன் "பைத்தியக்காரி! நம்மால் அவர்களுக்குக் குறைவு வந்தது என்பது வேண்டாம். சணற்கால் வீடு இருவருக்கு என்றிருந்தால் அவ்வீட்டின் விலை குறைவுபடும். ஒருவரும் வாங்கமாட்டார்கள். 5-காணி நிலத்தைமட்டும் சங்கு வைத்துக் கொண்டு என்ன செய்வான். அப்பெரும் வீட்டை அவன் விற்று வேருெரு சிறு வீடு வாங்கிக் கொண்டு மிகுந்த பணத்தால் இன்னும் 5, 6-காணி நிலமாவது வாங்கிக் கொண்டாலல்லவோ அவன் காலம் நமது கையைப் பார்க்காமல் நடக்கும். தனியாகப் போனுன் என்றாலும், நம்மிடம் ஒட்டாமலிருக்கிருன் என்றாலும், நம்மால் செய்யவேண்டியதை செய்து விட்டாலல்லவோ உலகம் நம்மை குற்றஞ்

சொல்லாமலிருக்கும். நமது உண்மையான நிலைமையை யாரறிந திருக்கிறார்கள்! நம்மிருவருக்கு மல்லவோ தெரியும். உலகத்தார் தீனதயாளுவுக் கென்ன அவன் உத்தியோகம் பண்ணுகின்றான்! இளையாளையும் அவள் குழந்தைகளையும் ஓட்டிவிட்டான் என்பார் கள். அப்படியில்லாமல் நமது தந்தை சொத்தில் நாம் ஒரு தூசு கூட எடுக்காமல் எல்லாம் அவனுக்கே கொடுத்துவிட்டால் அப்பு றம் அவன் அதிர்ஷ்டம் உள்ளபடி நடக்கின்றது. நம்மை குற்றங் கூறுவதற்குப் பதிலாக உலகத்தார் புகழுவார்கள்,'' என்றான். அத னுடன் பணிமொழியாள் ஒன்றும் ஆக்ஷேபிக்காமல் "தங்களுக்குத் தெரியாதென்று நான் ஒன்றும் சொல்லவில்லை. ஏதோ பெண் புத்தியால் சொல்லத் துணிந்தேன். தாங்கள் எடுத்துக் காட்டும் காரணங்கள் நன்றாக விருக்கின்றன. தங்களிஷ்டப்படி செய்ய யாதொரு தடையுமில்லை'' என்று சொல்லி சந்தோஷமாக இரு ந்துவிட்டாள்.

புன்னையில் இக்குடும்பம் இப்படியாக விருந்தது. பணிமொழி யாள் நமது நோன்பு உண்மையென்ற பக்ஷத்தில் நம்மை என்றென் றைக்கும் ஈசன் கைவிடமாட்டார்! இக்காலம் இப்படியேயிருக் காது! என்று தைரியத்துடன் வறுமையில் வருந்திக்கொண்டிருந் தும் சந்தோஷமாகவே யிருந்தாள். அப்படியே தீனதயாளுவும் தனக்கு எப்படியாவது நல்ல காலம் ஒருபொழுது வந்தே தீரும். நம்மிடம் அதிக அன்பில்லாத ஏணிவாளரே நம்மிடம் மனமிரங்கு வார் என்று நம்பி அக்காலத்தை எதிர்பார்த்தவனாகக் கஷ்டப்பட் டுக்கொண்டிருந்தான்.

## 14. சங்கு பலவிதமாகக் கெட்டது

கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வம்
நீடின்றி யாங்கே கெடும்.

தீனதயாளு இவ்வண்ணம் புன்னையில் பெருந்துயரம் பட்டுக்கொண்டிருந்த காலங்களில் சணற்காலில் அவன் தம்பி சங்கு என்னவானான் என்பதைப்பற்றி விசாரிப்போம். அவனை படிப்பில்லாதவனென்றும் மற்றவிஷயமாய் சகல துர்க்குணங்களோடும் கூடியவனென்றும் சொல்லியிருக்கின்றோம். அவன் வெகு புத்திமான் என்பதற்கு ஐயமேயில்லை! ஆனால் அவன் புத்தி அவ்வளவும் தீயவழியிற் சென்றதேயன்றி நல்ல வழியில் புகவில்லை. கையாந்தகரை தனது தாயைச்செய்த மோசத்தை ஒரு நொடியிலவன் அறிந்துகொண்டான் என்றாலும் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் ஏதோ கலியாணம் செய்து வைப்பதாகச் சொன்னானே, அதைப் பார்ப்போம் என்று வாய்திறவாமல் அதுவரையில் நடந்த மோசத்துக்கு மேல் அதிக நஷ்டம் வராமல் பார்த்துவந்தான். சங்கு வெகு உழைப்பாளி. சிறு பருவத்தில் படிப்பில் கவனம் வைக்காமல் போனானேயன்றி படித்திருப்பானேயானால் அவன் தீனதயாளுவுக்கு மேலான புத்திமானாக விருப்பான். கண்ணைக்கெடுத்த தெய்வம் மதியைக் கொடுக்கும் என்றபடி அவன் படிப்புக்குறைவானது அவன் புத்தியை வியவசாயத்தில் அதிகக் கூர்மையாகச் செய்தது. அவன் தொட்டதெல்லாம் பொன்னாக விளைந்தது. தனது தாய் காந்தி, தங்கை மாந்தி, அவர்களுடன் வெகு க்ஷேமமாக அவன் சணற்காலில் வாழலானான். கையாந்தகரை தான் சொன்ன சொற்படி அவன் விவாகத்தை நடத்தி வைத்தான். பெண் 10-வயதுள்ள சிறு பெண். அவ்விவாகத்துக்கு மரியாதைப்படி தீனதயாளுவும் பனிமொழியாளும் வந்து 4-நாளிருந்து தம்பதிகளை ஆசீர்வதித்துச் சென்றார்கள்.

இவ்வாறு சங்கு கை தீனதயாளு கையைவிடப் பலவிதமாக ஓங்கிற்றென்றே சொல்ல வேண்டும். கடன் ஒரு தூசுகூட சங்குவுக்குக் கிடையாது. குடும்பமோ 4-பெயர்கள் அடங்கிய சிறு குடும்பம். கிராமவாசத்தில் அதிகச் செலவில்லை. கொல்லையில் கீரைப் பாத்தியும் கொட்டிலில் ஒரு எருமையுமிருந்து களஞ்சியத்தில் மாதமிருகல நெல்லுக்குக் குறையாமலிருந்தால் கிராமவாசிக்கு அதிகத் தேவை ஒன்றுமில்லை. நகரவாசிகள் போல வண்ணான், அம்பட்டன், தயிர்க்காரி, பால்காரன், ஒட்டன், கூட்டுகிறவள், வெற்றிலைக்காரி, பூக்காரி, என்று மாதந்தோறும் ரூபா அவிழ்த்துக் கொடுக்க வேண்டாம். இவ்வளவு சுகமாய் தனது தம்பி யிருக்கின்றான் என்பதைக்கேட்டு தீனதயாளு அதிகச் சந்தோஷமடைந்தான். படிப்பில் ஒருவனிருந்தால் விவசாயத்தில் ஒருவனிருக்கவேண்டியது அவசியம்தானே. அதில் நற்காலமவனுக்கு வருமாயின் அது நமக்கும் நல்லது தானே என்று மனம் பூரித்து ஒருவாறு தனது வருத்தத்தையும் சங்கு க்ஷேமமாயிருக்கின்றானென்ற சந்தோஷத்தால் தீனதயாளு மறந்தான்.

கையாந்தகரையின் உண்மையான குணத்தை சங்கு அவனுக்கு எடுத்துக்காட்டி நீங்களிதுவரையில் பந்துவாகவிருந்து எங்களை முன்னுக்குக் கொண்டு வந்தது போதும்! எனது தமையனார் சிரமப்பட்டு சம்பாதித்த பணத்தை இவ்வண்ணம் நீங்கள் அழித்தீர்களே! அப்பாவங்கள் தங்களைச் சூழாமலிருக்க நீங்கள் தவம் புரியுங்கள்! என்று சொல்லி அவனை விலக்கினான். பாகம் பிரிந்த ஒரு வருஷகாலம் சங்கு குடித்தனம் பண்ணினதைப் பார்த்த எல்லாரும் அவனை மெச்சி மகாதேவர் பெயருக்கு ஒருவிதக் குறைவின்றி நடப்பான் என்று எண்ணினார்கள். அவ்வளவு தான் அவன் நற்காலம், என்று சொல்லவேண்டும்.

சணற்காலில் * அகம் படியார் ஜாதியைச் சேர்ந்த ஓர் சிறுமி வெகு பணக்காரியாக விருந்தாள். அவள் 7-வயதில் ஒரு பணக்காரனுடைய ஒரே குமாரனுக்கு வாழ்க்கைப்பட்டுக் குறைபட்டு கைம்பெண்ணானாள். பணத்தின் செருக்கால் அவள் அநேக சிறுவர்களை

* அகம் = வீட்டுக்குள், படியார் = படிந்து வேலை செய்பவர்.

தனக்கிஷ்டமானபடி யெல்லாம் தன்னிடம் சேர்த்துக்கொண்டு உல்லாசமாக விருப்பாள். இவ்வக்கிரமங்கள் ரகசியமாக நடக்கும். ஏதாவது சொற்பம் வெளிக்கு வந்தால் பணத்தைக் கொடுத்து அடக்கி விடுவாள். ரகஸ்யம் ரகஸ்யம் என்று ஊராரெல்லாம் அவளைப்பற்றிப் பேசுவார்கள். பொழுது விடிந்தால் ஆற்றங்கரை சென்று அச்சிறுமி ஸ்நானம் அனுஷ்டானங்கள் எல்லாம் வெகு ஆசாரமாகப் பண்ணி வெண்பட்டு உடுத்துக்கொண்டு வெகு பக்தியுடன் வேதியர்களையும் வணங்குவாள். பொழுது புகுந்தால் சிறுவர்கள் அவள் மனைக்குள் உல்லாசமாக விருப்பார்கள். சங்கு தனது இயற்கைக் குணம் போகாமல் முதலில் சொற்பநாள் நல்லவன் என்று பெயரெடுத்து விட்டு அச்சிறுமியின் வலையில் சிக்கிக் கொண்டான். அவளோ வெகு பெயர்களை வஞ்சித்தவள். சிறிதாவது படிப்பும் புத்தியுமில்லாத சங்குவை வஞ்சிக்க அவளுக்கு எத்தனை நாள் செல்லும்! அவள் பணக்காரி என்றோமே ஆகையால் அவளுக்குப் பணத்தாசையில்லை. புருஷவாஞ்சை மட்டுந் தான். அப்படி யிருந்தபோதிலும் அவளை நாடி நின்ற வாலிபர்கள் கூட்டத்தில் அவன் விழவே அவர்கள் மூலமாக பலவிதப் பணச்செலவுகள் சங்குவுக்கு நேரிட்டன.

காந்தி அவன் நடத்தை மாறியதைக்கண்டு கண்டிக்கலானாள். அவள் பேச்சை ஒரு பொருட்டாக அவன் லக்ஷியம் பண்ணவில்லை. மாந்திக்குத் தகுந்த வயது இதற்கு முன்னமே வந்துவிட்டபடியால் அவள் தனது புருஷன் வீடுபோய்ச் சேர்ந்தாள். சங்குவின் மனைவி வீடுவரக் காலம் சமீபித்ததாகக் காணப்படவில்லை. குலத்துக்கும் பெயருக்கும் கெடுதல் வரக்கூடாதென்று காந்தி சொல்லச் சொல்லச் சங்குவுக்கு ஆவேசம் அதிகமாகப் பொங்கிற்று. காந்தி ஏதாவது சொன்னால் சங்கு அவளை நிந்திப்பான். அப்பொழுது அவள் வாய்மூடாமல் கண்டித்து வரவே, அவளைக் கையை ஓங்கி அடிக்கத் துணிந்தான். தனது வீட்டின் ஒரு மூலையில் ஜடாயுஸ், சம்பாதிபோல வயது முதிர்ந்தவளாக ஒண்டிக்கொண்டிருந்த இரண்டு கிழங்களையும் ஐப்பசி மாதம் அடை மழை காலம் பார்த்து வீட்டை விட்டுச் சங்கு ஓட்டினான். அவனுடைய சொந்தத்தாய்

காந்தியே அவன் செய்த அக்கிரமங்களைச் சகிக்கமுடியாமல் நீ எக்கேடும் கெட்டுப்போ! என் வயிற்றில் நீ பிறந்த போதிலும் நீ என் பிள்ளையல்ல! தெரியாதவிதமாய் என் தீனதயாளுவை நான் வஞ்சித்தேன்! உன்னை நம்பி நான் வீண்பாவம் கட்டிக்கொண்டேன். திரும்பி நானவனிடம் சென்றால் என்னை அவன் கழுத்தைப்பிடித்துத் தள்ளமாட்டான். பனிமொழியாள் கையால் கஞ்சி குடித்தாலும் அது அமிருதத்துக்கு ஒப்பாம்! என்று வாய்விட்டுச் சங்குவிடம் சொல்லிவிட்டு புன்னைக்கோடி விட்டாள். அதுவும் ஒரு நற்காலமென்றே அக்கொடும்பாவி தன்னிடம் அபிமானம் வைத்திருந்த அச்சிறுமியை, வெட்கம் மானம் என்பவைகளை விட்டுத் தன் வீட்டுக்கே அழைத்து வந்து அவ்விடம் வசிக்கும்படி செய்தான். தனது தந்தை கட்டிய வீடு பெரிய வீடாகையால் அச்சிறுமி அதை விலைக்கு வாங்கினாற்போலும் ஒரு சாசனம் பண்ணிப் பதிந்து அம்மனையை அவள் சுவாதீனம் பண்ணினான். அதற்குப் பதிலாக அவள் சிறு மனை ஒன்றைத் தான் சொற்பத்தொகைக்கு வாங்கிக் கொள்வதுபோல் வாங்கி மிருந்த பணத்துக்கு அவள் காணிகளிரண்டையும் வாங்கிக்கொண்டான். அவன் செய்த காரியங்கள் ஒன்றாவது ஒருவருக்காவது பிடிக்கவேயில்லை. அச்சிறுமியு மது வரையில் ஏதோ மறைவாக விருந்தவள் அப்பொழுது *பயிரங்கமாக தான் வாங்கிய வீடாகிய சங்குவின் வீட்டின் நடுவில் வசிக்கலானாள். பணத்தின் ஒத்தாசையால் அவள் சணற்காலில் தானும் ஒரு உத்தமி போல் வாழலானாள். உலகச்சொல்லும் 'மெய்யாயிற்றே:—"பணக்கார அவிசாரி பந்தியிலே; அதில்லாத அவிசாரி சந்தியிலே" ஆகா! எவ்வளவு உண்மை!!

இப்படிச் சங்குவின் நடத்தை மாறியது காந்தியாலும் மற்றவர்களாலும் தீனதயாளு கேள்வியுற்று விசனமடைந்து நமது குலத்தின் பெயரைக் கெடுத்தவனைப் பற்றி நாமினிச் சிந்திப்பதில் பிரயோசனமில்லை. நாம் புத்தி சொன்னாலும் அது பயன்படாது, என்று ஒதுங்கிவிட்டான். பெற்ற மனம் பித்து என்ற பழமொழிப்படி காந்தி அடிக்கடி தீனதயாளுவை வேண்டுவாள். இரண்டொரு முறை தீனதயாளு ஒரு அத்தியாயம் கடிதமெழுதிப் பார்த்

தான். அக்கடிதங்களுக்கெல்லாம் சங்கு அப்படித்தான் ஒருபொழுதும் நடக்கப்பட்டவனே அல்லனென்றும், வீண் அபவாதம் என்றும் அதைத் தன் தமையன் நம்பக்கூடாதென்றும் வெகு வணக்கமாக மறுமொழி எழுதினான். சங்குவின் நடத்தை மாறுபடவே அதனுடன் பொய், சூது முதலிய துர்க்குணங்கள் யாவும் அதிகமாக அவனிடம் வந்துவிட்டன. அப்படி அவன் கெட்டுப் போன பிறகு அவனுக்குப் புத்திபுரைப்பதும் பிசகு என்று தீனதயாளு ஒதுங்கிவிட்டான்.

இவ்வளவுடன் இக்காரியம் நிற்குமா. வீடு விற்றதால் சங்குவுக்கு முதல் முதலில் ஒருவித நஷ்டமுமில்லை. இவன் பிறகு சிறுகச் சிறுகத் தனது நெறிநீங்கிய தோழர்கள் புத்தியின்படி, தனது காணி முதலியவைகளை விற்றான். சாயங்காலமிருந்து இரவு தப்பாமல் தனது தோழர்களுடன் புறப்பட்டு சங்கு பெருஞ் சீரக வல்லிக்கு நாடகம் பார்க்கப்போவான். அங்கு கண்டவைகளெல்லாம் வாங்குவான். வரும்பொழுது தனது அன்பான சிறுமிக்கு இரண்டொரு ரூபாவுக்கு நெய்யில் சுட்ட பணியாரங்கள் வாங்கி வருவான். இவ்வாறாக ஒருவருக்கும் அஞ்சாமல் சங்கு தனது போக்குப்படி எல்லாவித அக்கிரமங்கள் செய்து பொருளெல்லாமிழந்து தனது தேகத்தையும் பலவித நோய்களுக்கு உள்ளாக்கி உடம்பு கருத்துத் துரும்பாய் வாடி வதங்கினான். அவ்வளவு அவஸ்தைக்குப் பிறகு தான் சங்குவுக்குத் தனது உண்மையான ஸ்திதி வெளிப்பட்டது. தன் வீடும் பூமியும் போய் ஒரு சிறுவீடும் 1-காணி நிலமும் அப்பொழுது அவ்வளவையாவது தன் வசத்திலிருந்து நீங்கிப் போகாமல் வைத்துக் கொண்டால் பிழைக்கலாம் என்று நினைத்து தனது பிழையைப் பொறுக்கும்படி காந்திக்கும் தீனதயாளுக்கும் எழுதினான். அவர்களிவனை மதித்து பதில்கூட போடவில்லை. தீனதயாளுமட்டும் வெகு ரகஸ்யமாக வேங்கையூர் வைத்தியருக்கு ஒரு கடிதம் எழுதி சங்குவின் தேகத்தைப் பிணியிலிருந்து நீக்கி வைக்கும்படிக்கும் அதற்கு வேண்டிய செலவு தான் கொடுப்பதாகவும் தெரிவித்தான். அவரும் தீனதயாளுவின் கம்பீர குணத்துக்கு வியப்புற்றுச் சங்குவை அழைத்து வைத்தியம் முதலியவை பண்ணி ஒருவாறு உருவாக்கிவிட்டார்.

சங்குவை அந்த ஸ்திதிக்கு கொண்டுவந்து விட்ட அச்சிறுமியே அவன் தேகம் மெலிந்ததும் செங்குழம்பு பிழிபட்ட பஞ்சை சுழற்றி எறிவதுபோல் சங்குவை தன்னிட மிருந்து அகற்றிவிட்டாள். கேட்பதற்குக் காது கூசுகின்றவும் பாவமுமான இவ்விருவர்கள் சரித்திரத்தை யினி அதிகமாகச் சொல்வதில் என்ன பிரயோஜனம். சொற்பம் தனது தேகம் தேறியதும், சங்கு வெட்கின முகத்துடன் புன்னை வந்து சேர்ந்தான். அவன் சங்குவென்று அவனுடைய அடையாளம் ஒருவருக்காவது தெரியவில்லை. எப்பொழுதும் இரக்கமுள்ள தீனதயாளு தனது வீட்டுக்குள் நுழைந்து தனது தம்பி அவ்வாறு மெய் ஒடுங்கி வருவதைக் கண்டு மனம் வாடிக் கண்ணீர் வடித்தான். தாயுமாத்திரம் தீனதயாளுவைத் தனிமையில் அழைத்து "அப்பா, சங்குவை நீ சேர்க்காதே. அவனுக்கு ஏதாவது பொருளுதவி செய்வதாக விருந்தால் அதைச் செய்து அவனை ஊருக்கனுப்பிவிடு. ஏனெனில் அவன் நடத்தை என்றைக்கு அழிந்ததோ அன்றைக்கே அவன் மரியாதை யிழந்தவன். உன் சமீபத்தில் மட்டு மவனிருந்தால் உன் பெயருக்கும் புகழுக்கும் அழுக்குண்டாகும்" என்றாள். தீனதயாளு சங்குவைப் பார்த்து "அடா சங்கு! நீ செய்த அவ்வளவு குற்றங்களையும் நான் எப்படியோ சகித்துக்கொண்டேன். அக்கிழங்களோ இன்றைக்கோ நாளைக்கோ என்று தங்கள் உயிர்களைத் தங்களுடைய உயிர்களாக எண்ணாமல் பழுத்துத் தொங்கும் பழங்கள்போல் கீழே விழக்காத்துக்கொண்டிருக்கின்றன. அவைகளை வீட்டைவிட்டு ஓட்டினாயே அப்பாவம் பொல்லாததாயிற்றே! நான் என் நண்பனாகிய கண்ணுச்சாமிக்கு எழுதாமலிருந்தால் அக்கிழவிகள் கதி என்னவாக விருக்கும், எனக்காக அவனல்லவா அவ்விருவருக்கும் வீடு கொடுத்து ரக்ஷித்து வருகின்றான்" என்றான்.

அதன் பிறகு தாயு சொன்ன சொல்லை நன்றாக ஆலோசித்துப் பார்த்து தீனதயாளு தானும் புன்னையை விட்டுப் புதுவேர்க்காட்டுக்கு பெரிய உத்தியோகத்தில் மாற்றலாய் போகும்படி உத்தரவு வந்திருந்தபடியால் சங்குவை நோக்கி "அப்பா! நான் இன்னும் ஒரு வாரத்தில் இவ்விடத்திலிருந்து 20 காதவழிக்கப்பாலுள்ள புது

வேர்க்காடு போகின்றேன். அங்கு உன்னுடம்புடன் நீ வருவது நியாயமன்று. நீ நடத்திய மரியாதைக்கு உன்னுடன் உன் தாயாரை நான் மறுபடி சணற்காலுக் கனுப்புவதும் நியாயமே யில்லை. அப்படி யிருந்தபோதிலும் இனி நீ பிழைக்க உன் தேகத்தை ஒருவர் யாராவது உன் கூடவே யிருந்து பார்க்க வேண்டியது அவசியமாகையால் காந்தியையே உன்னுடன்கூட அனுப்புகின்றேன். உங்கள் செலவுக்கு மாதம் 10-ருபா அனுப்புகிறேன். இதை வைத்துக்கொண்டு நிலத்தில் வரும் வருமானத்தையும் வைத்துக்கொண்டு இனியாவது மானமாகப் பிழைப்பாயானால் இன்னுமொரு தடவை நீ வந்தால் நானுன்னை என் பந்துவாக வெண்ணி உன்னிடம் பேசுவேன். இல்லாவிடில் நீ வேறு நான் வேறு. கொஞ்சமேனும் உன்னைக் கண்டு மனமிரங்கவே மாட்டேன். காந்தியிடம் நான் சொல்லியிருக்கின்றேன். எந்த நிமிஷம் நீ அவளை மரியாதைக் குறைவாக நடத்த எத்தனிக்கிறாயோ அந்த நிமிஷம் அவள் உன்னை உதறிவிட்டு என்னிடம் வந்துவிடுவாள். அப்புறம் உன் முகத்தில் ஒருபொழுதும் விழிக்கவே மாட்டாள்" என்றான்.

காந்தி முற்காலத்தில் இருந்தபடி யில்லாமல் அப்பொழுது தீனதயாளுவினிடம் வெகு அன்பாயும் அவன்தான் மரியாதையுள்ள தன் பிள்ளையென்றும் எண்ணி ஒட்டிக்கொண்டிருந்தாள். தீனதயாளுவுடன் கூட அவன் காடு சென்றாலும் சந்தோஷமாய் அவன் குழந்தைகளை ஆதரித்துக்கொண்டு செல்லப்பட்டவளாக இருந்தாள். பொருளாசை யெல்லாம் அவளுக்கு அடங்கிவிட்டது. எங்கிருந்தாவது தனக்கு ஏதாவது தனம் கிடைத்திருக்குமாயின் அத்தனத்தை தீனதயாளுவிடம் இதோ எடுத்துக்கொள் என்று ஒரு தூசு ஒளியாமல் அவள் கொடுத்திருப்பாள். அப்படிப்பட்டவளை சணற்காலுக்குப்போ என்றால் அவளுக்கு எவ்வாறு மனம் வரும். சங்கு என்பிள்ளை யல்லன். சணற்காலும் எனக்கினி கிராமமல்ல! அது சுடுகாடு, என்னைக் கைவிடலமா என்று அவள் தீனதயாளுவிடம் வெகு பரிதாபமாகச் சொல்லி, பனி மொழியாளிடம் சென்று "நீ எங்குப்போனாலும் நானுன்னுடன், வருவேன்; உன் யஜமானிடம் சொல்" என்றாள். தீனதயாளு காந்தியை நோக்கி வெகு தர்மமாக பல புத்திகள் சொல்லித் தான் ஒருபொழு

தும் மனப்பூர்வமாகத் தனது சிறு தாயார் தன்னை விட்டுப்போகக் கருதி அவ்வேற்பாடு செய்தவனல்ல வென்றும், சங்குவை நல் வழிக்குக் கொண்டுவர வேண்டியே அவ்வளை மறுபடியும் சணற்கா லுக்கு அனுப்பி அவன் உடம்பும் தேறி அவன் மனைவியும் வீடு வந்த பிறகு ஒரு நிமிஷமாவது தாமதிக்காமல் காந்தி தன்னிடம் வந்து விடலாம என்று நற்புத்தி சொல்லி அவளையும் சங்குவையும் சணற்காலுக் கனுப்பினான். மாதம மாதம் கிழங்களுக்கு 7-ரூபா அனுப்புவதுடன் இவர்களுக்கு 10-ரூபா அனுப்புவதாக ஒப்புக் கொண்டான். முற்காலத்தில் பணம் போதாதென்று எப்பொழுது பிடிவாதம் பண்ணி அதிக ரூபா மேன்மேலும் அபகரித்த அதே காந்தி "அப்பா, இவ்வளவு கடனும், செலவும், குழந்தைகளும் வைத்துக்கொண்டு நீ எப்படி எங்களுக்கு 10-ரூபா அனுப்புவாய். முதல் முதல் 10-ரூபா அனுப்பு. அதை நான எத்தனை நாள் வைத் துக்கொண்டு செலவிடலாமோ அத்தனை நாள் செலவிட்டுப் பார்க் கின்றேன். மாதம் 6-ரூபா யிருந்தால் போதும" என்று சொல்லலானாள்.

அவ்வாறு ஒருவித ஏற்பாடு செய்துவிட்டு தீனதயாளு தனது குடும்பசகிதம் புதுவேர்க்காட்டுக்கு பிரயாணப்பட வேண்டிய முய ற்சிகளைச் செய்யலானான். அந்தக் காரணத்தை அடுதத அத்தி யாயத்தில் விசாரிப்போம்.

## 15. தெய்வம் கண்திறந்தது

> தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
> தோன்றலிற் றோன்றாமை நன்று.

தீனதயாளுவுக்கு புதுவேர்க்காட்டில் பெரிய உத்தி யோகமாவதென்ன. இதைச் சற்று விசாரிப் போம்.

பலவிதமாய் வணிவாளன் தீனதயாளுவைப் பரி சோதித்துப் பார்த்தான். தனது சுறுசுறுப்பா லும் வித்தையின் பலத்தாலும் அவ்வளவுக்கும் தீனதயாளு ஈடுகொடுத்து வந்தான். புன்னை நகரிலிருந்து 200-மைல் தூரத்தில் தெலுங்கு தேசத்தில் புது வேர்க்காடு என்ற பட்டணமொன்றுண்டு, அது எபபொழுதும் வெகு செழிப்பாக விருந்தபட்டணம். ஏதோ காரணத்தால் அந் தத் தேசததில் க்ஷாமம் வந்தது. ஏழை ஜனங்கள் பெரும்பாலும்

பிழைக்க வழியில்லாமல் ஓடத் தலைப்பட்டார்கள். பசியின் கொடுமையால் பலர் மாண்டார்கள். இவ்வித கஷ்டங்கள் அங்கு உண்டாகவே, ராஜாங்கத்தார் மனமிரங்கி ஏழை ஜனங்களுக்குப் பஞ்சம் தெளிகின்ற வரையில் கஞ்சி வார்க்கத் தர்மசத்திரம் ஏற்படுத்தினார்கள். அதில் அமர்ந்த உத்தியோகஸ்தர்கள் தங்கள் சொந்த க்ஷேமத்தையே பெரியதாக வெண்ணி ராஜாங்கத்தாரிடமிருந்து கிடைக்கும் பணத்தில் 4-ல் ஒன்றை கஞ்சிக்குச் செலவிட்டு மிகுந்த பணத்தை எடுத்துக்கொண்டு தங்கள் மனைவிகளுக்கு நகை பண்ணுவதிலும் காணி பூமி வாங்குவதிலும் செலவிட்டார்கள். இவ்வநியாயங்கள் எத்தனை நாள் நடக்கும்! ராஜாங்கத்தார் இவ்விஷயமாய்விசாரணை பண்ணி அப்பாதகர்களைத் தண்டித்தார்கள். அன்றியும் கஞ்சித்தொட்டி தர்மத்தைச் சரியாக வைக்க வெகு யோக்கியனான உத்தியோகஸ்தன் ஒருவன் வேண்டுமென்று புன்னைக் கெழுத, புன்னையிலிருந்த பெரிய உத்தியோகஸ்தர்கள் தீனதயாளுதான் சரி என்று அவனைக் குறிப்பாக எடுத்து அவ்வுத்தியோகத்திற்கு சிபார்சு பண்ணியனுப்பினார்கள்.

இவ்வதிகாரத்தில் தீனதயாளுவுக்கும் மாதம் 300 ரூபா சம்பளம். இதுவும் நமது நற்காலத்துக்கு ஒரு அடையாளம். ஏழைகளை நம்மக்கட்போல் காப்பாற்றுவதால் நமக்கு ஈசன் அருளுமுண்டாகும் என்று தீனதயாளு கருதி வெகு சந்தோஷமாக தனது குடும்ப சகிதம் புதுவேர்க்காடு சென்றான். அவன் வெகு பரிசுத்தன். பூததயை அதிகமாகவுள்ளவன். அவன் அந்தணன் என்றாலும் பள்ளுபறை முதலிய எல்லா ஜாதியாரிடமும் இரக்கமு மன்புமுள்ளவன். தான் ஒப்புக் கொண்ட காரியத்தை வெகு தர்மகாரியமாக வெண்ணி அந்த விஷயமாகச் செலவுக்கு வரும் பொருளை ஒரு தூசுகூட ஒளியாமலும் வீண் செலவு செய்யாமலும் சரியாய்ச் செலவிட்டும் பட்சபாதமின்றியும் வித்தியாசமின்றியும் எல்லா ஏழைகளுக்கும் சரியாகக் கஞ்சி வார்த்து அவர்கள் பசியை ஆற்றி அவர்களால் புகழப்பட்டான். எல்லா ஏழைகளுமவனைத் தெய்வமென்றே எண்ணினார்கள். சந்தோஷத்துடன அவரவர்களுடைய வேண்டுதலை விசாரிக்கும் இவ்வுத்தமனைக் கண்டால் எல்லா ஏழை ஜனங்களும் தங்கள் தந்தை தாய்களைக் கண்டது போல உல்லாசத்துடன் பேசுவார்கள். ராஜாங்கத்திலுள்ள மேலதிகாரிகள், அவன் செய்த ஏற்பாடுகளையும், அவன் வைத்த கணக்குகளின் அழகையும், எல்லா ஜனங்களும் ஒரே விதமாய் அவனைப் புகழும் புகழையும் பார்த்தும் கேட்டும் அவனிடம் ஆச்சரியமடைந்து இவ்வளவு யோக்கியதையும் ஞானமுமுள்ள உத்தம உத்தியோகஸ்தன் கிருக்கும் கச்சேரியில் எணிவாளனிடம் சிக்கிக் கொண்டிருந்ததை நினைத்து வருத்தப்பட்டார்கள்.

தீனதயாளுவின் குணத்தின் மகிமையோ! மற்ற எந்தக் காரணமோ! அவன் புதுவேர்க்காடு சென்ற 2 வருஷத்துக்குள் பஞ்சம் முற்றிலும் தெளிந்து விட்டது. ஸப்த மேகங்களும் கூடி வருஷிப்பனபோல் மிக்க மழை பொழிந்து நாடெங்கும் செழிக்கலாயிற்று. ஏழை ஜனங்களும் கஞ்சித்தொட்டி ஏற்படுத்தப்பட்டிருந்த இடத்தை விட்டுக் கலைந்து தங்கள் தங்கள் ஊருக்குச் சென்று கிருஷி முதலிய தொழில்களில் அமர்ந்தார்கள். பஞ்சம் தெளிந்ததும் ராஜாங்கத்தார் தீனதயாளுவை கொச்சி சமஸ்தானத்துப் பேஷ்காராகப் பண்ணி மாதம் 1000 ரூபா சம்பளம் ஏற்படுத்தி யனுப்பினார்கள். இனி அவன் பாக்கியத்திற்குச் சொல்லவும் வேண்டுமா. நற்பிறப்பில் பிறந்து வித்தையின் அவதாரமாகிய தீனதாயளு தனது மேலான குணங்களால் எல்லாருக்கும்நல்லவனைகப் பெயரெடுத்தான். தனது பந்துக்களை ஒருவர் விடாமல் தன்னிடம் சேர்த்து வைத்துத் தனது காம்பீரியத்தால் அவர்கள் மனம் வருந்தாமல் நடந்தான். முதலில் சொற்பம் சிரமப்பட்டு பொருள் சேர்த்து தனது தந்தை மகாதேவர் போன காலத்தில் தனது பிதுரார்ஜிதம் என்று ஏற்பட்டிருந்த நிலங்களையும் பூமிகளையும் மீட்டுக்கொண்டான். தனது தம்பி யிழந்த வீட்டையும் வாங்கினன். அதில் சங்குவையும் அவன் மனைவியையு மிருத்தி வியசாயம் பார்க்க ஏற்பாடு செய்து, காந்தி, மற்றக் கிழவிகள் எல்லாரையும் தன்னிடம் தரிவித்துக் கொண்டான். சங்குவுக்கும் நற்புத்தி வந்து விட்டபடியால் தன் தமையனிடம் அடங்கி அவனுக்குக் கீழ்படிந்து தனது துர்நடத்தைகளைவிட்டு முற்றிலும் நீங்கினவனாய் நல்வழியில் நடந்தான். மாந்திக்கு ஒரு விதக் குறைவின்றி நடந்து அவள் புருஷனுக்கும் பெரிய வேலைகளும் பண்ணிக் கொடுத்தான். தீனதயாளுவின் குழந்தைகளெல்லாம் தங்கள் சிறுமையை விட்டுநீங்கிக் கவலையற்றுப் படித்து வித்வான்களானார்கள். அவன் கொள்கையெல்லாம் எல்லாருக்கும் சரியாய் வித்தையைப் பயின்று கொடுத்து தாங்கள் சொந்தமாக சம்பாதித்து முன்னுக்கு வரும்படி செய்யவேண்டியதுதான் ஒவ்வொருவருடைய கடமை என்பதேயாம். பனிமொழியாள் கற்பின் மகிமையாலும், தீனதயாளுவின் கம்பீர குணங்களாலும் அக்குடும்பம் அவ்விதமாய்ச் சிறப்படைந்தது.

> அன்பறிவு தேற்ற மவா வின்மை யிந் நான்கு,
> நன்குடையான் கட்டே தெளிவு.

என்றபடி இந்நான்கு குணங்களும் தீனதயாளுவிடம் நீங்காமலிருந்த படியால் அவனுக்கு ராஜாங்கத்தில் எப்பொழுதும் அதிக கீர்த்தி யுண்டாய் அவன் புகழை எங்கும் பரவச் செய்தன.

ஃபே ரமித்திரன் [illegible] பிரஸ், சென்னை

MARAIMALAI